1033

தமிழரசு

OFFICE OF THE REGISTRAR OF INDIA
17 AUG 1933
MADRAS

ஆவணி மீ

1033

அ 1 ணா

பொருள் அடக்கம்

1. கடவுள் வணக்கம் ... 481
2. காந்திஜீயும் காங்கிரசும் (நமது தலையங்கம்) ... 482
3. சென்குப்தா மறைவு ... 486
4. மீனாட்சியம்மன் பேசிய விந்தை ... 491
5. கல்கியின் நினைவுகள் ... 494
6. பொருள் போன கோலம் 497
7. பஞ்ச தந்திரம் ... 501
8. 'ஏழை வழிப்போக்கிப் பிராமணரின் சிரார்த்தம்' 505
9. சாவின் சமத்துவம் (பாட்டு) 512
10. இந்திய இராணுவ இனங்கள் 513
11. பி. ஏ. ('புதுமை') ... 518
12. ஓரிரவில் மூன்று கொலை 523
13. ஹிந்துஸ்தானத்தின் வீழ்ச்சி ... 528
14. நகைச் சுவை ... 530
15. வெளி விகடம் ... 533
16. பெண்டாட்டி பூஜை ... 535
17. இருந்தும் இடைஞ்சல் இறந்தும் சனியன் ... 540
18. 'அட எமனே! கடன் கொடு' ... 545
19. தாசிகளும் தாசிகாந்தர் களும் (நாடகம்) ... 550
20. மதிப்புரை ... 556

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு ரூ	1—0—0
	பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு	2—0—0
	ஜீவிய சந்தா	20—0—0
	தனிப் பிரதி விலை	0—1—0
	மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது	0—2—0

மாதிரி சஞ்சிகை இனாம்.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வோரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்

விளம்பர விகிதம்

உட்பக்கம் ஒன்றுக்கு		1-மாதத்திற்கு	ரூ. 10—0—0
,,	அரைப் பக்கத்திற்கு	,,	6—0—0
,,	கால் பக்கத்திற்கு	,,	4—0—0
கவர்	3-வது பக்கத்திற்கு	,,	15—0—0
,,	4 ,,	,,	20—0—0

இதர விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

'தமிழரசு' ஆபீஸ்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

500 ரூபாய் பரிசு

OFFICE OF THE REGISTRAR OF ...
17 AUG 1933
MADRAS

வாசகர்களே!

இம்மாதத் 'தமிழரசு'

பத்திரிகையைப்

பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இப்பிரதி

அடுத்த மாதம்

ஐந்நூறு ரூபாய்

பரிசை உங்களுக்கு

அளிக்குமாறு

செய்யும்.

அரியதோர் சந்தர்ப்பம்

இழந்துவிட வேண்டாம்!

ஜாக்கிரதை! ஏமாந்து போகாதீர்கள்!!

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
204527.
சென்னை

சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கை கால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு

முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக்கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரிலுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றுள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30 }

இப்படிக்கு.
அண்ணுவையங்கார்.

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்தித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடைச்சலினல் அனேக நாளாய்க் கஷ்டப்படுகிருள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,
கீழ்வீதி சீனிவாச ஐயங்கார்,
சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.



அயத்தங்க
திராவகம்

நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்திலுலாவது அல்லது வேறு எந்த சுரத்திலுலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வ மெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலே, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பாலியர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப் படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 1 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக !

தங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்திய னாதலால் விலை குறைவு செய்து அனுப்பினால் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமாகனும் மாவேணுதலால் அதை யனுசரித்த அரை டஜன் பத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்பவேண்டுகிறேன்.

S V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்த திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன் ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன் எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினால் குணக்கேடு உண்டாமதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலம் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன் ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பும்.

இங்ஙனம்

-6—30, கண்ணபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

நான்மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணா 12.

தபால் கூலி பிரத்தியேகம்.

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.

மென்தா மவுத்வாஷ்

இம் மருந்தானது வாயிலுள்ள நோய், ஈர்வளர்த பல்வலி, இரத்தம் கொட்டல், சீழ் வருதல், வாய் நாற்றம் வைகளைப் போக்கிச் சதா வாயுக்குக் கம கம வென்ற ஒருணத்தைக் கொடுக்கும். 4-மாதம் உபயோகிக்கக் கூடிய மருந்து ரூபா 2.

தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயிபாட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5-நிமிஷத்தில் தலைவலி நீ. தவிர உடம்புவலி கை கால்வலி இவைகள் போம். எத்தகையானலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வைட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அப்படும். இம் மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை .8.

கூழ்ப்பாண்ட லேகியம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 AUG 1933
MADRAS

இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புருக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல்

யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும், சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தாக்கூடியது.

சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, கூழ்ப்பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வாராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச்சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள்வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M. C. நஞ்சுண்டராவ். B. A, M B. &. C. M மைலாப்பூர்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கும் ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தை பெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தம் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

ஒரு பவுன் விலை ரூபா 2.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்'...

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர் 4	ஸ்ரீமுகஞு ஆவணிமீ 1உ 1933ஞு ஆகஸ்டுமீ 16உ	இதழ் 8

நாட்டு வணக்கம்

'எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தி யென் வாயுற வாழ்த்தேனோ—இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம் என்று வணங்கேனோ'

—பாரதியார்.

குறிப்பு:—'தமிழரசில்' வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப் பட்டன வாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.

காந்திஜீயும் காங்கிரசும்

காலஞ் சென்ற சுரேந்திரநாத் பானர்ஜி, கோபால கிருஷ்ண கோகலே, தாதாபாய். ஆனந்த மோஹன போஸ், ராஷ் பிஹாரி கோஷ், சித்த ரஞ்சன தாஸர் முதலிய பெரியோர்க ளெல்லாம் அகில இந்திய தேசிய காங்கிரசில் தொண்டு புரிந்து வந்தார்களே யாயினும், சபையானது அக்காலத்தே ஜீவசக்தியுடையதா யில்லை. வெறும் சொற்போர்ச் சங்கமாகவே காங்கிரசை அரசாங்கம் அப்போது கருதி வந்தது. லோக மான்ய பால கங்காதர திலகர் 1907-இல் நடந்த சூரத் காங்கிரசில் நவீன முறைகளைப் புகுத்தப் பாடுபட்டார். ஆனால் அக் காங்கிரசோ மிதியடித் திருவிழாவுடன் பூர்த்தி பெற்றது.

காலம் மாறியது. கரம்சந்திர மோஹனதாஸ் காங்கிரசில் சேர்ந்தார். காங்கிரசின் புதிய சகாப்தம் அன்றைய தினத்திலிருந்துதான் ஆரம்பமாகிய தென்னலாம். சபை சக்தி பெற்றது. அதன் அங்கத்தினர்கள் தட்டி யெழுப்பப் பட்டார்கள்; வேலை செய்யத் தொடங்கினார்கள். ஒத்துழையாமை இயக்கமும் இந்தியாவில் முதன் முதலாக உதயமாகியது. அரசாங்கம் அதைக் கண்டு நடுநடுங்கிப் போயிற் றென்பதற்கு மறுக்க முடியாத சான்றுகள் பல உள. ஆயினும் ஒத்துழையாமை இயக்கம் தோல்வி யடைந்தது. தேச மக்கள் அவ் வியக்கத்தை அப்போது கையாளத் தகுதி யற்றவர்களா யிருந்ததே அதற்குக் காரணமாகும்.

வருடங்கள் சென்றன. லாகூரில் கூடிய காங்கிரஸ் பூரண சுயேச்சைத் தீர்மானத்தை நிறைவேற்றியது. தேச மக்க ளெல்லாம் தீர்மானத்தை ஆமோதித்தார்கள். சட்ட மறுப்பும் ஆரம்பிக்கப் பட்டது. லக்ஷக்கணக்கான இந்திய வீரர் யுத்த ரங்கத்திற்கு மார்பு தட்டி முன் வந்தனர். அநேகர் களப்பலியாயினர்; அநேகர் பொருள்

இழந்தனர்; அநேகர் தம் தாய் நாட்டை இழந்தனர். அவர்கள் செய்த தியாகங்கள் நம்மால் அளவிட முடியாதனவாகும்.

இதற்கிடையில் மகாத்மாஜீயால் ஹரிஜன இயக்கம் மீண்டும் தொடங்கப்பட்டது. பூரண சுதந்திரம் அடைவதற்கு நாம் தகுதியுடையவர்களாக வேண்டுமானுல், முதலில் நமது மூட வருணச்சிரம தருமங்கள் உடைத்தெறியப்படவேண்டும்; நம்மால் அநேக வருஷகாலமாய் நசுக்குண்டு வந்திருக்கும் ஹரிஜனங்களுக்கு நீதி வழங்கப் படவேண்டும்; அவர்கள் தாழ்த்தப்பட்ட நிலை தகர்த் தெறியப்படவேண்டும், என்னும் கருத்துக்களைத் தீவிரமாக ஆராய்ந்த பின்னரே மஹாத்மாஜீயால் ஹரிஜன இயக்கம் வலுப்படுத்தப்பட்டது. இதற்காக மஹாத்மாஜீயை அநேக மேதாவிகள் குறை கூறினர்கள். இம்மேதாவிகளைப் பற்றி நாம் கவலைப்படவே வேண்டியதில்லை.

மஹாத்மாஜீ சிறையி னின்றும் வெளி வந்தார். பூனு மகாநாடு கூடியது. காங்கிரஸ் கலைக்கப்பட்டது. ஏகோபித்த சட்ட மறுப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

ஆஹா! காந்திஜியை மடையனென்றும், காங்கிரசைக் கலைக்க வந்த கரிகாலன் என்றும் இப்போது ஏகமனதுடன் இந்திய தேசியப் பத்திரிகைகள் ஓலமிடுகின்றன. இவைகளைக் கண்டு நாம் அழுவதா? சிரிப்பதா? என்று கூட நமக்குத் தெரியவில்லை. சுபாஷ் சந்திரபோசும், காந்திஜியைத் 'தோல்வியடைந்து விட்டார்' என்று கூறுவதைக் கண்டு நாம் ஒரு சிறிதும் வியப்படையவில்லை. சுபாஷ்போசை நாம் நன்கு அறிவோம். அவர் தீவிர தேசபக்தர் என்பதை ஒருவரும் மறுக்கத் துணிய முடியாது. மகத்தான தியாகி என்பதையும் நாம் மறுக்கவில்லை. ஆனுல் மஹாத்மாஜீயின் சொந்த யோக்கியதைகளுக்கும், சுபாஷ்போசின் யோக்கியதைகளுக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. மஹாத்மாஜீயை அறிந்துகொள்ள முடியாமல் திகைக்கும் மனிதர்களில் திரு—சுபாஷ்சந்திரபோசும் ஒருவர் என்று கூறி இவரைப்பற்றி இத்தோடு நிறுத்திக்கொள்ளுவோம். இனி நமது கருத்தை விளக்குவோம்.

(1) காங்கிரஸ் என்பது இந்தியதேசத்தை முழுவதும் குறிக்கின்றது என்று கூறிவிட முடியாது. இந்தியாவில் மிகவும் அதிகமான மதிப்பும் செல்வாக்கும் பெற்ற சபை காங்கிரஸ் ஒன்றுதான் என்று சொல்ல முடியும்.

(2) இந்த காங்கிரசில் இருப்போரில் பலர் தீவிர சத்தியாக்கிரகிக ளல்லர். இதைக் கூறும்போது நீங்கள் திடுக்கிட்டு விடலாம். ஆயினும் நாம் இதைக் கூறவேண்டியது அவசியமா யிருக்கின்றது.

மகாத்மா காந்தியடிகள் தமது உயிரினும் அரியதாய் நினைத்துவந்த சபர்மதி ஆசிரமத்தையும் துறந்து, ஆசிரம அன்பர்களோடு வெளியேறிய காட்சி.

['தமிழ் நாடு' அன்போடு உதவியது]

(3) சத்தியாக்கிரகிகளில் பலர் சட்டமறுப்புப் போருக்குச் சிறிதும் யோக்கியதை யற்றவர்கள். இவர்கள் காங்கிரஸ் சபைகளில் செய்துவரும் அக்ரமங்கள்—காங்கிரஸின் பெயரால் செய்து வரும் அட்டூழியங்கள் நம்மால் கூற முடியாதவைகள். இவர்கள் செய்யும்

காம லீலைகள் இயக்கத்தின் புனிதத்தன்மையைக் கெடுத்து விடுகின்றன.

(4) சில காங்கிரஸ் வாதிகள் மேலுக்கு மஹாத்மாஜீயையும், அஹிம்ஸையையும் போற்றுகின்றனரே ஒழிய, உள்ளுக்குள் மஹாத்மாவைத் திட்டிக்கொண்டும், ஹிம்ஸையை ஆதரித்தும் வருவதாகத் தினசரிகள் மூலமாகத் தெரிய வருகின்றது. இது மிகவும் கேவலம். இத்தகையோர் இந்திய விடுதலைக்குப் பெருத்தத் தடைக் கற்களா யிருக்கின்றனர். இவர்கள் தேசிய வாழ்வி னின்று விலகி விடுதலே நலம் என்பது நமது அபிப்பிராயம்.

(5) காங்கிரஸ் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருக்கும் ஸ்தாபன மாதலால், காங்கிரஸ் செய்கைகளை இரகசியமாகவே நம்மால் செய்ய முடிகின்றது. இது சத்தியாக்கிரகத்தின் தர்மத்திற்கே—கொள்கைக்கே—விதிக்கே பெருத்த விரோதம். இவ்விரகசிய முயற்சிகளில் பல அக்ரமங்களும் நடக்கலாம்.

(6) சத்தியாக்கிரகப் போருக்கு ஆட்பலம் அதிகம் வேண்டியதில்லை. டென்னிஸன் என்னும் மேனாட்டுக் கவிஞன், 'ஆர்தர் அரசனின் வட்டமேஜை வீரர்கள்' என்ற சரித்திரத்தை வர்ணிக்கையில், 'நான் ஒருவன் தான்; ஆயினும் பதின்மருடைய பலம் எனக்குண்டு; ஏனெனில் என் ஹிருதயம் மிகவும் பரிசுத்தமானது' என்று வர்ணிக்கின்றான். ஆகவே பரிசுத்தமான ஹிருதயங்களையுடைய பதின்மர் இருப்பினும் ஹிந்துஸ்தானம் விடுதலை பெற்றுவிடும் என்பதே எமது உறுதி. எனவே இனி ஒவ்வொரு இந்தியனும் தன்னைப் பரிசுத்தவானாக்கிக் கொள்ள வேண்டும்.

மேற் கூறிய காரணங்களினாலேயே மஹாத்மாஜீ காங்கிரசைக் கலைத்து விட்டார். ஏகோபித்த சட்ட மறுப்பு நிறுத்தப்பட்டு விட்டது. இனி காங்கிரசின் பெயரால் இந்திய சுதந்திர யுத்தம் நடைபெறாது. அது தேசத்தின் பெயராலேயே நடைபெறும். 'காங்கிரஸ்காரன் சட்ட மறுப்பு செய்கிறான்' என்று இனி அரசாங்கமும் சொல்ல முடியாது; நிதானக்கட்சியாரும் சொல்ல முடியாது. இந்தியன் சட்டத்தை மீறுகின்றான் என்றே அனைவரும் இனி கூறுவர். இந்தத் தேசப் போருக்கு மஹாத்மாஜீயும், மகாதேவ தேசாயும் முதன் முதலாக பலியாகிவிட்டனர். மஹாத்மாஜீ தேசப்

போரை நிறுத்திவிடவில்லை. இவ்வாறு கூறுவோர் விஷமிகளேயாவர்.

எந்த வீர புருஷனால் காங்கிரஸ் முன்னணிக்கு வந்ததோ—எந்த மஹானால் காங்கிரஸ் சர்வ வல்லமை யுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தை நடுநடுங்கச் செய்யும் வல்லமை பெற்றதோ—எந்த வள்ளலால் காங்கிரஸின் பெயர் உலக சரித்திரத்தில் எழுதக் கூடிய நிலைமை யடைந்ததோ—அந்த மஹாத்மாவாலேயே அக் காங்கிரஸ் கலைக்கப்பட்டு விட்டதென்றால், அதில் வருந்தக்கூடிய விஷயம் என்னவிருக்கின்றது? அதாவது மஹாத்மாஜீ இவ்வேலையை எவ்வளவு மனவருத்தத்துடன் செய்திருக்கவேண்டுமென்பதை அவரை அறிந்தவர்களே உணர்ந்து கொள்ள முடியும். காங்கிரசை அழித்தது அவாது மஹா தியாக உணர்ச்சியைக் குறிக்கின்றது. ஊன்றி யோசித்தால் உண்மையை உணரலாம்.

சென்ற 47 வருஷங்களாகச் சீர்பெற்று விளங்கிய தேசிய காங்கிரஸ் இன்று அழிக்கப்பட்டுவிட்டது. ஆனால் நாளை இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் அது மீண்டும் புது ஒளியுடன்—மகத்தான ஜீவசக்தியுடன் உதயமாகும். அந்நாளை நாம் ஒவ்வொருவரும் எதிர்பார்ப்போமாக.

மஹாத்மாஜீ தமது கடமையை தினையளவும் பிறழாமல் நமக்குச் செய்து காட்டி வந்திருக்கிறார்; சிறையும் புகுந்துவிட்டார். ஆனால் நாமோ.........

சென்குப்தா மறைவு

பாரதத் தாயின் பணியைச் சிரமேற்கொண்டு தொண்டாற்றி வந்த ஸ்ரீஜத் - சென்குப்தா, ஜுலை 23ஆந் தேதி நம்மை விட்டுப் பிரிந்தாரென்பதைக் கேட்டபோது நாம் திடுக்கிட்டு விட்டோம்; இந்தியாவே திடுக்கிட்டு விட்டது.

ஸ்ரீஜத் சென்குப்தாவுக்கு வங்காளத்தில் செல்வாக்கு அதிகம். கல்கத்தாவில் அவர் சொற்களுக்கு மிகவும் மரியாதை யிருந்தது. சுபாஷ் சந்திரபோஸைவிட சென்குப்தாவிடத்தில் உண்மையிலேயே அனைவருக்கும் மதிப்புண்டு.

ஸ்ரீஜத் சென்குப்தா தாய் நாட்டிற்காகவே தமது சுகபோகங்களைத் துறந்தார்; அடிமைச் சேவையை அறவே மறந்தார்; தாய்

தியாகி சென்குப்தா

['தமிழ் நாடு' அன்போடு உதவியது]

நாட்டுக்காகவே இன்று நம்மிடையினின்று மறைந்தார். அவர் நாமம் வாழ்க!

சென்குப்தா இறந்ததைப்பற்றிக் கவலைப்படவேண்டிய தில்லை. ஆயினும் நம் கோழை மனது கவலைப்பட்டுத்தான்—அழுது அழுது தான் ஆறுதலடைய வேண்டும்.

பாலர் மறைந்தார். சித்தரஞ்சனர் செத்தார். லஜபதியும் இறந்தார். மோதிலாலும் மண்ணுனர். சுப்பிரமண்ய பாரதியும், வ. வெ. சு. ஐயரும், இராமானுஜமும், ஆல்வா எடிசனும் இன்னும் கணக்கற்ற அறிஞர்களும் மறைந்து போனுர்கள். சென்குப்தாவும் இன்று செத்துவிட்டார். வருந்திப் பயன் என்ன?

மேற் கூறியவர்கள் உண்மையிலேயே இறந்து போனுர்களா என்று ஆராயப் புகுங்கால், ஒருவரும் இறக்கவில்லை என்றே உறுதியாக எண்ணவேண்டியிருக்கிறது. அவர்கள் உயிருடனேயே இருக்கின்றுர்கள். பால கங்காதராது சக்தி இன்று இந்திய இளைஞர்களிடம் காணப்படுகின்றது. லஜபதி தடியடி பட்டார்; ஆனுல் ஆயிரக்கணக்கான மக்களுக்குச் சகிப்புத் தன்மையை—சத்தியாக்கிர சக்தியை லஜபதி இன்று அருளிக்கொண்டிருக்கிறுர். இவர்களது புகழுடல்கள் இன்று ஹிந்துஸ்தானத்தில் வேலை செய்கின்றன. பூத உடலைக்காட்டிலும் புகழுடல் மஹா சக்தியுடையது.

சென்குப்தா இந்திய யுத்தரங்கத்தில் இன்று அவரது உயிரைப் பலி கொடுத்தார். உயிரைக் கொடுத்தவர் அவர் ஒருவர்தானு? இல்லை! இல்லை!! சத்தியாக்கிரகப் போர் எவ்வளவோ மக்களை பலி கொண்டு விட்டது. சென்குப்தா இறந்தது அதிசயிக்கத் தக்கதல்ல.

ஆனுல் வங்காள வானம் இன்று ஒரு ஒளிவீசும் நக்ஷத்திரத்தை இழந்துவிட்டது. ஏற்கனவே ஆயிரக் கணக்கான நக்ஷத்திரங்கள் வங்க வானத்தினின்று மறைந்துவிட்டன. எனினும் இன்றுவங்காளம் படும் பாடு ஆண்டவனுக்கே வெளிச்சம். இடிமேலிடி யென்ன, சென்குப்தாவின் மாணமும் நேர்ந்ததைக் காணும்போது நம்மனம் குமுறுகின்றது.

நாட்டுக்காக—தம் தாய் நாட்டிற்காக உயிர் கொடுத்த தியாகிகளைக் குறித்து ஒப்பாரி வைத்து அழுவது சுத்த கோழைத்தனம்

—மூதகெலும் பற்ற தன்மை. தமிழ் நாட்டில் சென்குப்தா மரணத்தைப்பற்றி 'இரங்கற்பாக்க'ளைக் கிராமபோனில் யாரும் பாட வேண்டா மென்று கேட்டுக் கொள்ளுகிறோம். அவ்வாறு பாடுவது அவமானம்! அவமானம்!! அவமானம்!!! ஜெயகோஷ மடங்கிய பாடல்களைப் பாடலாம்.

வீரர் மறைந்தார். அவரை விண்ணவர் போற்றுவர். நாமும் போற்றுவோம், வாழ்த்துவோம். தமிழர்களே, வீரருக்கு ஜெய கோஷம் செய்யுங்கள். நாட்டிற்கு விடுதலையுண்டு. சென் குப்தாவின் தியாகபுத்தி நம் அனைவருக்கும் வருமாறு ஆண்டவனை வேண்டுங்கள். நம் நாடு சுதந்திரம் பெற்றுவிடும். சென்குப்தாவுக்கு ஜேய்!

வந்தேமாதரம்

தமிழர்களுக்கு

அடுத்த மாதத் 'தமிழரசு' இதழில், நெஞ்சை கொள்ளை கொள்ளும் கதைகளும், அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், விநோத வேடிக்கை வியாசங்களும் வெளிவரும்.

மேலும் நமது பத்திரிகையின் முகப்புப்படமெழுதும் சித்திர நிபுணர், கோலங்களைப் பற்றிய சிறந்த கட்டுரைகளை விளக்கப் படங்களுடன் தொடர்ந்து எழுத அன்போடு ஒப்புக் கொண்டுள்ளார். ஆண் பெண்மணிகளுக்கு இனி 'தமிழரசு' உயர்ந்த விருந்து செய்யும்.

அன்பர்க ளனைவரும் படித்து ஆனந்திப்பார்களாக!

தீண்டாமைப் பேயைத் துரத்துங்கள்



சோமு முதலியார்:—ஹல்லோ பிரகாசம்! க்ஷேமந்தானு! கடவு ளருளால் தாங்கள் க்ஷேமமாய் வாழ வேண்டும்.

பிரகாச முதலியார்:—(சிகரெட் கையில் வைத்துக் கொண்டு ஆனந்தமாய்) ஹல்லோ சோமு! கடவுளருளால் தாங்களும் அப்படியே வாழ வேண்டும்.

மீனாட்சியம்மன் பேசிய விந்தை

[மே. மா]

'மதுரை மீனாட்சியம்மன், சென்ற 26-7-33-இல் பேசிய விந்தையைச் சற்று கேட்கிறீர்களா?' என்று நண்பர் 'குபீல்' என்னைக் கேட்டார்.

இதைக் கேட்டதும் என் உடல் ஆடிவிட்டது. 'மீனாட்சியம்மனாவது, பேசுகிறதாவது? என்னய்யா மூட்டை விடுகிறீர்?' என்றேன் நான்.

'அட போடா பைத்தியக்காரா! மீனாட்சியம்மன் பேசியது யாருக்கும் தெரியாது. எனது நண்பர் எலிக்குட்டிச் சுவாமிகளுக்கு மாத்திரமே தெரியும். அவர் ஒரு பெரிய யோகி. அவர் மூலமாய்த் தான் எனக்கும் தெரிய வந்தது' என்றார் குபீல்.

'சொல்லித் தொலையும்' என்றேன் நான்.

குபீல் சொன்னார்:—

'நான் எல்லா மக்களையும் உள்ளன்புடன் நேசித்து வருகிறேன்; மேலும் அவர்களது குறைகளையும் தீர்த்து வருகிறேன். ஆனால் என் குறையை மாத்திரம் நீங்கள் ஏன் தீர்க்கக் கூடாது? என் குறையைத் தீர்க்க உங்களால் முடியும், கட்டாயம் முடியும்.

நான் ஒரு பெண். பெண்களுக்குரிய சகல ஆடையாபரணங்களையும் எனக்கு அளிக்கின்றீர்கள். அப்படியிருக்க, எனக்கு நீராட்டி வைக்கவும், வேறு ஆடையை அணிவிக்கவும், என்னை அலங்கரிக்கவும் ஒரு தோழிப் பெண்ணையல்லவா நீங்கள் எனக்கு ஏற்படுத்த வேண்டும்?

அதை விடுத்து, எனது ஆடையைக் களைந்து, நிர்வாணமாக்கி, பின் வேறு ஆடையை அணிவிக்கின்றான் அர்ச்சகன். இது எனக்குப் பெருத்த அவமானமாய் இருக்கின்றது. அந்தப் பாவிப் பார்ப்பனன் தன் மனைவியைக் கொண்டோ, அல்லது தன் பெண்ணைக் கொண்டோ எனக்கு ஆடையை அணிவிக்கலாகாதா? இவ்வவமானத்தை நான் இன்னும் எத்தனை நாள் பொறுத்துக் கொண்டிருப்பது? என்னை மணந்த சொக்கநாதருக்கும் இதுபற்றிக்

கொஞ்சமும் வெட்கமில்லை. அவரும் அன்னியன் ஒருவன் என்னை தொடப் பார்த்துக்கொண் டிருக்கிறார். அடியாருக்கு எளியவர் என்ற உண்மையை மெய்ப்பிக்கிறார்போ லிருக்கிறது. ஐயோ, வெட்கக் கேடு !

அது போகட்டும்! நீங்கள் என்னை உலக மாதா என்று உயர்வாகப் போற்றுகிறீர்கள். எனது மக்களாகிய நீங்கள் என்னையும் சுவாமியையும் இவ்வளவு பய பக்தியோடு ஆராதிக்கும் குருக்கள் என்னைத் தனியாக ஆடை அணிகளைக் களைந்து நீராட்டி மீண்டும் அலங்கரிக்கும்போது எவ்வளவு அலட்சியமாக நடந்து கொள்ளுகிறான் என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை.



நீங்கள் என்னைத் தாயாராக வழிபடுகின்றீர்கள். அதனால் பயன் என்ன? தாயின் அவமானத்தைக் கண்டும் சேய்கள் பேசாமலிருப்பது தகுமோ? இது தருமமாகுமோ? எனவே, இந்த வெட்கக் கேட்டை நினைந்து நினைந்து, சித்தங் கலங்கி, கோபம் பொங்கி, மனமாறி இருப்பதால் உங்களுக்குச் சுயராஜ்யம் வாங்கித்தா மனமின்றி வாளா விருக்கின்றேன். இல்லாவிட்டால் சுயராஜ்யம் வாங்கி எப்போதோ உங்கள் தலையில் போட்டிருப்பேன்.

என் அவமானத்தைப் பெண்களும் ஒரு பொருட்டாய் நினைப்பதில்லை. சிலர் என்னைக் கல் உருவமாய்க் கருதி வருகிறார்கள். கல்லான நான் எப்படி உங்களுக்கு நன்மை செய்ய முடியும்? நான் கல்லல்ல. சக்தி ரூபம் என்றே வணங்குகிறீர்கள். ஆகலின் எனது அவமானத்தைப் போக்க ஆண்மக்களே, நீங்கள் முன் வாருங்கள்! வாருங்கள்!! பெண் தெய்வங்களை அலங்கரிக்க பெண் அர்ச்சகர்களையே நியமியுங்கள். அவ்வாறு செய்வீர்களானால், உங்களுக்கு விரைவில் சுயராஜ்யம் கிடைக்கும்; சுகபோகமாய் வாழ்வீர்கள். தென்னிந்திய இளை

ஞர்களே! தூங்காதீர்கள். 'பெண் தெய்வங்கள் மானப் பாதுகாப்புச் சட்டம்' என்ற சட்டத்தைச் சட்ட சபையில் உடனே கொண்டு வந்து, என் போன்ற பெண் தெய்வங்களின் மானத்தைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!!'

'இந்த விவரத்தை எலிக்குட்டிச்சாமியார் மூலமாக அம்பிகை வெளியுலகிற்குப் பரவச் செய்யுமாறு கூறினாள். நீ ஒரு 'ரேடியோ' ஆதலின், உன்னிடம் நான் இதைக் கூறினேன்' என்று சொல்லிக் கொண்டே குபீல் கம்பி நீட்டினார்.

இது நிஜமா? அல்லது பொய்யா?

பொன் மொழிகள்

நமது துன்பங்களிலும் துயரங்களிலும், உலகமானது மிகவும் பயங்கரமானதோர் இடமாகத் தோன்றுகிறது.

வேலை செய்வதற்கே உனக்கு உரிமை யுண்டு; அதன் பலன்களில் இல்லை.

எல்லாத் தேசங்களிலும், வைதீகர்கள் ஒரு பெருந் தீமையாயிருக்கிறார்கள்.

உன் திறமைக் கேற்ற தொழிலை யேற்று; அதை நன்கு நிறைவேற்றுவாயாக.

சாந்த குண முள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

குற்றத்தைப் பார்க்கினும், தண்டனையே அதிகம் கெடுக்க வல்லது.

குற்றம் செய்தல் அல்லது தவறுதல் எவரையும் களங்கப் படுத்துவதில்லை; அது போன்றே, எத் தண்டனையும் எவரையும் தூய்மைப் படுத்துவது மில்லை; சீராக்குவது மில்லை.

அறம் என்பது சன்மார்க்கத்தால் ஸ்தாபிக்கப்படுவ தல்ல.

வேதனை, வருத்தம், வலி, இடையூறு, இடுக்கண்கள் வாயிலாகத் தான் மனிதன் ஞானமடைகிறான்.

கல்கியின் நினைவுகள்

[உண்மை உணர்ந்தோன்]

II

ஸ்ரீரங்கம் சீனிவாசவரதன் சற்று 'அப்டுடேட்' மனிதர். அவரது குலத்தொழிலான அர்ச்சனைத் தொழிலையும், யாசகத் தொழிலையும் அப்பால் தள்ளினார்; குலக் கருவிகளான தர்ப்பைப் புல்லையும் பஞ்சாங்கத்தையும் மூலையி லெறிந்தார்; இப்போது பிழைப்பதெப்படி யென்று யோசிக்கலானார். சில வழிகளில் சென்றும் முன்னுக்கு வரமுடியாது திண்டாடி நின்ற அவரது திருமூளையில் ஒரு யோசனை பளீரென்று உதய மாயிற்று.

மறுநாளே ஒரு புஸ்தகத்தை எழுதச் செய்து முதல் முதலாக வெளியிட்டார். தேச மக்களை மயக்கிய அப் புத்தகம் ஆயிரக் கணக்கில் செலவாயிற்று.

பின்னர் அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு ஒரு பத்திரிகை ஆரம்பித்தார். அதற்கு 'ஸ்டன்ட் விகடன்' என்று பெயர். அதில் அவருக்குக் கொழுத்த பணம் கிடைத்தது.

பணம் கையி லேறவே ஆசிரியருக்கு ரேஸ்—கிண்டி ரேஸ்—மீது காதல் அதிகமாயிற்று. ரேஸுக்கும் சென்றார். ஆனால் அந்தப் பொல்லாத குதிரைகள் அவரை ஏமாற்றி விட்டன. குதிரைப் பந்தயப் பணத்தால் லட்சாதிகாரியாக விளங்கலாம் என்றெண்ணி யிருந்த சீனிவாசவரதனின் மத்திய கால மனோரதம் மண்ணாய்ப் போயிற்று.

பின்னர் நல்ல ஜோசிய ரொருவரை அவர் காக்காய்ப் பிடித்தார். இனி இவரை 'ஆசிரியர்' என்றே அழைப்போம். அவர் நண்பரானவுடன், 'ஆசிரியர்' ஒரு குதிரையை வாங்கித் தாமே தயார் செய்தார். 'அக்குதிரை கட்டாயம் 'வின்' அடிக்கும், 'வின்' அடிக்காவிட்டாலும், 'பிளேஸாவது' கட்டாயம் அடிக்கும் என்று உறுதியுடன் நம்பினார் 'ஆசிரியர்'.

துர் அதிர்ஷ்ட வசத்தால் 'ஆசிரியருக்கு' ரேஸில், 'வின்'னும் வரவில்லை; பிளேசும் வரவில்லை. அவர் இருதயம் உடைந்து விட்டது. அவரது கைப்பொருளெல்லாம் 'காலி'யாய்ப் போயிற்று,

உடனே 'ஆசிரியர்' தமது மூளையைக் கிருஷ்ண துளசியாலும், வைக்கோல் கூளத்தாலும் சுத்தம் செய்துகொண்டார். அப்போது தான் குதிரைப் பந்தயத்தின் அநுபவம் அவர் மனக் கண் முன் தோன்றியது.

உடனே தமது பத்திரிகையில் 'போட்டிப் பரிசு' என்ற வித்தையொன்றை ஆரம்பித்தார். அப் போட்டிப்பரிசு சீட்டை அவரது மனைவி, சகோதரன், மாமன், பத்திரிகை ஏஜண்டுகள் முதலியவர்களின் ஊழியத்திற்குக் கைம்மாருக அவர்கள் பேரா லேயே பிரசுரித்து, பொதுஜனங்களிடத்தில் 1000க் கணக்கில் பணம் திரட்டலானுர். அத்தொகையினுல், அவர் தம் வயிற்றை வளர்த்து வந்த தல்லாமல், தம் வீட்டி லிருக்கும் மாட்டின் உணவாகிய வக்கீலுக்குப் பணமும், குதிரையைத்தயார் செய்யும் சாரதி மூர்த்திக்குச் சம்பளமும் கொடுத்துதவி வந்தார்.

'ஆசிரியர்' இவ்வாறு மோட்டாருடன், ஆனந்த மயமாக, இருக்கும் நாளில், யாரோ சில போக்கிரிகள் கிளம்பி அவரது வருவாயைக் குறைத்து, பொது மக்கள், தங்கள் பணத்தை அவருக்குக் கொடுக்காதபடி செய்து வருவதைக் கண்டதும் அவர் கண்களில் தீப்பொறி பறந்தது.

'ஆசிரியர்' கழுத்துக்குக் கயிருய் இருக்கும் பூணூல் மாத்திரம் இல்லாதிருந்தால் அவர் இப்போக்கிரிகளை என்ன செய்திருப்பார் என்று நம்மால் சொல்ல முடியாது; ஆசிரியர் "விட்டேனு இந்தப் பசங்களை! என் 'விகடப்' பற்கள் உதிர்ந்து போனுலும், என் பூணூல் இருக்கின்றது. ஒரு கை பார்த்துவிடுகிறேன். முதலாவதாக என் வியாசங்களை உத்தாவின்றிப் போட்டதாய்ப் பொய்க் கூறி, மான நஷ்டம் கேட்டு பயமுறுத்துகிறேன். இதற்கு வைக்கோல் என் வீட்டுப் புறக்கடையிலேயே இருப்பதால், பணச் செலவில்லாமலேயே நோட்டீஸ் விடுகிறேன். அதற்கும் இந்தப் பசங்கள் பயப்படாவிட்டால் பூணூலை முறுக்கிக் காதில் சொருவிக் கொள்ளுகிறேன். ஆனதால் பயமில்லை' என்று கர்ஜித்தார்.

அவர் செய்கையிலும் செய்துதான் காட்டினுர். நோட்டீசும் கொடுத்தார். அந்தப் பொல்லாத போக்கிரிகள் பயப்படவே யில்லை. 'தாக்கு! விகடப் பல்லை உதிர்! ஹாஸ்யக் கையை உடை' என்ற மகுடமிட்ட கட்டுரைகளை அந்தப் பாவிகள் தொடர்ந்து வெளியிட்டு வந்தனர்.

சீனிவாசவரதனது ஏமாற்று வித்தைகளை மக்கள் தெரிந்து கொண்டனர். சில மாதங்களில் சீனிவாசவரதனின் 'ஸ்டன்ட் விகடன்' பத்திரிகைக்கு 25 சந்தாநேயர்களே மிகுந்தனர். பத்திரிகை பரலோகம் சென்றுவிட்டது.

சீனிவாசவரதனும் பழைய பரம்பரை சம்பிரதாயத்தின்படி பஞ்சாங்கக் கட்டையும், தர்ப்பைப் புல்லையும் அக்குளில் அடக்கிக் கொண்டு பாப்பாரப் பேட்டையில் சுற்றி வருகிறார்.

* * *

'ஐயோ 'ஸ்டன்ட் விகடன' மறைந்துவிட்டது?' என்று கூவிக்கொண்டே எழுந்தாராம் எனது நண்பர் கல்கி. அவர் முன் எப்போதும்போல் அவர் நண்பன் பாலன் உட்கார்ந்துகொண்டிருந்தான். 'என்னடா கல்கி! வரவர பகலில் தூங்கிவிட்டு அடிக்கடி வாய் பிதற்றிக்கொண் டிருக்கிறாய்' என்றான் பாலன். கல்கி தாம் கண்ட கனவைத் துயரத்தோடு பாலனிடம் சொன்னார். அப்போது பாலன் சொன்னனும்:—"பைத்தியக்காரா! இது வெறுங்கனவு! 'ஸ்டன்ட் விகடன்' என்ற பத்திரிகையே தமிழ் நாட்டில் கிடையாது'

கல்கி இக்கனவை 15 வருஷங்களுக்கு முன் கண்டதாக என்னிடம் கூறினர். நானும் விழுந்து விழுந்து சிரித்தேன். நீங்களும் சிரிக்கிறீர்க ளல்லவா?

ராமு:—அடே கிருஷ்ணு! நான் அடிக்கடி மகாத்மா காந்தியைப் பார்க்கிறேன்.

கிட்டு:—எங்கேயடா?

ராமு:—படத்தில். —ஜெயராமன்

* * *

சாஸ்திரிகள் :—தாங்கள் அவசரப்படுவீர்கள் என்றல்லவோ இன்று நான் ஜட்காவில் அவசர அவசரமாக வந்தேன். இன்னும் ஒன்றும் ஆகவில்லையே.

விசுவநாதையர் :—அப்படியானல் நான் அவசரமாக ஆபீஸுக்குப் போகவேண்டும். தாங்கள் எனக்கு பதிலாக சிராத்தம் பண்ணுங்கள்.

* * *

சுருட்டுக்குடிக்கும் ஒருவர் :—தம் வீட்டு உபாத்தியாயரிடம் இன்று வீட்டில் சிரார்த்தமானபடியால் எனக்குப் புகை குடியாமல் இருந்துவிட முடியாது.

உபாத்தியாயர் :—அப்படியானல் இப்பொழுது ஹோமத்தை வளர்க்கிறேன். புகை குடியுங்கள்.

கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர்

பொருள் போன கோலம்

—:o:—

[திரு. நெ. சிவசங்கரன்]

அருமைப் புதல்வனும் எனது ராஜன் தன் அன்னையுடன் அன்னையின் பெற்றோர் வீட்டுக்குச் சென்று அநேக நாட்களானதால், அவனைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை என்னை ஆட்டியது. ஆதலின் 'ஞாயிற்றுக் கிழமை ராகுகால நேரத்தில் புறப்படுகிறாயே' என்று என் அன்னை சொன்னதையும் கேட்டுக்கொண்டே ஆயத்தமாய் நின்றுகொண்டிருந்த வாடகைக் குதிரை வண்டியிலேறிப் புகை வண்டி நிலயம் (இரயில்வே ஸ்டேஷன்) சென்றேன்.

இன்னும் காமதித்தால், நான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் வண்டி என்னை எதிர்பாராமலே சென்றுவிடும் என்றறிந்ததும் சீட்டு (டிக்கெட்) வாங்கும் இடத்தை நோக்கி விரைவாகச் சென்றேன். எனக்கு முன்னால் அநேகர் சீட்டு வாங்குவதற்குப் பரபரப்பாக நின்றுகொண்டிருந்தனர். அவர்களையும் இடித்துத் தள்ளிவிட்டுப் பலகணியில் சீட்டுக் கொடுப்பதற்காக விடப்பட்டிருக்கும் சிறிய துவாரத்தில் ரூபாயுடன் கையை நுழைத்து, சீட்டுக் கொடுக்குமாறு கேட்டேன். சீட்டுடன் மீதிச் சில்லரையும் கொடுத்துக்கொண்டே 'காலணா கொடு, ஓரணா தருகிறேன்' என்ற சப்தமும் கேட்டது. உள்ளே அகப்பட்ட சீட்டு, சில்லரையுடன் என் கை மற்ற கைகளால் நெருக்குண்ட நிலையிலிருப்பதால் உள்ளே இருந்துண்டான சப்தத்துக்கிசைய என்னால் முடியாமல்



போகவே, என் முழு பலத்துடன், உள்ளகப்பட்டிருந்த என் கையைப் பிடுங்கிக்கொண்டு விட்டுப்போன என் உடுப்புப் பெட்டி

யையும் (சூட்கேஸ்), படுக்கையையும் தூக்கிக்கொண்டு, உள்ளே போகும் வழியை நோக்கி ஓடினேன்.

ஈரட்டாக எண்ணிக்கொண் டிருந்த என் மனத்தை ஒருமைப் படுத்த வண்டியும் வந்துவிட்டது. உள்ளே செல்லும் வாசல் அப்போதே திறக்கப்பட்டதால் ஆயத்தமாக நின்றுகொண் டிருந்த ஜனங்கள் ஒருவரோ டொருவர் இடித்துத் தள்ளியும், பிடித்துத் தள்ளியும் வண்டியை நோக்கி ஓடிக்கொண் டிருக்க, நானும் அவர் களுக் கிடையில் சிக்குண்டு வாச லருகே வரும் போது வாசலில் நின்றுகொண் டிருந்தவர் என்னிடம் 'சீட்டெங்கே எடு' என்றார். வலக் கரத்தி லிருந்த பெட்டியைக் கீழே வைக்கக் குனிந்து நிமிரும்போது எனக்கு முன்னால் ஒரு பெண் தன் தலையில் சுருட்டி வைத்துக் கொண்டிருந்த பாயில் என் மூக்கு உராய்ந்தது. கண்ணுக்கு வந்த வினையை நீக்கக் கண்ணாடி போட்டிருக்கக், கண்ணாடிக்கு வந்த வினையைக் கண்ணால் நீக்க முடியாமல் போகவே, மூக்கின்மே லிருந்த கண்ணாடி காதில் மாட்டிக்கொண் டிருந்ததையும் மீறி கீழே விழுந்துவிட்டது.



உடைந்து போன கண்ணாடியை நீக்கிவிட்டு சட்டத்தைக் கைப் பற்றிக்கொண்டு சீட்டுக் கேட்டவரிடம் என் சீட்டை எடுத்துக் கொடுத்ததுதான் தாமதம்! கீழே இருந்த என் பெட்டியைத் தூக்கிக்கொண்டு துரிதமாக வண்டியை நோக்கிச் செல்லும் போது என் கழுத்தில் சுற்றி இருந்த பட்டுத்துண்டின் ஞாபகம் வந்து பார்க்க, துண்டு காணப்படவில்லை.

ஊதிய சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு என் முன் எதிர்ப்பட்ட வண்டியி லேற முயன்றேன். ஏறுவோர் இறங்குவோரைத் தடுத்து வழியை மறித்துக்கொண் டிருந்ததால் அவர்கள் முடிவுக்கு வருமுன் நான் முடிவுக்கு வந்து, வண்டியின் பலகணி வழியாகப்

பெட்டியையும் படுக்கையையும் உள்ளே போட்டுவிட்டு நானும் அவ்வழியாகவே ஏற முயன்றேன்.



என்னல் கூடுமானவரை தொத்தி ஏற முயன்றும், இடுப்பளவே வண்டிக்குள் சென்றது. வெளியே கால்கள் தொங்கிக் கொண்டிருந்தன. நான் படும் பாட்டைக் கண்டு சகியாத என் கால் செருப்புகளும் வழியனுப்பி விட்டு முன்னரே சென்று விட்டன.

'ஏனப்பா இப்படி அவதி' என்று சொல்லிக்கொண்டே, உள்ளே இருந்து வந்த ஒரு புண்ணியவான் என்னை உள்ளே இழுத்தார். 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று எண்ணிக்கொண்டிருக்கையில் கணுக்கால்தான் உள்ளே வரவேண்டிய பாக்கி. 'படார்' என்று பலகணியின் கதவு விழுந்தது. கணுக்கால் துண்டு பட்டிருக்குமென்றே எண்ணினேன். வேளையின் பயனல் துண்டு படாமல் ஒன்று பட்டு—வேதனைப்பட்டது. வண்டியிலேறியது சந்தோஷமே.

'ஐயோ காலமே' என்று ஏங்கிப்போய் உட்காருவதற்கு மிடமில்லாமல் வண்டியின் வாசலில் பெட்டி, படுக்கையை வைத்துவிட்டு "அப்பாடா' என்று அயர்ந்துபோ யுட்கார்ந்தேன். சீட்டு வாங்கப் போய் கையிலேற்பட்ட வேதனையோடு வண்டியிலேறி கணுக்காலில் பலகை விழுந்த வேதனையும் சேர்ந்ததால் என்னல் சகிக்க முடியாமல், மெதுவாக தடவிக் கொடுத்துக்கொண் டிருந்தேன். அப்போதுதான்,—வலது கை மணிக்கட்டி லணிந்திருந்த தங்கச் சங்கிலி காணதிருக்கவே திடுக்கிட்டேன்.

ஒன்றன்பின் ஞென்றகச் சென்ற என் பொருள்களை நினைத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டே இருக்க, வண்டியும் ஒன்றன்பின் ஞென்றக அநேக ஊர்களைக் கடந்து விட்டது. நேரம் என்னவென்றறிய என் இடதுகை மணிக்கட்டில் கட்டியிருந்த கடிகாரத்

தைப் பார்த்தேன். பதிலாக கண்ணுடி உடைந்துபோனது மன்றி உள்ளிருந்த முள்ளொன்றும் காணும லிருந்ததைத்தான் பார்த்தேன். அதைக் கழற்றி மேலங்கியின் உறையில் போடப் போனேன். உறையோ கிழிந்து தொங்கிக் கொண் டிருந்தது. உறைக்குள்ளிருந்தவை போன மாயம் தெரியவில்லே. அதே சமயத்தில் என் அருகே பலகையின்மீது உட்கார்ந்திருந்தவர், வெளியே வீசி எறிந்த வெண்—புகையிலேச் சுருள் (ஸிகெரெட்) தவறி என் ஆடையில் விழுந்து ஆடையைத் துளேத்து விட்டது. அப்போது சீட்டுப் பரிசோதகர் என்னிடம் வந்து சீட்டைக் கேட்டார். அப்போது தான் சீட்டைத் திருப்பி வாங்கிக் கொள்ளாதது என் நினேவிற்கு வந்தது. விவரத்தைச் சொல்ல அவர் ஒப்புக் கொள்ளாததால் அவர் சொன்னபடி நான் ஒப்புக்கொண்டு இரட்டிப்புக் கட்டணம் கொடுத்து ரசீதைப் பெற்றுக் கொண்டேன்.



ஓய்ந்துபோய் படுக்கையின்மீ துட்கார்ந்த வண்ணம் நான் தூங்கிவிட்டேன்; விழித்துப் பார்க்கும்பொழுது பக்கத்தில் வைத்திருந்த என் பெட்டியைக் காணும். அவமானமும் ஆத்திரமும் பொறுக்க முடியாத நிலேயி லிருக்கும்பொழுது நான் இறங்க வேண்டிய ஊர் வர, இறங்கி விட்டேன்.

ஔவையாரின் அருமைப் பழமொழிகள் ஞாபகத்திற்கு வர நான் ஆறுத லடைந்து வீடு சென்றேன். அருமையுடன் அழைத்த என் அன்னேயின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்க—என்னேப் பின் பற்றியே என் அன்னேயும் வந்த விவரம் கூறத் திகைத்தேன். என் பொருள்கள் போன விசனத்தை மாற்றியது என் ராசனின் சிரிப்பே. அன்னேயிடம் விவரத்தைச் சொல்ல 'இதுவும் நமது பாக்கியமே" என்று ஆறுதல் கூறினுள்.

பஞ்ச தந்திரம்

[பத்மம்]

வாசகர்காள்! உங்கள் கையில் ஒரே ஒரு பைசா இருக்கிறதா? நான் கடன் கேட்கவில்லை. 'வெறுமே' தான் கேட்கிறேன்.—சரி, உங்களிடம் இல்லையே!

'என்னடாது! இந்தப் பஞ்ச காலத்தில் என்னமோ 'பஞ்சம்' என்று ஆரம்பிக்கும் பெயருடன் கட்டுரை எழுதப்போனால், எந்தக் காரியந்தான் ஜயமாகும்? அதனால்தான் முதன் முதலாகக் கையில் காசிருக்கா வென்று கேட்டதும், 'இல்லை' யென்று பதில் வந்தது' என்று யாரோ ஒருவர் எதோ ஒரு மூலையிலிருந்து கத்துவது என் காதில் விழுகிறது. ஆனால் அந்த அப்பாவி மனுஷருக்கு இந்தக் கட்டுரையின் உண்மை நோக்கம் தெரியாது.

'சரிதானய்யா! யாரோ ஒருவன் வேறு வேலையில்லாமல் 'பஞ்ச தந்திரம்' என்று அனுமான் வால் போன்ற ஒரு கதை எழுதினானும். அதைப்பற்றி நீங்கள் எல்லாருக்கும் எடுத்து உரைக்க வந்து விட்டீர்களோ?' என்று என் நண்பர் அம்போஜி ராவ், நான் தலையங்கம் எழுதினதும், என்னை மிரட்டினார். இத்தனை யிடை யூறுகளையும் தாண்டி, உங்களுக்குத் தவறாமல் உபதேசிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நான் எழுதி யிருப்பதால் ஆசிரியர் இதைப் பிரசுரித்திருக்கிறார். ஆகவே நீங்கள் தவறாமல் இதைப் படியுங்கள்.

சுவாமி போகானந்தர் அருளிய மஹாமாந்தரீய, ஸ்தல மூல தானபான அடவேத் தம்புக் கொம்புப் பச்சிலை' யைக் கண்டு பிடித்து விட்டால் போதும். பணக் கஷ்டமே பறந்துவிடும்! 'ரிட்ரென்சுமென்டு' என்ற வார்த்தையை அகராதியை விட்டே நீக்கி விடலாம்! இப் பச்சிலையை ஒரு கூழாங்கல்லின் மேல் வைத்து, கசக்கித் தேய்த்தால் போதும். கூழாங்கல்லிலிருந்து அசல் சவரன்களே நமக்கு வேண்டிய அளவு கிடைக்கும். அது இருக்குமிடத்தை ரகஸ்யமாகக் கூறுகிறேன். ஜாக்கிரதையாகக் கேளுங்கள். வேறு ஒருவரிடமும் சொல்லக் கூடாது!—இமயமலையிருக்கிறதே தெரியுமா? அதற்கு உச்சியான எவரெஸ்டு சிகரத்தில் ஓர் ஆலவிருக்ஷம் தளிர்த்து வளர்ந்து வருகிறது. அதன் மூலவேரின் நடு மத்தியில் ஒரு சிறிய 'ஸ்தல மூலதானபான அடவேடக் கொம்புக் கொட்டை' ஒன்று இருக்கிறது. அந்தக் கொட்டையைக் கொண்டு வந்து பயிரிட்டு

வளர்த்து வந்தால் குறைந்தது ஐம்பது வருஷங்களில் அது மரமாகக் கூடும். ஐம்பது வருஷங்கள் சரியாகப் பூர்த்தியானதும், அதன் இலைகளில் நான்கு எடுத்து முன் சொல்லியவாறு செய்தால் உண்மை விளங்கும். இதற்காகத்தான் லார்டு கிளேஸ்டேல் என்பவர் இமயமலையைச் சுற்றியும், எவரெஸ்டுக்கு மேலும் பறந்தது. ஆனால் அவ்வால விருக்ஷம் மாந்தரீக சக்தியுடையதாதலால் அவர் கண்களுக்குத் தென்படவில்லை போலும்! ஆகவே, இன்னும் ஒரு சில தினங்களில் நான் என்னுடைய 'பொய்யோப்ளேன்' விமானத்தில் எவரெஸ்டு சிகரத்திற்குப் போகப் போகிறேன்.

'பொறுத்தார் பூமி ஆழ்வார்; பொறுக்காதார் பொள்ளாச்சி ஆழ்வார்' என்றார் ஒரு பெரியார். அவர் சொல்லுக் கிணங்க பொருத்திருந்து அப்பச்சிலையைக் கொணர்ந்து, சொன்னபடி செய்து கஷ்டங்களைப் பொருட் படுத்தா திருந்து கடைசியில் அதன் பயனாக இஷ்டப்பட்ட வரை பவுன் பவுனாகச் சம்பாதித்துக் கொள்ளலாம்.

கவனிப்பு:—இது, காபிரைட், பேடன்ட் முதலிய ஒன்றுக்கும் அடங்கினதல்ல. தைரியமாய் நீங்கள் செய்யலாம்.

* * *

கையில் சிறிது மூலதனம் இருந்தால், நான் இப்பொழுது சொல்லப் போகும் வழியில் பணம் சேகரிக்கலாம்.

சென்னை, பிராட்வேயில் ஒரு ரூம் வாடகைக்கு வாங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் குடி யிருப்பது வேறு இடத்தி லிருக்கவேண்டுமென்பது அத்தியாவசியம். பிறகு, 'வாஸனைத் திரவிய வியாபாரிகள்' என்று மிகத் தடபுடலாகப் பெயர்ப்பலகை மாட்டுங்கள். பத்திரிகைகளில் பெரிய விளம்பரங்கள் செய்து விடுங்கள். அவைகளில் 'ஒவ்வொரு ஆர்டரும் நூற்றுக்கு முப்பது விகிதம் முன் பணத்துடன் எங்களிடம் சேர்ந்தாலொழிய கவனிக்கப்பட மாட்டாது' என்று கண்டிப்பா யிருக்க வேண்டும். பாருமே பிறகு! அடுத்த நாள் தபால் வரும் நேரத்திற்கு நீர் கணக்குப் புஸ்தகத்தில் வரவு லக்கத்தில் கணக்கெழுதத் தயாரா யிருக்கவேண்டும். அப்படி அபரிமிதமாக ஆர்டர்கள் வந்து விடும்.

ஆர்டர்தாரர்களின் கடிதத்தில் கண்ட வாசனைத் திரவியங்களுக்குப் பதிலாகத் தகர டின்களில் மரத்தூளை நிரப்பி 'பாக்' பண்ணி வி. பி. யில் அனுப்பி விடவும். ஆர்டர்தாரர்கள் வி. பி. க்குப் பணம் கட்டி யெடுத்துக்கொண்டு சாவதானமாகப் பிரித்துப் பார்ப்பதற்குள் வி. பி. சேவகன் போய் விடுவான். முடிவில் பூராப்பணமும் உமக்கு வசூலாகிவிடும். போலீஸ் பெருச்சாளிகளுக்குச் சிறிது வாயில்

போட்டு விட்டால் வாயைத் திறக்கவே மாட்டார்கள். அல்லது இச் செய்தி போலீசுக்கு எட்டிக் கலாட்டா ஆவதற்குள், நீங்கள் கணக்கை யெல்லாம் மூடிவைத்து விட்டு உள்ளதை யெடுத்துக் கொண்டு புதுச்சேரிக்கு யாத்திரை கிளம்பிவிடும். இப்பணத்தை வைத்துக் கொண்டு வாழ்ந்துவாரும்! பிறகு பார்த்துக் கொள்வோம்.

* * *

அச்சாபீஸ் ஆசாமி ஒருவரைக் காக்கா பிடிக்கத் தாமுள்ளவர்கள் இதைச் செய்யலாம். மிக லாபமுண்டு. 'சுதந்திர வீரன்' காங்கிரஸ் சங்கு' 'ஆனந்த தீரன்' 'விகடசிகாமணி' என்றது போன்ற அழகிய பெயருடைய பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கவும். மேல் அட்டை அழகாய் பல வர்ணங்களில் இருக்க வேண்டும். உள்ளேயோ, தோட்டி முதல் தொண்டமான்வரை எல்லோரையும் காரசாரமாகத் திட்டி யெழுதி இருக்க வேண்டும். பேப்பர் கூடிய சீக்கிரத்தில் நல்ல உயர்ந்த ஸ்திதிக்கு வந்துவிடும். ஆனால், மற்றபடி யாரும் மான நஷ்ட வழக்குத் தொடராமல் பார்த்துக் கொள்ளவும். வருட சந்தாவை முதலில் வாங்கிக் கொள்ளுங்கள். ஆயிரக் கணக்கில் ரூபாய்கள் வந்து குவியும். சில மாதங்கள் சென்றபின், 'நல்லவர்க்கு அழகு சொல்லாமல் நழுவுதல்' என்றபடி, 'நைஸாகத்' திடீரென்று பத்திரிகையை நிறுத்தி விடவும். துண்டு விளம்பரங்களிலும், உங்கள் ஊர்ப் பத்திரிகை மூலமாகவும், பத்திரிகையை மகாத்மாவின் உபவாசத்திற்காகவாவது, பத்திரிகை அவசரச்சட்டத்திற்காகவாவது அல்லது இது போன்ற வேறு காரணங்களுக்காகவாவது நிறுத்திவிட்டதாக விளம்பரப் படுத்துங்கள். எதற்கும் ஜாக்கிரதையா யிருக்க வேண்டுவதவசியம்.

* * *

பஞ்சாங்கத்தை யெடுத்து, இந்த மாதம் அமாவாசை எப்பொழுது வருகிறதென்று பார். கொல்லன் பட்டரையி லிருந்து சிறிது உமிக்கரியும், எண்ணெய்க்காரனிடத்தில் சிறிது எண்ணெயும் வாங்கி வா. ஆடைகளை யெல்லாம் கழற்றிப் பெட்டியில் பத்திரமாய் வைத்துவிட்டு, கௌபீனதாரியாக, எண்ணெயில் கரியைக் குழைத்து நன்றாய் வழ, வழ, மழ, மழ வென்று உடம்பில் முற்றிலும் பூசிக் கொள்ளவும். கையில் கன்னக்கோல் கொண்டு இரவு சரியாக மணி பன்னிரண்டுக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு நாய், போலீஸ்—புலி முதலியவை வாயில் விழாமல், சாமர்த்தியமாய் சேத் தஸ்மார்த் தயோராம் சந்து வீட்டை யடைந்து, அங்கே சிறிது நேரம் சுவற்றை மெதுவாகத் தட்டிப் பாருங்கள். சப்தம் ஒன்றும் ஏற்படாம லிருந்தால், கன்னக் கோலை மெதுவாகச் சுவற்றில்... ....' இனி உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசிய மில்லையே?

உங்களுக்கே தெரியு மல்லவா? உங்களுக்கு முன்னமேயே யாராவது அப்படிச் செய்திருந்தால், (முக்காலே மூன்று வீசத்திற்கு ஒருவரும் செய்திருக்க மாட்டார்கள். இது ரகஸ்ய மல்லவா?) ஏதாவதொரு பாங்கியைப் பிடித்து முன் சொன்னபடி செய்யவும்.

இப்படியாக நான் என்னுலான வரை அழகாக நான்கு தந்திரங்கள் சொல்லிவிட்டேன். இந்த நான்கும் உங்களுக்குப் பொருந்தவில்லையானல், ஐந்தாவதான சஞ்சீவியையே கைக்கொள்ள வேண்டும். அதாவது, சகாரா பாலைவனத்தில் தண்ணீர் நிறைந்திருக்கும் சமயம் பார்த்து, அதில் நீர் தலைகீழாய் நின்று மூழ்கித் தவஞ் செய்து முத்தி பெறவேண்டியதே!

‘தமிழர’சின் ஆட்சி



மங்கையர்க்கரசி:—அண்ணு, ‘தமிழர’சைக் கொஞ்சம் கொடு. அதிலுள்ள சிறு கதையை முழுதும் படித்து விட்டுத் தருகிறேன்.

மணிவாசகன்:—அது முடியாது. அதிலுள்ள படங்களை எல்லாம் பார்த்த பின்தான் தருவேன்.

'ஏழை வழிப்போக்கிப் பிராமணரின் சிரார்த்தம்'

[திரு. கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர்]

தெலுங்கு தேசத்து ஜில்லாக்கள் ஒன்றிலே, விசுவநாதையர், இப்பொழுது மேலான தோர் சர்க்கார் உத்தியோகஸ்தர். அவர் தமிழ் ஸ்மார்த்த பிராமணர், பீ. எ; பரீக்ஷை தேறினபின் சர்க்கார் ஊழியத்தை மேற்கொண்டு தெலுங்கு ஜில்லாக்களிலேயே சேவித்து மேலான பதவியை அடைந்தவர். அவர் இப்பொழுது சேவித்து வந்த குண்டுபேட்டை என்னும் ஊரிலே அனேகமாய் முக்கிய உத்தியோகஸ்தர் யாவரும் தமிழரே. அந்நாட்டு சுதேசிகளான ஆந்திரர்கள் அசூயயால் அவர்களை வெறுத்தனர். ஆந்திரர் தம்மை வெறுத்தது போலவே, அங்குள்ள தமிழரும் ஆந்திரரை வெறுத்தனர். சுமார் இருபது பேருக்குமேல் தமிழ் உத்தியோகஸ்தர் அவ்வூரில் இருந்தமையால், தங்களுக் கென்றே தமிழ் தேசத்து புரோகிதர் ஒருவரைக் குடியேற்றி வைத்துக்கொண்டது மன்றி, சிரார்த்தம் போன்ற தினங்களில் தங்களுக்குள்ளேயே ஒருவர் சாப்பிட்டு, பரஸ்பரம் உதவி செய்து வந்தனர். அவர்கள் அத்தேசத்து ஆந்திரர் மத்தியில், வேறொரு ஜாதியார்போலவே வாசம் செய்து வந்தனர்.

தம் தாய் தந்தையர் ஜீவிய காலத்தில், விசுவநாதையர், அதிக அன்புடன் அவர்களைப் பேணவில்லை. அவர் தந்தையார் கிருஷ்ணய்யர் அதிகப் படிப்பில்லாத ஒரு குக்கிராமவாசி. பரம்பரை பூஸ்திதி உள்ளவர். தமது பூர்வ சொத்தை யெல்லாம் அவர் தம் மக்களை நீச பாஷையில் பயிற்றுவதில் செலவழித்தார். அவ்வாறு அவர் உதவியால் கற்றுத் தேறியபின், அவர் மக்களில் ஒருவரேனும், நெஞ்சறி நன்றியுடன் அவரை மதித்து, கௌரவம் செய்து, பக்ஷமாகப் பேணுது, அவர் விஷயத்தில் உபேக்ஷையாகவும், தத்தம் காரியங்களில் கண்ணுகவுமே இருந்தமை, அதிர்ஷ்ட வச மென்றே கூற வேண்டும். மூத்தவராகிய விசுவநாதையர் மற்றோரை விட அதிக பண செலவு கொண்டு படித்துத் தேறி, மேலான பதவியை அடைந்தவராயினும், தாய் தந்தையரைப் பேணும் உத்தம கடமையில் யாவ

ரிலும் அதமமாக இருந்தார். ஒவ்வொரு மகனை பார்த்து மனம் கசந்து போய்க் கடைசியாக விசுவநாதையரின் தந்தையார், தமது சொத்தின் அழிவுக்கு முக்கிய காரணஸ்தரும், அதிக சம்பாத்தியம் செய்பவரும், தமது அபரகிரியைகளுக்குப் பிரதம பாத்தியஸ்தரு மாகிய தமது மூத்தக் குமாரர் விசுவநாதையர் வீட்டிலே, அவருடன் வசிக்கலானார். விஸ்வநாதையரும் அவர் தர்ம பத்தினியாகிய கமலமும் பெரியவரைச் சரியானபடி நடத்தவில்லை. அதனால் அவர் வேறு விதியின்றி, உள்ளூர மனம் கசந்து, எப்படியோ பொறுத்துக் கொண்டு வசித்து வந்தார்.

அப்பொழுது ஒரு நாள், அவராலும் சகிக்க முடியாத ஒரு சங்கதி நடந்தது. அதாவது, பெரியவர் அழுக்கு வஸ்திரம் உடுத்து, தெருத் திண்ணையில் வீற்றிருந்து, ஏதோ ஜபம் செய்துகொண்டிருக் கையில், விசுவநாதையரின் ஆந்திர நண்பர்களில் ஒரு கனவான் விசுவநாதையரைக் காண வந்தார். ஆசார உபசாரங்களுடன், விசுவநாதையர், அவரை வரவேற்கவே, அந்தக் கனவான், 'பெரியவர் யார்?' என்று, விசுவநாதையரை வினவினார். அதற்கு விசுவநாதையர், 'யாரோ ஏழை வழிப்போக்கிப் பிராமணர்' என்று இங்கிலீஷ் பாஷையில் விடையளித்தார். அவர் தகப்பனார் கிருஷ்ணையர் படியாதவரே எனினும், தம் மக்களுக்கு நீச



பாஷை கற்பிப்பதிலேயே தமது பூர்வ சொத்தை எல்லாம் இழந்ததின் பலனாக, அவருக்கும் சில இங்கிலீஷ் வார்த்தைகள் தெரியும். தமது செல்வ மகன் சீமந்த புத்திரனான விசுவநாதையரின் விடை, அகஸ்மாத்தாய்க் காதில் விழவே, அவர் எழுந்து, கோபா வேசத்துடன் வீட்டுக்குள் நுழைந்து, வந்திருந்த ஆந்திர கனவானை நோக்கி: 'ஐயா! நான் ஒரு ஏழை வழிப்போக்கு பிராமணனல்ல; இதோ இருக்கிறானே இந்தத் தடிப்பயல் மஹா பாபியைப் பெற்றவளின் புருஷன்' என்று சொல்லி விட்டு, வெளியே போய்விட்டார். பின்பு அவர் மாண பரியந்தம் விசுவநாதையரின் முகத்தில் விழிக்கவே யில்லை.

* * *

விசுவநாதையர் 'எனக்கு, வழக்கம் போல, காலையில் ஒரு கப் காப்பி கொடுத்து விடு; இல்லாவிட்டால், அப்புறம், சிரார்த்தம், ஆபீஸ் வேலை ஒன்றுமே நடவாது' என்று தம் அருமை இல்லாள் கமலத்தினிடம் தனிமையில் சொன்னார்.

கமலம்:—'நான் பட்டினியே கிடந்தால் எனக்கு நெஞ்சு வலி வந்துவிடும் என்பது உங்களுக்குத் தெரியுமே; அப்படி இருந்தும், பிண்ட பிரதானம் ஆகும் வரை, நான் ஒன்றையும் தொட மாட்டேன்' என்று பெருமையாய் விடை யளித்தாள்.



விசு:—'நீ ஒரு முட்டாள்; இல்லை, வேண்டுமானால், பரம வைதீகம் என்று வைத்துக்கொள்; ஆனால் நான் அப்படி இல்லை. அது எப்படியானாலும், பிராமணர் இருவர்களில் ஒருவர், காலையில் சாப்பிட்டு விட்டு தான் பிராமணார்த்தம் சாப்பிட வருவார்; அந்த நிபந்தனையின்மேல்தான் இஞ்சினியர் ராமச்சந்திர ஐயர் நிமிந்திரணத்துக்கு ஒப்புக்கொண்டார்' என்றார்.

கமலம்:—'எல்லாம் கலிகாலம், உங்களைச் சொல்லக் குற்றமில்லை. சுவாமிதான் பிதுர்க்களுக்கு வழி விடவேண்டும்; இந்த நாட்களிலே நடக்கும் சிரார்த்தங்களினாலே, அவர்கள் கரையேறப் போவதில்லை' என்று சொல்லிவிட்டுச் சில நிமிஷங்களுக்குப் பின் அவருக்கு ஒரு கப் காப்பி கொடுத்தாள்.

* * *

அன்று காலை காபி சாப்பிட்ட விஷயம், அவர் அந்தரங்கத்துக்குரிய மனையாட்டி கமலத்துக்கு மட்டும் தெரியுமே யன்றி, மற்றொருவருக்கும் தெரியாது. குண்டுப்பேட்டை, பாலைவனமத்தியில் உள்ள பட்டணம். சுத்தி காதவழி தூரத்துக்குக் காய்கறி பதார்த்தங்கள் எதுவும் கிடையாது. ஆயினும் விசுவநாதையர், தமது உத்தியோக வலிமையினாலும், செல்வாக்கினாலும் தூரமான பல இடங்களிலிருந்து ஏராளமான காய் கறி கனி வர்க்கங்களும், கொம்பு தேனும் தமது தந்தையாரின் சிரார்த்த நிமித்தம் தருவித்திருந்தது மன்றி, தமது

தந்தையாரின் பிரதிநிதியாக நிமந்திரணம் சாப்பிட்ட உபாத்தியாய ருக்கும், விச்வே தேவராக விருந்து சாப்பிட்ட இஞ்சினியர்க் கும் விலை உயர்ந்த சேலம் பட்டுக்கரை சோமன் ஜோடிகள் பரிசளித்தார்.

விசுவநாதையர் மனைவி, நெஞ்சு வலி வந்தாலும் வரட்டுமென்று, காலையில் சாப்பிடாமல், வெகு ஆசாரமாக சிரார்த்தத்துக்குச் சமைத்துக்கொண் டிருந்தாள். அவள் இவ்வளவு சிரத்தையோடும் ஆசாரத்தோடும் காரியம் செய்வதைப் பார்த்தவர்கள், அவள் வெகு அன்பும் பணிவு முள்ள நாட்டுப் பெண்ணாக இருந்திருக்கவேண்டு மென்றே எண்ணுவார்கள். அவளுக்கு உதவியாக, அவள் தோழி, ராமச்சந்திரையரின் மனைவி, விசாலாக்ஷி வந்திருந்தாள். அவர்கள் இரு வரும் வேலை செய்து கொண்டே, தங்கள் தங்கள் குடும்பங்களில் எவ்வாறு சிரார்த்த சமையல் செய்யப்படும் என்பதைப் பற்றிப் பேசி கொண் டிருந்தார்கள். "நாங்கள் தேங்காயும் மிளகாயும் சேர்க்க மாட்டோம். மிளகு மட்டும் தான் சேர்ப்போம்' என்று கமலம் சொன்னாள். 'நாங்கள் இரண்டும் சேர்ப்போம். ஆனால் துவரம் பருப்பு சேர்க்கமாட்டோம். குழம்பும் கிடையாது. இரஸம் மாத்திரம்தான் பண்ணுவோம்' என்று விசாலாக்ஷி சொன்னாள்.

சரியாய் 9-மணிக்கெல்லாம் விசுவநாதையர் வீட்டு வாசலில் ஒரு 'ஜட்கா' வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கி, தொந்தி வயிறுள்ள ஒரு நாற்பத்தைந்து வயது பிராமணர், வெகு வேகமாக வீட்டிற்குள் சென்றார். அவர் கையிலிருக்கும் தர்ப்பக் கட்டையை பார்த்தவுடனே, அவர்தான் உபாத்தியாயர் என்பது நன்கு தெரி யும். அவர் கழுத்தில் தங்கம் கட்டித் தங்கக் கம்பியில் போட்டிருக்கும் ருத்ராட்சத்தையும், அரையில் பட்டுக்கரை வேஷ்டியும், இடுப்பில் சொருகி இருந்த வெள்ளிப் பொடி டப்பியையும் பார்த்தாலே, அவர் பாடு ஒன்றும் குறைவில்லை என்பது தெரியும். ஏதாவது கொஞ்சம் சந்தேக மிருந்தால், அவர் மனைவியின் புடவையையும், அவள் அணிந் திருக்கும் நகைகளையும் பார்த்தால் அச் சந்தேகம் நீங்கிவிடும்.

'எங்கே! எங்கே! எல்லாம் தயாராக இருக்கிறதா? சீக்கிரம்! சீக்கிரம்?' என்று சொல்லிக் கொண்டே சாஸ்திரிகள் வீட்டுக்குள் வந்தார். அவரைக் கண்டவுடன், விசுவநாதையர் எழுந்து, சமையல் எவ்வளவா யிருக்கிறது என்று பார்க்கப் போனார்.

சாஸ்திரிகள்:—கடியாரத்தைப் பார்த்துக்கொண்டே 'பொழுதாய் விட்டதே, எனக்குப் பதினொன்றரை மணிக்கு இன்னு மோரிடத் தில் காரிய மிருக்கிறது' என்று அவசரப்படுத்தினர்.

விசு :—சிகரெட்டை வாயில் பற்ற வைத்துக் கொண்டே, 'ஓய்! சாஸ்திரிகளே! எனக்கு உம்மைவிட அவசரங் காணும்; கலெக்டர் கச்சேரிக்குச் சரியாய் மத்தியானம் பன்னிரண்டு மணிக்கெல்லாம் வந்துவிடுவார். வந்தவுடன் என்னைத்தான் கூப்பிடுவார்.'



சாஸ்:—'கலெக்டருக்குத் தங்கள் பேரில் அதிக பக்ஷம் என்று எல்லோரும் சொல்கிறார்கள். இதென்ன! பிலாப்பழமா? இது எங்கிருந்து கிடைத்தது உங்களுக்கு? சர்க்கரைக் கேளி வாழைப் பழங்கள் கூடவா? இந்தப் பழங்கள் எல்லாம் உங்களுக்குக் குண்டுப்பேட்டையில் எங்கே அகப்பட்டது?' என்று நாக்கில் ஜலம் ஊற, அங்கே ஒரு பலகையின்மேல் வைத்திருந்த பழங்களைப் பார்த்துச் சொன்னார்.

இதைக் கேட்டவுடன், விசுவநாதைய ரவர்களுக்குப் பெருமையும் சந்தோஷமும் பொங்கி விட்டன. 'குண்டுப் பேட்டையில் இவை யெல்லாம் எங்கே கிடைக்கும்? நான் வேறு இடத்தி லிருந்து இவைகளை ரயில் வழியாகத் தருவித்தேன். அப்பா சிரார்த்த மென்ன, சாதாரண விசேஷமா! தினம் வருமா?' என்று அவர் பதில் சொன்னார்.

சாஸ் :—'வாஸ்தவம்தான். சிரார்த்தங்களை உண்மையான சிரத்தையோடு செய்தால் தான், பிதுர்க்களுக்குத் திருப்தி. எங்கே ராமச்சந்திரையர்வாள் எங்கே? நாம் ஆரம்பிக்கலாமே? சமைய லெல்லாம் தயாராய் விட்டதா?' என்று சொல்லிக் கொண்டே, வீட்டு எஜமானி கமலத்தின் சிரத்தையைப் பற்றி மெச்சும்படி, அடுக்களைப் பக்கம் சென்றார்.

கமலம் :—எங்களுக்கு இன்னும் ஒரு அரை மணிநேரம்தான் வேண்டும். நீங்கள் ஹோமம் ஆரம்பிக்கலாம். இலை போடுவதற்குள் எல்லாம் தயாராய்விடும்.

சாஸ் :—'நீங்கள் இவ்வளவு பக்தி, சிரத்தையோடு காரியம் செய்யும்பொழுது, அதற்கென்ன சந்தேகம்? என்ன ராமச்சந்திரையர்வாள் ஸம்ஸாரமும் இங்கே இருக்கிறார்களா, என்ன? ஆனால் இனிமேல் தாமசமானால் அது என் பேரில் தான் பிசகு. பக்ஷணங்களெல்லாம் நெய்யோ அல்லது எண்ணெயும் கலப்புண்டோ?' என்று

கேட்டார். 'தனி நெய் முண்டுரி லிருந்து வேண்டு மென்று சொல்லி வரவழைத்தது' என்று கமலம் விடையளித்தாள். 'பேஷ்! பேஷ்! என்று சொல்லிக்கொண்டே அடுத்த அறையில் ஹோமம் ஆரம்பிக்க சாஸ்திரிகள் போனார்.

இப்பொழுதுள்ள இந்தக் கோபால சாஸ்திரிகளே, பத்து வருஷத்திற்கு முன், முதல் முதல் குண்டுப்பேட்டைக்கு வந்த பஞ்சைப் பிராமண னென்று சொன்னால், ஒருவரும் நம்ப மாட்டார்கள். அவர் மாதா மாதம் வேண்டிய அளவு பணம் சம்பாதித்துச் செழித்தோங்கி வந்தார். அவருக்கு அவர் சொல்லி வைக்கும் மந்திரங்களின் அர்த்தம் கொஞ்சமும் தெரியாது. அனேக தடவை முன் பின் மாற்றிச் சொல்லி விடுவார். ஆனா லென்ன? அவரால் பண்ணி வைக்கப்பட்டவர்களோ, அவரிலும் ஒன்றும் தெரியாதவர்கள். புரோகிதர் கையில் பணத்தைக் கொடுத்துவிட்டுத் தங்களுக்குச் சௌகரியமான மட்டும் அவர் சொல்வதைக் கேட்டால் போதும் என்று எண்ணப்பட்டவர்கள். எப்பொழுதாவது அவர் செய்யும் தவறுகள், பழக்கமுள்ள பாட்டியினாலாவது, அல்லது வேறு யாராலாவது கண்டுபிடிக்கப் பட்டால், அவர் சிரித்துக்கொண்டு, மறந்து விட்டதாகச் சொல்லி மாற்றிவிடுவார். இவ்வாறு அவரே பிரகஸ்பதியாக விளங்கிவந்தார்.

ராமச்சந்திரையரைக் கூப்பிட ஒரு சேவகனை அனுப்பவே, அவர் பத்துமணிக் கெல்லாம் தம்முடைய சயிக்கிள் மோட்டாரில் வந்து இறங்கினார். பிராமணர்கள் எண்ணெய்த் தேய்த்து ஸ்நானம் செய்ய, அங்கே ஆறு குளம் ஒன்றும் இல்லை. மேலும் அவர்கள் இருவரும் தாங்கள் ஸ்நானம் செய்தாய் விட்ட தென்றும், பின்பு தீட்டுப்படவில்லை யென்றும் சொல்லிவிட்டதனால், பிரோக்ஷண ஸ்நானம் மட்டும் செய்துவிட்டுக் காரியம் ஆரம்பித்துவிட்டார்கள். புகையினால், விசுவநாதையருக்குக் கண்ணைத் திறக்கமுடியவில்லை; மூச்சுகூட சரியாய் விட முடியவில்லை. சாஸ்திரிகளோ மந்திரங்களை ரயில் வேகமாகச் சொல்லிக் கொண்டு போனார். விசுவநாதையரால் மந்திரங்களைச் சாஸ்திரிகளின் பின் சொல்லிக் கொண்டு போக முடியவில்லை; அவர் சும்மா இருந்து விட்டார். ஒரு மட்டில் சிரார்த்தம் எப்படியோ முடிந்தது. ஆனால் சேலம் வேஷ்டிகள் நன்றாய்ப் புகழப்பட்டன. விருந்தோ, சாஸ்திரிகள் மூக்குப் பிடிக்கப் பக்ஷணங்



கள், பழங்கள், தேன், எல்லாம் போட்டுக்கொண்டு நன்ருய்ச் சாப்பிட்டார். தம் தகப்பனுர் உயிருடன் இருக்கும்பொழுது, அவரை, 'யாரோ ஒரு வழிப்போக்கிப் பிராமணன்' என்று சொன்ன விசுவநாதையரும், தம் மாமனுருக்கு எப்பொழுதும் அரை வயிற்றுக்கே அன்ன மிட்ட அவர் மனைவி கமலமும், அவர் ஸ்தானத்தி விருந்து அவருக்குப் பதிலாக உண்ணும் கோபால சாஸ்திரிகள் தொந்தி வயிற்றைத் தங்களால் இயன்றமட்டும், பணத்தையும் சிரமத்தையும் பாராமல், அதிக உபசாரத்தோடு நிரப்பினுர்கள். மாதுர்வழி கோத்திரத்தையும் அதைச் சார்ந்த பிதுர்க்களின் பெயர்களையும் கேட்கும் பொழுது, விசுவநாதையர் தெரியாமல் விழித்தார். ஆனுல் சாஸ்திரிகள், இவ்வாறு தெரியாதவர்களுக் கென்றுதான் தயார்ப் படுத்தி இருக்கும் ஒரு மந்திரத்தைச் சொல்லிவிட்டார். பிண்டம் வைக்கப்பட்டது. காகம் வடக்கை நோக்கிப் பிண்டத்தை எடுத்தவுடன், சாஸ்திரிகள் பிதுர்க்கள் நன்ருய்த் திருப்தி அடைந்ததாகச் சொல்லிவிட்டார்.

இவ்வாறு, அந்த 'ஏழை வழிப்போக்கிப் பிராமண'ன் சிரார்த்தம், எல்லோருக்கும் திருப்தியாக நடந்தேறியது.

இணை பிரியா

இப்படத்தில் மறைந்திருக்கும்

காதலர்களைக் கண்டு மகிழுங்கள்.

அன்றில் பறவைகள்

சாவின் சமத்துவம்

[திரு. ம. க. தணிகாசலம்]

மண்டலத்தில் மாண்புடைய மரணத்தின் புதுமைதனை வகிக்கின் அஃது
விண்டுரைக்க மாட்டாத விந்தையினும் விந்தையதால் ; மரணம் பாரில்
பண்டுமுதல் இன்றுவரை *பழங்கண்ணில் உழல்பவரின் ஆவி தன்னை
விண்டலமே கொடுபோந்து துயரொழித்துக் களிப்படைய மேவு மன்றே.

மங்கலமும், மாண்புடைய மறத்தொழிலும், மதிமுகமும், வானில் மேவு
வெங்கதிரோன் மிக்கொளியின் பரந்தபுகழ் ஒளியினையும், விண்ணும் வெள்க
இங்கிதஞ்செய் யெழிலுடைய மடந்தயரை உடையதொரு வேந்தர் தங்கள்
துங்கமுறு மணிமுடியும், செழுங்கோலும், அவர்செருக்கும் துடைக்கு மன்றே.

மரணத்தால் மன்னர்களும் மண்ணானார்! முனிவர்களும் நீறே யானார் ;
† பரணமுண்டோ? சரணுண்டோ? மாற்றுண்டோ? சாவதனை யகற்ற அந்தோ!
தரணியிலே மரணமதை யெதிர்த்துநிற்கும் தனியாற்றல் மக்கட் குண்டோ?
பரமனையே பாடுமினோ! மரணமதைப் பரவுமினோ! பயனில் மக்காள்.

போர்க்களத்தில் பொல்லாவாள் கைக்கொண்டு பொருந்தலர்கள் பொன்றி வீழ
மூர்க்கமதை மேவினராய்க் கொல்புலிபோல் சமர்முறுக்கி மொழியும் வெற்றிப்
பார்த்தனைப்போல் புகழ்பெற்றுக் கொடிநாட்டி பகரரிய பலனும் பெற்றுச்
சீர்த்தியுடன் இலங்குறுநல் வீரரையும் சாக்கடவுள் சிதைக்குந் தானே.

கம்பனெங்கே? காணரிய வள்ளுவனும் புலவனெங்கே? இளங்கோ எங்கே?
சம்புவினைப் பாடிநின்ற ஆரூரன் சம்பந்தன் வள்ளல் எங்கே?
அம்பலத்தான் அகமுருகி ஒருபிரதி கைக்கொள்ள அமைந்தான் எங்கே?
எம்தலைவன் பாரதியாம் கவிஞனெங்கே? இவரெல்லாம் எங்கே? எங்கே?

அண்மையிலோ சேய்மையிலோ அழிவதுதான் உறுதியென அறிவீர் மக்காள்?
திண்மையுள வீமரொடு வசிட்டர்கோ சிகரும்பித் துடைய பேரும்,
வண்மையுள காரிகளும், பாரிகளும் அஞ்சிகளும் மாண்டே போதல்
உண்மையதால் ; உயர்மரணம் எவர்மாட்டும் சமத்துவமே உடைய தம்மா.

கலைமகளும், அலைமகளும், மலைமகளும் கனிந்தும்மைக் களிப்பாழ் நீரில்
நிலைபெறவே ஆழ்த்திடினும் வீண்பெருமை நிகழ்த்தாதீர்! நீடு முங்கள்
தலைமையெலாம் சின்னாளில் மரணத்தால் மறைந்தொழியும்: தனித்தெய்வத்தை
அலைகடல்சூழ் உலகமதில் வழுத்துமினோ, புகழருளின் படையு மாதோ.

---

* பழங்கண்—கவலை. † பரணம்—கவசம்.

இந்திய இராணுவ இனங்கள்

[திரு. இ. பு. தருமலிங்கம்]

இந்திய இராணுவத்திற்கோர் இறையென விளங்குவோர் இரஜபுத்திரரும் சீக்கியருமே யாவர். அவர்தம் அஞ்சா நெஞ்சமும் அடங்கா ஆர்வமும் அவரை வீர ரென வகுத்துக் காட்டுகிறது.

ஹிந்து சமயத்தினரே சீக்கிய குலத்தைச் சார்ந்தக்கால் சீக்கர் எனச் சிறப்புப் பெற்றனர். ஆகவே அவரது சமயத்தைக் குறித்து சிறிது சிந்தித்தலும் சிறப்புடைத்தே.

'சீக்' எனும் சொல் 'சீடன் அல்லது கற்போன்' எனப் பொருள்படும். இதனை நிருவிய நானக் தம் குழாத்தினர்க் களித்ததிந் நாமம்.

நானக்

இரவிபால் சார்ந்த பொருக் கடுத்த தலவந்தித் தலத்து 1469 ஆண்டினில் இவர் கத்ரி என்ற வாணிப குலத் துதித்தார்; எளியதொரு வாழ்க்கையையே அனுபவித்தார்; கடிமணம் புரிந்து கருது நற்சுதலை யொன்று பயந்தார். அக்கால் இவர் அகத்தோர் தெய்வீக உணர்ச்சித் தோன்றியது. அஃதே இவரது வாழ்க்கையில் மாறுதலைப் புகுத்தியது. உடனே இவர் இல்லறம் எனும் நல்லறம் மறந்தார்; இன்சொல் மனைவியையும் மழலைச்சொற் மக்களையும் துறந்தார்; மர்தன னென்ற ஒரு மாணவனுடன் துறவிக்குரிய அணி புனைந்தார்; தேய மெங்கும் திரிந்தார்; தம் புதிய கொள்கையை எங்கணும் போதித்தார்.

சாத்வீக ஹிந்து மதத்தின் துறவறக் கொள்கைகளையும் முகம் மதியர்தம் மத மருட்டலையும் போன்றலாது விக்ரகாராதனையும் மதக் கொள்கையும் வீண் மருள் என்ற உயரிய உண்மை யுடைத்து இவர் கொள்கை. இவர் போதனைகள் நீதி செறிந்ததாகவும் மனதிற் கியைந்ததாகவும் விளங்கின. கடவுள் ஒருவர். விக்ரகாராதனை வேண்டுவதில்லை, சகுனம், மந்திரம், சல்லியம், இவை சித்திரம் என்பன ஒரு சில.

கல்ஸா

பத்தாம் சீக்கியத் தலைவராம் குரு கோவிந்தர் 'நியமனம் என்ற கல்ஸாத்தை ஏற்படுத்தினர். மற்று மிவர் சீக்கியரைச் சிறப்பிப்பச் சின்னங்கள் சில ஏற்படுத்தினர்.

நிற்க, சீக்கிய ரெனத் திரிதல் எவ்வா றெனத் தெளிதும் முதற்றில், பஹுால் அல்லது அகமார்க்ஷணம் நீறுவேறுதல்வேண்டும். அதுவரை அவனை எவரும் சீக்கிய னென்றுன்னர். பின்னாவர் தெளிந்த தண்ணீரில் கற்கண்டை கரைத்து குத்துவாளால் கல்ல வேண்டும். அஃது அவர் தம்முள் ஓர் நியமம். மற்றுமவர் கிரந்தத்தி லிருந்து சில பகுதிகள் வாசித்த பின்னர் சிறிது புனல் பருகுதலும், எஞ்சியதனை அவர் சிரசிலும் தேகத்திலும் தெளிக்கின்றனர். சீடன் 'வா குருஜிக்கா கல்ஸா' (குருவின் கல்ஸா வெற்றி பெறுக) என்று ஆர்ப்பரிப்பான்

உமன் எழுதுவதாவது

ஒருவன் 'எக்குலத்தின னாயினும் எத்தலத்தா னாயினும் அகல் பங்காவில் பிரவேசித்தக்கால் 'நான் பாட்னாவில் பிறந்தேன். (கோ



சீக்கியப் போர் வீரன்

விந்தசிங் பிறப்பிடம்) அலிவாலியாவில் வாழ்ந்தேன். (கோவிந்தர் உறைவிடம்) நான் கோவிந்தர் குழவி' என்றுரைக்க வேண்டப்படு மித்தகை நிர்மலமான நிலையற்ற பொய்வாக்கால் எல்லா சீக்கியரும் ஒரு பொதுஜன சமூகத்தையும், பரிசுத்த ரக்ஷகரையும் கொண்ட தென்பதற்கான கருத்துகொண் டென்பதை அறிந்தேன்.'

குலமும் குறியும்

கட்டுத் திறத்தினில் சீக்கியர்பால் குல வேற்றுமையிலே. ஒவ்வொரு சீக்கியனும் ஐங்கை 'க' என்ற குறிதனை—கஸ் என்ற கத்தரிகளை கேளும், கச்சென்ற சிறு சல்லடம், காரா என்ற கைக்காடி லணியும் உக்காலாய கங்கணமும், கண்டே எனப்படும். குத்துவாள் அல்லது கத்தியும், கஞ்சே தலைமயிர் முடிப்ப சீப்பும்—புனைபெறுதல் வேண்டும். சீக்கியர் புகையிலைபால் கொண்ட வெறுப்பு குறைவில. அஃது அவர் மதத்தால் விலக்கப்பட் டிருக்கிறது.

வேதம்

ஆதி கிரந்தமே அவரின் எழுதாக் கிளவி. முன்னம் நானக்கால் பஞ்சாபிய தேசியத்தில் எழுதப் பெற்றது. பின்னர் ஐந்தாங் குரவர் அர்ஜுனரால் சிறிது சேர்க்கப்பட்டது.

கனகக் கோயில்

சீக்கியரின் சீர்மைசால் சினகரம் அமிருதஸாரி லுளது. மிகுதியென பொன் முலாம் பூசப் பெற்ற தாமிரத்தால் மேற் சுவரும் கூரையும் வரையப் பெற்றதை ஆங்கில யாத்திரீகர் கண்டவிடத்து 'கனகக் கோட்டய்' என வியந்தனர். மெய்மை யெனவே இது இந்தியாவில் அதிசயம் விளைக்கும் விநோதங்களுள் தாஜ் மஹாலிற் கடுத்ததாகும். தர்பார் ஸாஹிப் (திவ்ய சமுகம்) என்றஃது சீக்கியர்பால் வழங்குகின்றது.

ஹரிமந்திரம் எனும் முக்கிய தேவாலயத்திற் கருகில் (1) அகாலி யர்களின் சம்பிரதாயமானபீடம் அகல் பங்காவும் (2) தனதின் னுயிர் நண்பனுடலம் பிரிந்த உயிரை மீட்ப தனதின் னுயிர் நீத்த எழு வயது பசுமகன் ஹரிகோவிந்தர் செல்வனின் ஞாபகச் சின்ன மென விளங்கும் எழடுக்கு பாபா அதாலும் (3) குரு அர்ஜுனர் நிருவிய தோரான் தாரானும் உள.

வந்தனை வழிபாடு

அவர் உருவத்தையேனும் விக்ரகத்தையேனும் வணங்கினரலர். கிரந்தத்தையே அவர் தெய்வ மென ஆராதிக்கின்றனர். இஃது பாது காப்புக்காக இரவில் அகல்பங்கலில் சேமம் செய்யப்பட்டு அருணோ தயத்தில் ஹரிமந்தரத்தில் பட்டுக் கூடாரத்தில் வைக்கப்படுகிறது. குரு அல்லது கிரந்தர் கிரந்திற் கருகமர்ந்து அதனின்றும் சில பகுதிகளை வாசிக்கின்றனர். அதுகாலை பாடகர் இன்னிசையோடு கிரந்தத்தி னின்றும் சில துதி கீதங்களைப் பாடுகின்றனர். புத்தகத்திற் கருகில் ஒரு பளப்பளப்பான இரத்ன கம்பள மொன்றின்மேல் மத வைராக் கியங்கள் தம் ஆராதனைகளைச் சமர்ப்பிக்கின்றனர். இங்ஙனே கிரந்த வழிபாடு ஒவ்வொரு சீக்கியக் கோட்டத்திலும் இயல்பானதாகும்.

குருவிடத்து கீழ்ப்படிதலும் மன மூவந்த பக்தியும் கொண்டால் பரகாயப் பிரவேசத்தினின் றுய்யலாம் என்ற முக்கிய மாறுதலோடு சீக்கியர் ஹிந்து மதத்திய பிறப் பிறப் பெனும் சகடத்தில் நம்பிக்கைக் கொண்டுளர்.

புண்ணிய ஸ்தலம்

முத்திதரு எழுநகரி லொன்றுய காசியம்பதியே போன்று மூகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கசீப் குரு கோவிந்தரைத் துன்புறுத்



அமிருதஸார் தங்கக் கோயில்

தியபோது குடி கொண்ட டாம்டாமா என்ற விடத்தைக் கொண்ட பாட்டியாவி லுள்ள தலவந்தி சீக்கியர்பால் சீர்மை பூண்டது.

இரஜபுத்திரர்

இரஜபுத்திரர் வட இந்தியாவில் சிறந்த ராணுவ வகுப்பைச் சார்ந்தவர். பிறப்பினிலேயே வீரம் வாய்ந்தவர். இதிகாசங்களில் செப்பிய திப்பிய க்ஷத்திரிய குலத்தைச் சார்ந்தோ ரென் றுரிமை பாராட்டு கின்றனர். அருக்க குலத்தில் அவர் உதித்தமை மெய்ம்மை யெனினும் பொய்ம்மை எனினும் இரஜபுத்திரர் தம் பராக்கிரமம் இந்திய சரித்திரத்தில் என்றும் அழிவுபடாத பகுதியைப் பெற்றுளது.

அவரது உயரிய உரம்பெற்ற உருவமும் இறுக்கமான தாடியும் அவருடைய மேன்மையான நிலையைக் குறிக்கின்றன. அவர்கள் தம்

சாயையில் மிகவும் கவலை கொள்கின்றனர். அஃதினை அழகு படுத்துவதில் களி கொள்கின்றனர். ஆணும் பெண்ணும் கண்ணைக் கவரும் சிறந்த ஆபரணங்களை அணிகின்றனர். சாயந் தீட்டிய மெல்லிய சீலையாலாய மெல்லிழைத் திரையால் (பர்டா) தம் முகங்களை மறைக்காது பெண்கள் வெளியேறுவதில்லை.

ஆடு, கோழி, கடா முதலியவற்றைத் தம்மினத்தோடு சண்டையிடக் காண்பதில் இராஜபுத்திரர்க்கு ஆர்வமுண்டு. இது அவர் தம்மில் பதிந்த ராணுவ இயற்கையைப் பொருத்தியது. இராணுவ குலத்தினர் பிரியமாகப் பாராட்டுகின்ற கீழ்ப்படிதல், பராக்கிரமம், அஞ்சாத் துணிவுமாகிய நேர்மையை ஆதரிக்கின்றமையால் இராஜபுத்திரர் சிறந்து விளங்கு கின்றனர். இராஜபுத்திரப் பெண்மணிகளைக் குறித்து கர்னல் டாட் 'புவியிடைப் பிறந்த எக்குலத்தினரும் இராஜபுத்திர பெண்களைப் போன்று மேன்மை யானதும், பெருந் தன்மையானதுமான இராஜ விசுவாசம் பெற்றிலர்' என்று கூறுகின்றார்.

இவரைப் போன்று சிறந்து விளங்குவர் கூர்க்கரும் பட்டாணியரும்.

ஒரு தமிழ்ப் பண்டிதரிடம் ஒருவன் வந்தான். பண்டிதர் 'நீ யாரப்பா?' என்றார். 'ஐய? நான் கொல்லன்' என்றான். 'நீ என்னிடம் ஏன் வந்தாய்?' என்றார் பண்டிதர். 'ஐய! நான் தங்களிடம் கல்வி கற்றுக் கொள்ள வந்தேன்' என்றான். 'சரி, வாரும், இரும், படியும் போம்' என்றார் பண்டிதர்.

வாரும் - இரும்பு - அடியும் - போம் —ஏ. சோ.

* * *

உபாத்தியாயர்:—'டே, கிட்டு! குதிரைக்குக் கொம்பு உண்டா?'

கிட்டு:—'உண்டு, சார்'



உபாத்தியாயர்:—'என்னடா மடையா! பைத்தியம் போலப் பிதற்றுகிறாயே!'

கிட்டு:—'ஏன் சார், 'குதிரை' என்ற பதத்தில் 'தி' என்ற எழுத்திற்கு மேல் கொம்பு இருக்கிற தல்லவா? அதனால்தான் 'குதிரை'க்குக் கொம்பு உண்டு என்றேன் சார்!'

ரா. அ. பத்பநாபன்

பி. ஏ.

[பால பாரதி ச. து. சு. யோகி]



முட்டாளா யிருப்பது முழு மோசம்; படித்தும் முட்டாள் பட்டம் பெறுவது மோசத்திலும் மோசம். கடன் வாங்கியும் பட்டினி, கண்ணாலம் பண்ணியும் பிரம்மச்சாரி என்ற கதைதான்.

அப்பாசாமி பட்டிக்காட்டில் பிறந்தவன்; பட்டண வாசத்தில் படித்தவன்; தட்டுக் கெட்டுத் தடுமாறிப் பல குட்டிக் கரணங்களுக்கும் பிறகு எப்படியோ பி. ஏ. பட்டம் பெற்று விட்டவன். அவன் புத்தகப் பூச்சி; அடித்தாலுங்கூட அழத் தெரியாது; அவ்வளவு சாது; 'பரப் பிரம்மம் ஜகன்னாதம்' பேர்வழி. ஹாஸ்டல் அறையை விட்டு வெளியில் போகும் கெட்ட வழக்கம் அவனிட மிருந்ததில்லை. சில அசல் அசமஞ்சங்களைப் போல் விளையாட்டு வெளியையே எட்டிப் பார்த்தவ னல்ல அப்பாசாமி. 'பேட்மிண்டன், புட்பால் டூர்ண்னமெண்டுகள், குதிரைப் பந்தயக் கோலாகலங்கள் முதலியவற்றை அவன் இரண்டொரு முறை பார்த்ததுண்டு. சீட்டாட்டத்தில் துருப்புகளின் பெயர் அவனுக்குத் தெரியும்; ஹேட்டு, பூட்டு, சூட்டு முதலியவை மாட்டிக் கொண்டு ரிஸ்ட் வாட்ச், மூக்குக் கண்ணாடியோடு பார்வைக்கு 'இங்கிலீஷ்' துரை மாதிரியே இருப்பான். நல்ல சிவப்பு. அழகான முகம். ஒல்லியான மென்மையான சரீரம். அவனுக்கு உலகந் தெரியாது; மூர்மார்க் கெட்டிலும், சைனா பஜாரிலும் அவன் எமாறாத நாள் கிடையாது என்பர். 'கடம்' போடுவதில் கெட்டிக்காரன். 'ஆக்ஸ்பர்ட் டிக்ஷனரி' அவனுக்கு அரைவாசி பாடம்; 'க்ரைட்டன்ஸ் லாஜிக்' கரதலாமகலம்; ரோம, கிரேக்க, ஆங்கில, இந்திய அரசியல், பொருளாதார, தற்கால, பழங்கால சரித்திரங்க ளெல்லாம் தலை கீழ்க் குருட்டுரு. இவற்றைத் தவிர மற்ற உலக விஷயங்க ளெல்லாம் அவனுக்கு ஓர் மூடப்பட்டுள்ள புஸ்தகந்தான். நிற்க,.

நமது அப்பாசாமி பி. ஏ. பாஸ் செய்தது வாஸ்தவந்தான்; என்றாலும் 'நோ வேகன்ஸி' போர்டைப் பாஸ் செய்ய மட்டும் கஜகர்ணங்கள் போட்டும் அவனால் முடியவில்லை. எத்தனையோ படாடோப ராவ் பகதூர் பகல் பகதூர்க ளெல்லாம் சிபார்சு செய்தும் பயன்படவில்லை. தான் ஒரு பணக்காரனாய், ஒரு பணக்காரக் காதலி

யோடு மோட்டாரில் சவாரி போவதாக நினைத்த நினைவெல்லாம் வெறும் நினைவாகவே போய்விட்டன. தாலுகா போர்டு, ஜில்லா போர்டு ஆசனங்க ளெல்லாம் தனது வருகைக்காக ஏங்கி நிற்பதாக அவன் மனப்பால் குடித்ததுண்டு. ஜனங்க ளெல்லாம் தனது அபார மான அறிவையும், ஆச்சரியமான சொல் வன்மையையும் பாராட்டிப் போற்றுவதாகவும், ஆயிரக் கணக்கான ஜனக் கூட்டங்கள் கர கோஷத்தோடு தன்னை மாலைகளிட்டு வரவேற்பதாகவும் படிப்படி யாகத் தனது அந்தஸ்து உயர்ந்து இந்திய சட்டசபை அக்ராஸன ஸ்தானத்தில் தான் வீற்றிருப்பதாகவுங்கூட அவன் கனவு கண்ட துண்டு. கலாசாலையின் மாணவர் சங்கத்தில் பல பெரியோர்கள் தன்னைப் போன்ற இளைஞர்கள் தான் பிற்காலத்தில் தேசிய வாழ்வில் முன்னணியில் நின்று அதனைச் சீர்படுத்துவார்கள் என்று பேசின தெல்லாம் அவன் காதுள் ஒலித்துக் கொண்டே யிருக்கும். இத் தகைய சந்தர்ப்பங்களுக்கென்றே இங்கிலாந்தின் பிரசங்க கேசரி யான 'பர்க்'கின் ஆவேசப் பேருரைகளை யெல்லாம் அவன் மனப் பாடம் பண்ணி யிருந்தான். ஆனால் அவைகள் வாழ்க்கைப் போரில் சற்றும் பயன்படவில்லை.

ஒரு நாள் ஏதோ ஒரு அனாமதேயச் சங்கத்தில் அவன் பேசும் படியான சந்தர்ப்பம் நேர்ந்தது. அதற்காக அவன் ஒரு வாரம் சரியாகக்கூடத் தூங்கவில்லை. பிரசங்கம் 'சமூகச் சீர்திருத்தம்' என்பது. ஆகவே 'மால்தஸ், மில்,' முதலியோரின் நூல்களைக் கரைத்துக் குடித்தான். கடைசியாக ஒரு 20 தாள்கள் கொண்ட பிரசங்க மொன்றை எழுதி முடித்தான். அதற்கு அவன் செலவழித்த காகிதங்கள் அதிகமல்ல வென்றாலும் 150-க்குக் குறையவில்லை. ஆனால் பாவம் பிரசங்கத்தன்று இவனுக்கு முன் பேசிய மற்றொரு பி, ஏ. மாணவன் இவன் எழுதி யுள்ள மேற்கோள்கள் யாவையும் கூறிவிட்டான். பின்னர் இவனது முறை. தலை சுழன்றது. நெற்றி யில் வியர்வை பொடித்தது. நெஞ்சு பகீரென்றது. கால்கள் தள் ளாடின. கைகளின் நடுக்கத்தை மறைக்க அவற்றைச் சட்டைப் பைக்குள் விட்டுக் கொண்டான். 'அக்ராசனரே............(கனவான் களே நினைவிற்கு வரவில்லை) உண்மையாகவே............இம்ம்ம்...... சந்தேக மில்லாமல்............அதாவது............வாஸ்தவமாகவே அல்ல அல்ல.........நிச்சயமாகவே...........நான்.........இம்...... இம்.........இம்...............சத்தியமாகவே..............சந்தேகமில் லாமல்.........சொல்லுவ தென்ன வெனில்.........உம்ம்ம்......... என்ன வெனில்.........உம்..........என்ன வெனில்.........எனக்குத் தோன்றுகிறது............அம்ம்ம்.........இத்யாதி. ஜனங்கள் ஒவ் வொருவராக நழுவ ஆரம்பித்தனர். அவ்வாறு நழுவியது நாங்கள் 'எதையும் சகிப்போம், இந்த விக்கலை மட்டும் சகிக்க முடியாது'

என்று சொல்லுவதுபோல் இருந்தது. நமது அப்பாசாமிக்கு அவமானம் பொறுக்க முடியவில்லை. கொஞ்ச நேரத்தில் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான். அடிஸன், டிஸ்ரேலி முதலிய பெரியோர்கள்கூட இம்மாதிரி அவமானத்திற்கு—அதிலும் பார்லிமெண்ட் சபையிலேயே—ஆட்படவில்லையா? அவர்கள் அவமானத்தின் முன் தன்னுடையது எம்மாத்திரம்?

நமது அப்பாசாமி இப்போது தன் கிராமத்தி லிருக்கிறான். அக்கிராமம் ஒரு குக்கிராமம். கத்தாளிச் சோலையிடையே, பொட்டல் காடுமேடையின் மீது எழெட்டு வில்லை வீட்டைச் சுற்றி இருபது முப்பது குடிசைகள், பல குட்டிச்சுவர்கள், குட்டிச் சுவர்களில் கழுதையும் பறநாயும் கொஞ்சிக் குலாவும்; அஞ்சாறு புளிய மரங்கள். அவற்றின் கீழ்ச் சில பசுமாடுகள் தூங்கிக்கொண்டே அசைபோடும். எதிரே ஒரு பட்டுப்போன அரச மரத்தின்கீழ் ஓர் மூக்குப்போன கல்லுளிப் பிள்ளையார் தலைகீழாய்த் தவஞ் செய்கிறார். சுற்றியுள்ள சேற்றுக் குட்டைகளில் எருமைகள் ஸ்நானம் செய்கின்றன. இதுதான் காட்டுப் பள்ளிக்கிராமம். இவ்வூரில் நமது அப்பாசாமியை எதிர்ப்பவர் ஒருவரும் இல்லை. அவன் இட்டது சட்டம். தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்தானே? என்றாலும் இங்கும் அவனை ஆபத்துகள் விட்டபாடில்லை.

ஊர்ச் சாவடியில் நாலைந்து பேர்கள் உட்கார்ந்துள்ளனர். நமது அப்பா சாமியும் இருக்கின்றான். அவருள் ஒருவர்:

'அப்பாசாமி! அப்பாசாமி என்பதற்கு இங்கிலீஷ் என்ன?'

அப்பாசாமி:—அப்பாசாமிக்கு அப்பாசாமிதான் இங்கிலீஷ்.

அவர்:—அதெப்படி இருக்க முடியும்? தமிழும் இங்கிலீஷும் ஒன்று?

இதற்கென்ன பதில் கூறுவதென்று நமது பி. ஏ. திகைத்தான். கடைசியாக ஒருவாறு தேறிப் 'பெயரெல்லாம் எல்லா பாஷையிலும் ஒன்றுதான்' என்றான். இவன் எவ்வளவு கூறியும் அவர் ஒப்புக் கொள்ளவில்லை. அவர் மனத்துள் அப்பாசாமிக்கு இங்கிலீஷ் அவ்வளவு போதாது என்று நினைவு; ஒரு பி. ஏ. யைத் தான் வாதத்தில் ஜயித்துவிட்டதாகக் கர்வம்கூட.

* * *

மற்றொருநாள்.

ஒருவர் 'அப்பாசாமி! நீ தமிழில் எத்தனாவது, இங்கிலீஷில் எத்தனாவது பாஸ் பண்ணியிருக்கிறாய்? என்றார்.

அப்பாசாமி:—பி. ஏ.

அவர்:—இங்கிலீஷில் பி. ஏ., தமிழில்?

அறிவிப்பு

நமது 'தமிழரசு' மாத வெளியீட்டைச் சென்ற மார்கழி மாதத்திலேயே வெளியிடத் தீர்மானித்துத் தயார் செய்து விட்டோம். ஆயினும் தபால் இலாகாவிலிருந்து கிடைக்க வேண்டிய அநுமதி தாமதமாக வந்ததால் தை மாதத்தில்தான் அனுப்ப முடிந்தது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற பழமொழி ஒன்று உண்டு. எனவே சிறந்த மாதமாகிய தை மாதத்திலேயே நமது 'தமிழரசு' மாத வெளியீடு வெளிவர நேர்ந்தது நன்மையே யாகும். ஆங்கிலத்திலும் புதிய வருஷம் ஆரம்பித்திருக்கிறது. எனவே 'தமிழரசு' மாத வெளியீட்டுக்கு வருட ஆரம்பம் ஆங்கில ஆண்டில் ஜனவரியும், தமிழ் வருஷத்தில் தையுமாகும். அன்பர்கள் 'பொங்கல் பொங்கும்' புண்ணிய மாதத்தில் 'தமிழர'சைப் பெற்று மங்களம் பொங்கப் பெறுவாராக.

மானேஜர்

அப்பாசாமித் திருத் திரு என்று விழித்தான்.

*　　　*　　　*

வேறொரு நாள் குப்பன் என்னும் நாலாங் கிளாஸ் பையன் ஒருவன் தனது அப்பனைப் பார்த்து 'அப்பா' உலகம் உருண்டையா! தட்டையா! வாத்தியார் உருண்டை யென்கிறார்' என்றான்.

அப்பன்:—தட்டைதான். அதற்கென்ன சந்தேகம்!

உடனே அப்பாசாமி இதுதான் சமயமென்று தனது வான சாஸ்திர ஆராய்ச்சிகளை யெல்லாம் வெளிக் கொட்டினான். அவை யெல்லாம் செவிடன் காதில் சங்கூதின கதையாய் முடிந்த தென்று நான் எழுதவா வேண்டும்!

மேற் சொன்ன சம்பவங்கள் ஒரு தினுசு; இன்னும் வேறு தினுசான சம்பவங்கள் இதை விட விசித்திரம்.

ஒரு நாள் ஒரு பண்ணைக்காரர் இவனைச் சில கோர்ட் விவகாரப் பத்திரங்களைப் படித்து தமிழில் மொழி பெயர்க்கச் சொன்னார். பத்திரங்கள் யாவற்றையும் படித்து முடிக்க மூன்று மாதமேனும் ஆகுமென்று நமது பிரகஸ்பதிக்குத் தோன்றிற்று. கடைசியில் ஒருவாறு தேறி ஒரு ஜட்ஜ்மெண்டைப் படிக்க ஆரம்பித்தான். எடுத்த எடுப்பிலேயே O S. No. 28 (ஒரிஜனல் வியாஜ்யம் நம்பர் 28) என்றிருந்தது கண்டு திகைத்தான். என்ன முயன்றும் அது இன்னதென்று மட்டும் அவனுக்குப் புரியவில்லை. பின்னால் படிப் படியாக Rex. V. (ரெக்ஸ். 5,) M. L. 2 T. 36 (2 மதாராஸ் லா ஜனரல் 36,) ஸப் ஜூடைஸ், அபடவிட், அண்டிமாண்ட், அபலேட் அதாரடி, இன்னும் எத்தனையோ இத்யாதி யெல்லாம் தொடர்ந்து வந்தன. எழுத்தோ கோழிக் கிறுக்கலிலும் கிறுக்கா யிருந்தது. 'இது எதைப் பற்றிய கேஸ். என்ன தகாறு' என்று சாமாரியாய்ப் பண்ணைக்காரிடம் கேள்விகள் போட்டான். அவைகள் எல்லாம் அப்பத்திரங்களிலேயே இருக்கிறதே என்று அவர் ஒரே வார்த்தையில் பதில் கூறி விட்டார்.........இச்சம்பவத்தின் முடிவை வாசகர்களின் மனோ கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்.

நமது அப்பாசாமி க்ரைட்டன்ஸ் லாஜிக் (வாத தத்வ சாஸ்திரம்) கில் மூழ்கி யிருக்கிறான். 'தம்பி அதென்ன புஸ்தகம்? அதிலுள்ள விஷயங்க ளென்ன?' என்று குப்பாக் கவுண்டர் தாழ்மையோடு கேட்கிறார். நமது பி. ஏ. உடனே

மனிதர் யாவரும் மாண மடைவர்.
பழனிச்சாமி ஒரு மனிதன்.
ஆகவே பழனிச்சாமி மாண மடைவான்.

மேலிரண்டும் ஆதாரங்கள் மூன்றாவது முடிவு. இந்த வகையில் நாம் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து கண்டு பிடிக்க வேண்டும். மேற்

சொன்னது ஒரு கூட்டத்தினின்றும் ஒன்றின் உண்மையை அறிவது. ஒன்றிலிருந்து பலவற்றின் பொது உண்மையை அறியவும் வழியுண்டு. உதாரணமாக மிருகங்களுக்கு எத்தனை கால் என்று நாம் அறிய வேண்டுமானால் முதலாவது எருமையை எடுத்துக் கொள்வோம்.

எருமைக்கு நாலு கால். எருமை ஒரு மிருகம்.
ஆகவே எல்லா மிருகத்திற்கும் நாலு கால்.

இவ்வகையான வாதத்திற்குச் 'சிலாஜிஸ்டிக் ஆர்க்யுமெண்டு' (Syllogistic argument) எனப் பெயர் என்று சரமாரியாய்ப் பொழிந்தான். அவர் வயிறு குலுங்க நகைத்தார். இப்படியும் ஒரு சாஸ்திரமா? முட்டாளுக்குத் தெரிந்ததைக்கூட முட்டப் படித்தவன் அறிந்துகொள்ள முக்கால்மணி நேரம் ஆகும்போலிருக்கிறதே என்று ஆச்சரியமுற்றார். அன்று சாயங்காலம் அதிகப் படிப்பினால் மூளை குழம்பிப் போய் அப்பாசாமிக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாக அவர் தனது, நண்பர் ஒருவரிடம் கூறினார் என்றால் அதில் ஆச்சரிய மென்ன இருக்கிறது?

ஒருவர்—பணக்காரர் இறந்து விடுகிறாரென்று வைத்துக் கொள்வோம். அவருடைய சொத்துக்கு வார்ஸாகப் பத்துப் பதினைந்து பேர் போட்டி போடுகின்றனர். அவற்றில் ஒருவர் நமது பி. ஏ. இடம் யோசனை கேட்கின்றார்.

'கேஸ் ஜயிக்குமா? ஜயிக்காதா'—இதுதான் கேள்வி. அப்பாசாமிக்கோ ஆருடம் தெரியாது! சட்ட ரீதிக்கும் அவன் மூளை ரீதிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. கடைசியாக நமது பிரகஸ்பதி கோமுட்டித் தீர்ப்புக் கூறித் தப்பித்துக் கொள்ளுகின்றார். 'கேஸ் உங்களுக்குத்தான் ஜயமாகும். ஆனால் சாக்ஷியங்களைப் பொருத்திருக்கிறது' என்று கூறி விடுவார்.

இத்யாதி சம்பவங்களை எழுதிக் கொண்டே போனால் அதுவே ஒரு புத்தகமாய் விடும். நமது அப்பாசாமிக்கோ கலாசாலைப் பரீக்ஷைகளைக் காட்டிலும் கிராமாந்திரப் பரீக்ஷைகள் கஷ்டமாய்த் தோன்றுகின்றன. என் செய்வான் பாவம்! வேலையோ காலியில்லை. வீட்டிலோ இவன் படிப்பிற்குச் செலவு செய்த பணத்திற்கு வட்டி கூடக் காணவில்லை யென்று திட்டுகிறார்கள். வெளியிலோ மதிப்பில்லை. பக்கத்தில் எழுத்து வாசனை யறியாத எருமை மாட்டு மனைவிக்கு நகைப் பைத்தியம் பிடித்திருக்கிறது. ஐயோ பாவம்!

* * *

இப்போது அப்பாசாமி முன்சீப் கோர்ட்டு அமீனா வேலை செய்கிறானாம். 22 ரூபா சம்பளம்.

ஓரிரவில் மூன்று கொலை

[ஜீவா]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

மூன்றாஞ் சாமம். இரண்டு மணியிருக்கும். படுக்கை யறையை விட்டுப் புறக்கடைக்கு வந்த குமுதவல்லி யாதோ அரவங் கேட்டுத் திடுக்கிட்டாள். சிறிது ஊன்றிக் கவனித்ததும் முன் கட்டி லிருந்து யாரோ வருவதாகக் காலடி யோசையி லிருந்து அவளுக்குத் தெரிந்தது. முன்கட்டு விசாலமானதால், அதில் பலர் குடியிருந்து வந்தனர். பின்கட்டில் வீரபத்திரனும் குமுதவல்லியுமே வசித்து வந்தனர். புறக்கடையில் ஏதேனும் வேலை யிருந்தால் தவிர, முன் கட்டிலுள்ளவர்கள் யாரும் பின்கட்டுக்கு வரமாட்டார்கள். எனவே, வீரபத்திரன்தான் இந்நேரத்தில் வருகிறானே என்று நினைந்து மிகவும் திகிலடைந்த குமுதவல்லி பரபரப்போடு நடந்து சென்று முன்கட்டு பக்கமாகக் கூர்ந்து நோக்கினாள். கம்பீரத்தோடு மிகுந்த ஓசையாக நடந்து வருபவன் வீரபத்திரனே என்பதை எளிதில் அறிந்த குமுதவல்லியின் மனம் என்ன நிலையை அடைந்திருக்கு மென்பதை வாசகர்களே! ஊகித்து உணர்ந்து கொள்ளுங்கள்.

குமுதவல்லி மெய்க்கூச்செறிய வியர்வை வழிந்தோட விதிர் விதிர்த்து, காமத்தேன் உண்டு மதிமயங்கி இன்பக் கனவுகண்டு உறங்கிக்கொண் டிருக்கும் கமலநாதனிடம் ஓடிவந்து, அவனைத் தட்டி யெழுப்பினாள். தூக்க மயக்கத்தி லிருந்த கமலநாதன், 'குமுதா! என்னை என் அடிக்கிறாய்? நான் உனக்கு என்ன தவறு செய்தேன்? கண்ணே! நீ என்னை யடிப்பதும் எனக்கு இன்பமாகத்தான் இருக்கிறது. உன்னுடைய கரங்கள் அமுதத்தால் செய்யப் பட்டிருக்கிறதோ? பசுந் தளிர் போன்ற மெல்லிய கைகள் என் தேகத்தில் பட்டதும் யான் இவ்வுடம்போடு மேலுலகம் செல்வதுபோன்ற இன்ப வுணர்ச்சியைப் பெறுகிறேன்' என்று வாயில் வந்தவாறு பிதற்றலானான்.

குமுதவல்லி மனம் படபடத்து மிகவும் பதறிப்போய், 'ஐயா! எழுந்திரும். என் கணவன் வந்துவிட்டான். உடனே நீர் இவ்விடத்தை விட்டு விரைந்து வெளிச்செல்லும். சிறிது தாமதித்தால் நம் இருவருடைய உயிருக்கும் ஓலை வந்துவிடும்' என்று கூறியவாறே அவனைப் படுக்கையி னின்றும் பற்றி யிழுத்தாள்.

'என் கணவன் வந்துவிட்டான்' என்ற வார்த்தையைக் கேட்ட கமலநாதன் துள்ளி யெழுந்தான். அவன் தூக்க மெல்லாம் பறந்தோடிப் போயிற்று. அவன் கட்டிய கனவுலகம் நிலைகுலைந்து அழிந்தது. அவன் மனத்தில் பேரச்சங் குடிகொண்டது. என்ன செய்வதென் றறியாது அவன் நடுநடுங்கினான். எலி பொறியில் அகப்பட்டாற்போல, எதிர்பாராத

இவ்விபத்தில் அகப்பட்ட கமலநாதன் குமுதவல்லி இழுத்த இழுப்பின் வழியே சென்றான்.

அவர்கள் இருவரும் சிறு கதவண்டைச் சென்றதும், குமுதவல்லி கதவைத் திறக்க முயல்கையில், அதன்மீது பெருங் கல்லொன்று சாத்தப்பட்டிருப்பதை யறிந்து திடுக்கிட்டாள். அவ்வீட்டில் எப்போதும் யாவரும் படுக்கச் செல்கையில், திருடர்களோ, மற்றவர்களோ உள் நுழையாதவாறு அச் சிறு கதவைத் தாளிடுவதோடு அதன்மீது பெருங் கல்லொன்றை முட்டுக் கொடுத்து வைப்பது வழக்கம். அவ்வாறே அன்றும் செய்யப்பட்டிருந்தது. இதை ஞாபகத்தில் வையாத குமுதவல்லி, அக்கதவைத் திறந்து அதன் வழியாகக் கமலநாதனை வெளியேற்றிவிட்டுத் தன் கள்ளச் செய்கையைக் கணவனறியாதவாறு மறைத்துத் தப்பித்துக் கொள்ளலாமென்று மனப்பால் குடித்துச் சென்றாள். தான் எதிர்பார்த்ததற்கு மாறாக இருப்பதை யறிந்து பெரிதும் ஏமாற்ற மடைந்த அவள் மனம் பீதி யடைந்தது. கல்லை இருவருஞ் சேர்த்துப் புரட்டிவிட்டுக் கதவைத் திறக்கலாமென்றாலோ, ஓசை கேட்டுவிட்டால் என் செய்வது என்று மயங்கினாள். பாவம்! என் செய்வாள் பேதைப் பெண். ஒன்றுந் தோன்றாது மெய் விதிர் விதிர்த்து நின்றாள். கமலநாதனைப்பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. தான் தப்ப வழியில்லை என்று தெரிந்ததும், அவன் செத்த பிணம்போலானான். குமுதவல்லியின் கணவன் தன்னைக் கண்டுவிட்டால் தன்கதி யாதாகுமோ என்று அவன் ஏங்கி யயர்ந்தான். எங்கேயாவது பதுங்கிக்கொள்ள இடமுண்டா என்று சுற்றும் முற்றும் பார்த்தான். அவ்வாறு ஒளிந்துகொள்ள இடமே கிடைக்கவில்லை. கடைசியாக அவன் மதிலைப் பார்த்தான். அது ஆறடி உயரமிருந்தது. இதைக் கண்டதும் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே கமலநாதன் குமுதவல்லியைக் குனியுமாறு சொன்னான். பயத்தினால் தன்னை மறந்திருந்த குமுதவல்லி அவன் குறிப்பையறிந்து குனிந்துநின்றாள். அடுத்தகணமே கமலநாதன் அவள் முதுகின் மீது ஏறினான். குமுதவல்லி சிறிது நிமிர்ந்து கொடுக்கவே, அவனுக்கு மதில் மீது ஏறுவது எளிதாயிற்று. இவை யெல்லாம் நடப்பதற்கு இரண்டு நிமிடங்கூட ஆகவில்லை. இதற்குள் வீரபத்திரன் அங்கு வந்துவிட்டான். அவன் உரத்த குரலோடு, ' குமுதா! குமுதா!! எங்கே யிருக்கிறாய்?

என்ன செய்கிறாய்?' என்று கேட்டுக்கொண்டே வந்தவன், குமுத வல்லி புறக்கடையின் பக்க மிருந்து வருவதையும், யாரோ மதில் மீது நின்று கொண் டிருப்பதையுங் கண்டு சந்தேகங்கொண்டு, அதட்டியவாறே, 'குமுதா! அங்கு என்ன செய்துகொண் டிருந்தாய்? மதில்மீது நிற்பது யார்? உண் மையைச் சொல்' என்று கேட்டான். குமுதவல்லி பதில் சொல்ல நா வெழாது விழிக்கலானாள்.

வீரபத்திரனின் உரத்த குரலைக் கேட்ட கமலநாதன் மிகவும் பீதி யடைந்து தெருப் பக்கம் பார்க்க, மதிலோரத்தி லிருந்து ஒன்றரையடி நீளம் வரை சாக்கடைக் கால்வா யிருப்பதையும், பக்கத் தெல்லாம் சப்பாத்தி புதர் கவிந்திருப்பதையுங் கண்டு அதன்மீது எவ்வாறு குதிப்ப தென்று மலைப்பு கொண்டு திகைத்து நின்று விட்டான்.

இதற்குள் வீரபத்திரன் அவ்விடத்தை யணுகி விட்டான். கமலநாதன் மனம் அனலி லிட்ட புழுப்போல் துடித்தது. உடல் முழுதும் குபீரென்று வியர்வை பொறுத்துப் பொழிந்தது. அவன் கண்களில் மயக்கக் குறிகள் தோன்ற ஆரம்பித்தன. 'ஏன்? இந்தப் பெண்ணைக் காதலித்தோம்?' வீர பத்திரன் கையில் நாம் இன்று மடியவேண்டியதுதான் விதி போலும்! நாம் மடிந்தாலும் பரவாயில்லை. என் ஆசைக் குமுதாவை அப்பாவி என்ன சித்திர வதை செய்வானோ?' என்ற எண்ணங்க ளெல்லாம் அவன் மனதில் ஒரு கணத்திற்குள் தோன்றி மறைந்தன. காமுகர்களுக்கு ஏற்படும் அவஸ்தைகள் அநேகம். கமலநாதன் மெய்ம்மறந்தான். கோழையினுங் கோழையான கமலநாதன் தேகமெல்லாம் பேரச்சத்தால் நடுநடுங்க, கால்தடுமாறிக் கீழே விழுந்தான். அவ்வாறு விழுந்த அவனது சிரம் அங்கு சாத்தப்பட்டிருந்த பெருங் கல்லின் மேல் மோதியது. அதனால் மண்டை பிளந்து இரத்தம் ஆறாக ஓடத் தொடங்கியது. அதுவன்றி, ஆறடி உயரத்தி லிருந்து கற்றரை யில் விழுந்ததால் அவன் தேகத்தின் பல பாகங்களிலுங் காயங்கள் ஏற்பட்டன.

எதிர்பாராத விதமாக, இக்கோரக் காட்சியைக் கண்ட வீரபத்திரன் மனந் திடுக்கிட்டான். அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. அவன் தன்னுள்ளே, 'மதிலினின்றும் விழுந்த இவன் யார்? இவன் ஏன் இங்கு வந்தான்? நம் மனைவி மதிற்புறத்தில் நின்றுகொண் டிருந்ததேன்? நம் மனைவிக்கும் இவனுக்கும் கள்ள நட்பு ஏதாகிலும் இருந் திருக்குமா? அப்படித் தான் இருக்க வேண்டும். அவ்வித மில்லாவிட்டால் இவன் இங்கு வருதற்குக் காரண மில்லையே! மேலும் நாம் கேட்ட கேள்விக்கு நம் மனைவி பதில் சொல் லாது விழிக்கின்றாள். நாம் இல்லாத சமயம் பார்த்து நம் மனைவியிடம் கள்ள நட்பு கொண்டிருந்த இவன் யாரா யிருப்பான்?' என்று வினவிக் கொண்டே கமலநாதன் விழுந்து துடித்துக்கொண் டிருக்கும் இடத்துக்குச் சென்று கீழே குனிந்து உற்றுப் பார்த்தான்.

கமலநாதன் தேகத்தில் துடிதுடிப்பைத் தவிர, அவன் உணர்வுட னிருப்பதாகக் காணப்படவில்லை. அவன் தலையி லிருந்தும் உடம்பின் பல பாகங்களி லிருந்தும் இரத்தம் வெள்ளம்போல் பெருகிக்கொண் டிருந்தது.

கமலநாதன் குப்புற விழுந்ததனால் அவன் முகம் கல்லின்மீது பட்டு நசுங்கிப் போய் உருத் தெரியாது போயிற்று. அவன் அணிந்திருந்த உடைகளிலிருந்து அவன் தகுதி வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதை மட்டும் வீரபத்திரன் அறிந்து கொண்டான். போலீஸ் இலாகாவி லிருந்து பல கொள்ளை கொலை வழக்குகளை யெல்லாம் பார்த்து மன உரம் பெற்ற வீரபத்திரன் இக்கோரக் காட்சியைக் கண்டு உண்மையிலேயே அச்சங் கொண்டான். அவனது தைரிய முள்ள மனதும் 'கிடுகிடு' என்று ஆடி விட்டது. போலீஸ் உத்தியோகத்தில் அவன் செய்த மோசச் செய்கைகள், துரோகங்கள், வஞ்சனைகள், சூழ்ச்சிகள், பாவ காரியங்கள் எல்லாம் அவன் மனக் கண்முன் தோன்றி அவனை உயிரோடு வதைக்க ஆரம்பித்தன. இந்த பாப காரியங்க ளெல்லாம் கமலநாதனாகவும், குமுதவல்லியாகவும் உருவங்களெடுத்து அவனைப் பழி வாங்குவதாக வீரபத்திரன் நினைத்து நடுநடுங்கினான். கடைசியாக ஆண்டவனை வேண்டிக்கொண்டே அவன் கமலநாதன் அருகில் சென்று, ஏதேனும் சிகிச்சை செய்ய முடியுமா என்று பார்க்க, இரத்தத்தில் தோய்ந்திருந்த அவனைத் தூக்க முயற்சிக்கையில், அந்தோ! கமலநாதன் உயிர் அப்போதுதான் உடலைவிட்டு நீங்கிக்கொண்டிருந்தது.



இதைக் கண்டதும் வீரபத்திரன் உன்மத்தங் கொண்டவன்போ லானான். அவன் மூளை கலங்கியது. தானிருக்கு மிடத்தில் எவனோ ஒருவன் விழுந்து இறந்து கிடப்பதைக் காண்பவர்கள் என்ன நினைப்பார்களோ என்றும், இவன் தன் மனைவியின் கள்ள நாயகன் என்று ஊரிலுள்ளார் அறிந்தால் தானே அவனைக் கொன்று விட்டதாகப் பழிதூற்றுவார்க ளென்றும், பின்னர் போலீஸ் இலாகாவி லிருந்து தான் நீக்கப்பட்டுச் சிறைவாசஞ் செய்யும்படி நேருவது நிச்சய மென்றும் வீரபத்திரன் பலவிதமாக எண்ணி மனங் கலங்கினான்.

பலவிதமாக எண்ணமிட்டுச் சிறிது நேரம் அசைவற்று நின்றிருந்த வீரபத்திரன், நடுநடுங்கி ஒரு புறமாக நிற்கும் குமுதவல்லியையும் ஏறிட்டுப் பாராது அவ்விடத்தை விட்டு விரைந்தோடித் தன் அறையில் சென்று உள் தாளிட்டுக் கொண்டான்.

வீரபத்திரன் அவ்விடத்தை விட்டுச் சென்றதும், குமுதவல்லி சிறிது தெளிவடைந்து கமலநாதன் விழுந்து கிடக்குமிடத்துக்குப் போய்க் குனிந்து பார்த்தாள். அவன் பிணமாய்க் கிடப்பதை யப்போதே யறிந்த அவள் தன்னை மறந்து வாய்விட்டு கதறினாள். அப்போதே அவன் வீரபத்திரன் அவ் விடத்தை விட்டுச் சென்றதன் குறிப்பை யறிந்தாள். எனவே, உடனே அவள் வெறி கொண்டவள் போல் அறையை நோக்கியோடிப் பார்க்க, அது தாளிடப்பட்டிருந்தது. ஆகவே அவள் சன்னல் வழியாக உள் நோக்கினாள். ஐயோ! அக் கோரக் காட்சியை என்னென்பது! வீரபத்திரன் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு தொங்கிக்கொண்டிருந்தான்.



தன் கணவனுந் தற்கொலை செய்து கொண்டான் என்பதை யறிந்த குமுதவல்லியின் மனம் எவ்வித நிலையை அடைந்திருக்குமென்பதை எவ்வாறு விவரிப்பது! அவளது நிலையில் ஆசிரியன் இருந்தாலொழிய அதை எப்படி வர்ணிக்க முடியும்? நினைத்தாலே நம் மனங் கரைகிறது. ஐயோ! என்ன செய்வாள் ஏழைப் பெண். திகைப் பூண்டு மிதித்தவள்போல் குமுதவல்லி எங்கோ விரைந்தோடினாள்.

மறுநாள் காலை ஊரெங்கும் பரபரப்பு காணப்பட்டது. ஒவ்வொருவர் முகத்திலும் வியப்புக் குறி தோன்றியது. 'திருவல்லிக்கேணியில் கோர சம்பவம் ஏதோ நிகழ்ந்ததாமே! ஓரிரவில் மூன்று கொலையாமே! யாரோ போலீஸ்காரன் மனைவியை எவனோ வைத்திருந்தானும். அதை நேரில் கணவன் கண்டு கள்ள நாயகனைக் கொன்று விட்டுத் தானுங் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு மாண்டானும். இதைக் கண்டு அந்த பெண்ணும் திருவட்டீஸ்வரன் பேட்டை கோயில் குளத்தில் விழுந்து விட்டாளாம். என்ன அநியாயம். உலகம் எப்படி கெட்டு விட்டது பார்த்தீர்களா!' என்று பலர் பலவாறு பேசிக் கொண்டார்கள். இச்சம்பவம் தினசரி பத்திரிகைகளுக்கு விருந்து அளித்த தென்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

பிறன்மனை நயந்தார் பிழைத்தது முண்டோ! காமுகர் கூட்டம் ஒழிக! காதலர் ஈட்டம் பெருகுக!

ஹிந்துஸ்தானத்தின் விழிச்சி

[இளங்கோவன்]

I

உஷா காலம்.

கண் உறங்கிப்போன கானகம் மீண்டும் கண் விழித்தது.

முனிவர்களும் ரிஷிகளும் நதியை நோக்கிச் சென்றுகொண் டிருந்தனர்.

சிறு இருட்டு. இருள் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்தது. அதன் ஒளியும் சக்தியும் தேய்ந்து மாய்ந்து போகும் தருணம்.

அதோ வெகுதூரத்தில் நீல வானத்தில் நெருப்பு வட்ட மொன்று தோன்றியது.

உலகம் அதன் வருகையால் உயிரும் ஒளியும் பெற்றது.

மெல்லிய பூங்காற்று ஜிலு ஜிலு வென்று வீசிக்கொண் டிருந்தது. பச்சை மரங்கள் களி வெறி கொண்டு பெருநகை புரிந்து ஆடிக் கொண் டிருந்தன.

கோலப் புள்ளினங்கள் தமது இனிய நாதங்களினால் உலகத்தினையே பரவசப்படுத்திக்கொண் டிருந்தன.

முனிவர்களும் ரிஷிகளும் நதியில் மூழ்கி, நீராடி, தங்களது புறவழுக்கைப் போக்கி உடல்களை புநிதப்படுத்திக் கொண்டனர்.

தபோதனர்களுடைய ஆசிரமங்கடோறும் யாக அக்நி கொழுந்துவிட்டு எரிந்துகொண் டிருந்தது. செந்தழல் கானகத்தை ஒரே சிவப்பாக்கியது. வானை நோக்கி ஆக்கிரமித்து எழும் வேள்வித் தீயின் முன்பு ரிஷிகள் தேவகீதங்களை இசைத்துக்கொண் டிருந்தனர். முனிவர்களது மாசற்ற ஹிருதயங்களி னின்றும் எழுந்த 'ஓம் சக்தி! 'வந்தே மாதரம்' என்ற மந்திரங்கள் அடவி முழுவதும் ஒலித்தன.

இம் மந்திரங்கள் மகா சக்தியுடையவை. காற்றின் வழியே சென்று ஹிந்துஸ்தானத்திலுள்ள ஒவ்வொரு மக்களது உள்ளத்தையும் இவை தட்டியெழுப்பின.



வேள்வித் தீ சக்தி பெற்று பயங்கரத் த்வனியுடன் எரிந்தது.

இக்காட்சி நமது ஊனக் கண்களுக்குப் பெரு விருந்தாகும்.

அடிமை அகன்றது, வறுமை வதைந்தது, மடமை மறைந்தது, சிறுமை சிதறியது, அசுரத் தன்மை அழிந்தது.

ஆம்! முனிவர்களாலும் ரிஷிகளாலும்தான் ஹிந்துஸ்தானம் ஜீவ சக்தியுடையதா யிருந்தது.

மஹா சக்தி வாய்ந்தது நம் ஹிந்துஸ்தானம்.

அப்படியானல் அச் சக்தி இப்போது எங்கே போய்விட்டது? முனிவர்களும் ரிஷிகளும் இப்போது எங்கே போனர்கள்? மாய்ந்து விட்டார்களா? மறைந்து விட்டார்களா? அல்லது அவர்கள் பூண்டே அற்று விட்டதா?

ஆமடா ஆம்! சக்தி செத்துப் போய் விட்டது. ஓரிரண்டு பேர்கள் தவிர ஏனையோர் மாய்ந்து போயினர். எஞ்சி நிற்கும் ரிஷிகளும் அதர்மத்தைக் கண்டு அஞ்சி நடுங்கி எங்கோ மறைந்து போயினர்.

முனிவர்களும், ரிஷிகளும், தபோதனர்களும் ஹிந்துஸ்தானத்தில் மிக மிகக் குறைந்து போயினர். இவர்களை எங்கோ ஓரிடத்தில் தான் பரிசுத்தவான்கள் காண முடிகிறது.

வேள்வித் தீ—ஹிந்துஸ்தானத்தின் ஜீவ அக்நி அணைந்து விட்டது.

இவர்கள் குறைந்ததால் என்ன கெட்டு விட்டது? வேள்வித் தீ அணைந்ததால் என்ன முழுகி விட்டது?

தர்மம் கெட்டு விட்டது. சக்தி முழுகி விட்டது.

ஹிந்துஸ்தானத்தின் மகத்தான ஜீவசக்தி தூள் தூளாய்ப், பொடிப் பொடியாய்ச் சிதறிப் போய் விட்டது.

வந்தேமாதரம்.

நகைச்சுவை

ஒரு பட்டிக்காட்டு மூடன் நகரத்திற்கு வந்திருந்தான். அவன் ஒரு சமயம் ஒரு நகரவாசத்தானைச் சந்தித்துப் பேசிக்கொண்டே இருக்கையில் ஒரு எருமைக் கூட்டம் அவ்வழியே போயிற்று.

பட்டிக்காட்டான் நகரவாசத்தானை நோக்கி, ‘இதென்ன? எருமைகள் இவ்வளவு சிறுசா இருக்குது? எங்க ஊர்லே இத்தனை எருமையுஞ் சேர்த்தா ஒரு எருமையாச்சுதே’ என்றான்.



சிறிது நேரத்திற் கெல்லாம் சிறிய நாய்க் குட்டி யொன்று ஓடிக்கொண் டிருந்தது. நகரவாசத்தான் அதைப் பட்டிக்காட்டானுக்குச் சுட்டிக் காட்டிச் சொல்கிறான்:—இது எங்களூர் வெட்டுக் கிளி! நீளமாய் வளர்ந்து தரையில் ஓடுகின்றது பார். பட்டிக்காட்டான் ஆ! வென்று வாயைப் பிளந்த வண்ணமாய் அதைப் பார்த்துக்கொண் டிருந்தான். நகரவாசி கம்பி நீட்டினான்.

* * *

எஜமானன்:—உன்னைப்பற்றி நினைக்கும்போது எனக்கு ஆச்சரியமுண்டாகிறது. பொய்ப்பேசும்பையன்களை எஜமானர்கள் எப்படி நடத்துகிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா?

வேலைக்காரச் சிறுவன்:—நன்றாய்த் தெரியும் சார்! பெரியவனானால் என்னை வெளியூர் டிராவலிங் ஏஜண்டாக ஏற்படுத்தி மரியாதையாக நடத்துவார்கள் சார்!

* * *

அஹமத் பயில்வான் ஒரு நாள் அவசா அவசாமாகப் பள்ளிக் கூட உபாத்தியாயரிடம் வந்து, 'சார்! நேற்று நீங்க நம்ப பையனே அடிச்சான்...........'



பயில்வானைக் கண்டதும் உபாத்தியாயர் நடுநடுங்கி, வாய் குழற, 'ஐயா, மன்னிக்க.........தெரியா.........நான்'

பயில்வான்:—சைத்தான் பையனே நல்லா உதையுங்கசார். தெரியாமே சேஞ் சேனு சைத்தான் சொல்ருன்—மூஞ்சி மேலேயே உதையுங்கோ. மன்னிக்கவே வேணும் சார்! நம்பளாலேயே பையனே உதைக்க முடியல்யே, நீங்க எப்படி இந்த சைத்தானே உதைச்சானு கேட்கவே வந்தேன்.

உபாத்தியாயர் பெருமூச்சு ஒன்றுவிட்டு கவலே நீங்கிஞர்.

* * *

வீரப்பனும் அவனது மனைவி வீராயியும் சண்டையிட்டுக் கொண்டே ஒரு போலீஸ்காரனிடம் சென்று முறையிட்டார்கள். போலீஸ்காரன் 'நீ இவனை அரெஸ்ட் செய்யச் சொல்லுகிருயா?' என்று வீராயியை நோக்கிக் கேட்டான்.

வீராயி:—அரெஸ்டு செய்ய வேண்டாம்! கொஞ்சம் பயங் காட்டுங்கோ. அதுவே போதும்.

போலீஸ்:—என்ன, என்னைப் பிசாசாக நினைத்துக்கொண் டாயா, பயங்காட்ட!

* * *



தாய்:—டே பையா! இதென்னடா? தங்கையின் பொம்மைகளை யெல்லாம் இப்படி இறைத்து வைத் திருக்கிருய்?

பையன்:—இல்லேம்மா! நான் மோட்டார் விட்ரேனெல்லோ! இவர்க ளெல்லாம் நடந்து போகும் மனுஷா ளம்மா.

* * *

ஓட்டலில் சாப்பிட்டவர்:—ஐயா, பணம் ஜோபியில் இருப்தாக எண்ணி உமது ஓட்டலில் சாப்பிட்டு விட்டேன். உண்மையில் பணம் கொண்டு வர மறந்து விட்டேன். மன்னிக்கவும். அடுத்த தரம் வரும்போது பாக்கித் தொகையைக் கொடுத்து விடுகிறேன்.



ஓட்டல்காரர்:—பரவாயில்லை. அப்படியே செய்யும். ஆனால் உமது பேரை மாத்திரம் வெளிச் சுவற்றில் எழுதி வைக்கிறேன்.

ஓ. சா:—ஐயோ, எல்லோரும் அதைப் படிப்பார்களே.

ஓட்டல்காரர்:—'அப்படிக் கொன்றுமில்லை. உமது அங்க வஸ்திரம்தான் அதன்மேல் தொங்க விடப்பட் டிருக்குமே!'

* * *

' தங்கள் பெண்ணுக்கு ஹார்மோனியம் கற்றுக் கொடுத்தீர்களே, பணச் செலவு ஆகவில்லையா ?'



'பண நஷ்டம் சிறிதுமில்லை'.

' எப்படி ?'

' அண்டை வீட்டார், தமது இடத்தைக் காலி செய்துகொண்டு போய் விட்டனர். அதைப் பாதி விலைக்கு வாங்கி விட்டேன்.'

* * *

சரசா:—காதலா! என்னை நீ மனைவியாக அடைய முடியாது. என்னைப்பற்றி அடியோடு இனி மறந்துவிடு.

சந்திரன்:—அன்பே! என்னால் எப்படி மறக்கமுடியும். சிறு வயதிலிருந்தே பள்ளிக்கூடத்தில் ஞாபக சக்திக்காக வெகுமதி பெற்றவனாயிற்றே நான்! இப்போது தெரிகிறதா !

வெளி விகடம்



பிச்சைக்காரன் :—சாமி ! ஒரு காலணு கொடுத்தால் உங்க பேரைச் சொல்லி எதனு வாங்கி சாப்பிடுவேன்.

தனவந்தன் :—நான் காலணு கொடுத்ததும் போய்விடப் போகிருய். நீ எப்படி என் பெயரைச் சொல்ல முடியும்.

* * *

கோபாலன்:—நீ பிடிக்கிற காகாவை யெல்லாம் என்ன செய்கிருய் ?

தனபாலன்:—நான் வேடன் என்று நினைத்துக்கொண்டாயா என்ன ?

கோபாலன்:—இல்லே. நீ எங்கே போனுலும் காகா பிடிக்கிருய் என்று யார் பார்த்தாலும் சொல்கிருர்களே. அதனுல் கேட்டேன்.

* * *

மனேவி:—நான் அணிந்திருக்கும் ...டு சேலே என்னே அழகுறச் செய் ...கா?

கணவன்:—நீ அணிந் திருக்கும் ... சேலேயை ஷாப்பி லிருக்கும் ...பொம்மைக்கு அணிந்தால் மிக ...ிருக்கும்.

மே. ஜானகிராமன்

'ஆனந்த விகடன்' வெளியிட்ட படத்திலிருந்து குஸ்தி போடுபவர்களும் 'கிளவ்ஸ்' அணிந்து கொள்ளலாமென்று தெரிகிறது. இது 'விகடனது' புதுமாதிரி முறைகளில் ஒன்றுபோலும்.

—'மகதன்'

* * *

வாயாடி விருந்தாளி :—இந்தக் கடியாரம் வெகு விநோதமாகத் தோன்றுகிறது.

விருந்திடுவோன் : — ஆதலால் தான் இதற்கு 'விருந்தாளி' எனப் பெயர் வைத்திருக்கிறோம்.

வா. வி:—என், அவ்வாறு ?

விருந்திடுவோன்:—அது போவதில்லை.

* * *

ஒரு நாள் சிறுவன் இராமனுக்கு வயிற்றுவலி கண்டது. 'வயிற்றில் ஏதாவது போட்டு அடைத்தால்தானே. வயிறு காலியா யிருக்கிறது. அதனால் வலிக்கிறது' என்றாள் அவனது தாய்.

ஒரு நாள் இராமனது தகப்பனார் 'தலை வலிக்கிறது' என்றார். 'தலை காலியா யிருக்கிறது. ஏதாவது போட்டு அடைத்தால்தானே' என்றான் ராமன்.

—டி. தே

பெண்டாட்டி பூஜை

[காதலன்]

உள்ளத்திலுண்டாகும் உண்மையான உருக்கத்தோடும் மனப்பூர்வமாகவும் நடந்துவரும் பெரிய பூஜையானது தற்காலம் யாதெனில் பெண்டாட்டி பூஜையே என்பது என் அபிப்பிராயம். இவ்விஷயத்தில் அபிப்பிராய பேதமிருக்கலாம். ஆனுல் அந்த அபிப்பிராய பேதமுள்ளவர்களே தங்கள் வீட்டில் உள்ளங் கவரும் அக் கள்ளத் தேவதைகளைப் பார்த்ததும் அவ்வபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு விடுவார்களென்பது திண்ணம். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றது பள்ளிக்கூடத்தோடு சரி. வயதாக ஆக பையன் வளர்ந்து அதை மறந்து 'பெண்டாட்டி தெய்வமே பெரிய தெய்வம்' என்ற உண்மை விளங்கப் பெற்று 'கலியாணம்' என்ற சடங்கைச் செய்து பெண்டாட்டி என்னும் தெய்வத்தைப் பெற்றுப் பூசிக்கத் தொடங்குகிருன். அன்று முதல்தான் அவனிருக்கும் வீடு அவனுக்கு ஒரு கோயிலாக விளங்குகிறது. 'பெண்டாட்டி இல்லாத வீடு பாழே பாழ்' என்று எண்ணுகிருன். ஔவையும் 'பாழே மடக்கொடி ...ல்லா மனை' என்ருரல்லவா!

நான் கவனித்த மட்டில் இக்காலத்தில் சிரத்தையோடும் உள் ...ன்போடும் உலகெங்கும் செய்து வரும் இப் பூஜையை நடத்த, ...டா! என்ன சிரமங்கள்! என்ன உழைப்பு! என்ன கண் விழிப்பு! ...ன தியாகம்! இப்பூஜையில் செய்யும் நைவேத்தியத்தில் வைக்கப் ... அல்வாக்களும், பலகாரங்களும், பழ ஆகாரங்களும் எத்தனை ...சு, என்ன சொகுசு! இத் தேவதைக் களிக்கும் காணிக்கை ...கோ வகையில்லை; அளவில்லை. துட்டும், ரூபாயும், பவுனும், ...டும், நகைகளும், சேலைகளும் என்று எத்தனையோ மாதிரியாகப் ... வந்து உண்டியலில் விழும். 'தானம் தருமம் செய்தாலும் ...கைச் செலுத்தினுலும் வலது கை செய்வதை இடது கை ...படி அவ்வளவு அந்தரங்கமாகச் செய்ய வேண்டும்' என்பது ...ர் வாக்கு. இப்பூஜையில்தான் அவ்வாக்கு அநுஷ்டிக்கப்

படுகிறது. பெண்டாட்டித் தெய்வத்துக்குக் கொடுக்கும் காணிக்கை தான் மிக ரகஸியமாகவும் ஆடம்பரமின்றியும் அளிக்கப்படுகிறது.

இப்பூஜை செய்வோரே உலகின் பரம பக்தர்கள். இவர்களுக்குத்தான் உலகத்து மந்திரங்களில் மிகப் பெரியதான 'தலையணை மந்திரம்' உபதேசிக்கப்படுகிறது. எப்போதும் தெய்வச் சிந்தனையே உள்ள பக்தர் மகான்களில் 'பெண்டாட்டி, பெண்டாட்டி, பெண்டாட்டி' என்று சிந்தனை செய்து பிரகாசிக்கும் மகான்கள்தான் உலகில் அதிகம். இவர்கள் பக்தி ஆஹா! எவ்வளவு பெரியது; வலியது; தீவிரமானது! இவர்கள் உலகில் எந்த அழகான பொருளைக் கண்டாலும் அதைத் தங்கள் தெய்வத்திற்கு அர்ப்பணம் செய்ய விரும்பி வருந்தி உழைக்கிறார்கள். வேறெந்த தேவதைக்கும் மனதில் இடங் கொடுக்காமல் உள்ளத்தில் பெண்டாட்டி தேவதையை மாத்திரம் சிந்திப்பதால் இவர்கள் அனன்ய பக்தர்கள். இப்பேர்ப்பட்ட பக்தனுடைய பூசையை எற்று அத்தேவதை ஒரு சிறு புன்முறுவல் பூத்தால் போதும், அல்லது நெஞ்சை யள்ளும் கடைக்கண் நோக்கு ஒன்று நோக்கினால் போதும், அல்லது மயிர்க்கூச்சல் எழும்படி அப்படி ஒரு தொட்டு தொட்டால் போதும்! இப் பக்தன் தன் உலகக் கவலைகளையும் துன்பங்களையும் அடியோடு மறந்து ஆனந்த பரவசப்படுகிறான். இவ்வானந்தத்தைப் பெற எத்தனைக் கஷ்டங்களைப் பட்டாலும் தகுதியே என்று தீர்மானித்து விடுகிறான். பெண்ணின் மோக வலை வீச்சின் பெருமையே பெருமை! இம்மட்டோடில்லாது மேன்மேலும் இத் தேவதையின் அருளைப் பெற விழைகிறான் இப்பேர்ப்பட்ட பக்தன். அதற்காக மேன்மேலும் சிரமப்படுகிறான்; உழைக்கிறான்; எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்துவிட்டு அவளுடைய அருளுக்குக் கெஞ்சுகிறான்; மன்றாடுகிறான்; கடைசியில் காலிலும் விழுகிறான். அத் தேவதை தன் மனோபீஷ்டத்தை இவன் நிறைவேற்றியதறிந்து முத்தம் அருளுகிறாள். அதில் எத்தனையோ தினுசு; எவ்வளவோ சொகுசு. பிறகுங்கூட பக்தனின் அதிர்ஷ் வசத்திற் கேற்றபடிக்கும், செய்யும் பூசைக்கேற்றபடிக்கும் அ தேவதைத் தன் தளுக்கினாலும், மினுக்கினாலும், லீலைகளா அவனை ஆனந்தக்கடலில் ஆழ்த்தி விடுகிறாள். 'அடடா! அரைக மாயினும் இவ்வுலகைச் சொர்க்கமாக்கிய இவளன்றோ தெய்வ கண்கண்ட தெய்வம்' என்று பக்தன் கரையற்ற இன்பவெள்ள மிதக்கிறான். அம்மம்ம! அவ்வின்பம் வர்ணிக்க முடியாதது.

ஐரோப்பா அமெரிக்கா முதலிய நாடுகளில் மிகச் சா மாகப் பெண்டாட்டி பூஜை நடந்து வருகிறது. என்றாலும் இங் லிருப்பது போல அங்கே அன்யோன்ய பக்தி அவ்வளவு விளங்கவில்லை. இப் பூஜையைப் பெரியோர்கள் பண்டைக் லிருந்து வற்புறுத்தி யிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

பூஜையில் மண் விழுந்தாலும்கூட பெண்டாட்டி பூஜை தவறுமல் உலகில் நடந்து வருகிறது. மகான்களும் இதைப்பற்றி அடிக்கடி உலகுக்கு ஞாபகப்படுத்தியும், வற்புறுத்தியும், போற்றியும் வருகிறுர்கள். இராமகிருஷ்ண பரம ஹம்ஸரும் தாம் மணந்த மனைவியைப் பூஜித்து வழிகாட்டி யிருக்கிறுரல்லவா! சில நாட்களுக்கு முன் மகாத்மா காந்தி அடிகள்கூட தம் மகன் திரு. தேவதாஸ் காந்தியின் விவாகத்தின்போது பின் வருமாறு ஆசீர்வாதம் செய்ததாகத் தினசரிப் பத்திரிகையில் வாசித்தேன். அதாவது 'தேவதாஸ்! நீ மணந்த லக்ஷ்மியைத் தேவி லக்ஷ்மியைப்போல் கௌரவப்படுத்திக் காப்பாற்று' என்று மொழிந்தாராம். இதைப் படித்ததும் 'நான் எண்ணியது சரியே. பெண்டாட்டி பூஜையை மகாத்மாவே ஆமோதிக்கிறுர். அதைப்பற்றிப் பிரபலமாகப் பத்திரிகைகளில் எழுத வேண்டும்' என்று தீர்மானித்தேன்.

எந்த விதமாகச் செய்தாலும் பரவாயில்லை. இப்பூஜை உலகுக்கு மிக இன்றியமையாதது. இது நடக்காவிடில் குடும்பம் நாசமாய் விடும். குலம் கெட்டுப் போகும். குடி முழுகிப் போகும். ஊரில் சண்டை சச்சரவுகள்தான் பெருகும். அதிகம் சொல்வானேன்? உலகமே பாழ் பாழாகிப் போய் விடும்.

இதில் இன்னெரு பயங்கர பூஜை தினுசுண்டு. அதாவது சில விடங்களில் பெண்டாட்டியாக வந்து அமைந்தவள் குணத்திலும் நடத்தையிலும் வெறும் பேயா யிருக்கக் கண்டு புருஷன் என்னும் பரம பக்தன் தடி, பிரம்பு, உலக்கை, துடப்பம், செருப்பு ஆகியவைகளைக் கொண்டு நல்ல 'பூஜை' கொடுத்துத் தீட்டுவான். நான் எழுத வந்தது இப்பேய்ப் பூஜையை யல்ல. ஆனல் குடும்பத்தைக் காப்பாற்றி வளர்த்து இல்லறத்திற்குத் துணையாகவும், வாழ்க்கைத் துணை நலம் என்று திருவள்ளுவரால் போற்றப்பட்டவளாயு மிருக்கப் பட்ட உண்மையான பெண்டிர்க் காற்றும் பூஜையைத்தான் நான் கழ்ந்திருப்பது.

இக்காலம் பெரிய இமிடேஷன் காலம். ஆகவே பலப்பல ...தபங்கள், பூஜைகள் ஆகியவை வெறும் வேஷத்திற்கே நடக்...றன. அதே போலப் பெண்டாட்டி பூஜையையும் வெறும் ...ஷத்திற்கு அநேகர் அதைச் செய்து வருகிறுர்கள். அப்படிச் ...வதில் இன்பமுமில்லை, விமோசனமுமில்லை. அன்றுட வாழ்வில் ...றதில் பொய், சூது, வாது, வஞ்சனை யிருப்பினும் பெண்டாட்டி ...யிலாவது நேர்மையும், ஒழுங்கும், கண்ணியமும் இருக்க ...டிய தவசிய மல்லவா?

...பண்டாட்டி பூஜை லேசானதல்ல. மிகமிகக் கஷ்டமானது. ...வது தூய உள்ளம் வேண்டும். பெண்டாட்டி தவிர வேறு

பெண்ணைப்பற்றி எண்ணவும் நாடவும் கூடாது. பிற பெண்களை வெறுக்கவும் கூடாது. அப்படி யிருப்போனுடைய பக்தியைத்தான் பெரியோர்கள் 'காதல்' என்று சிறப்பித்திருக்கிறார்கள்.

இந்தப் பூஜையை இடையறாது இயற்றி வர வேண்டும். மேலும் பெண்டாட்டி சிவப்போ, கருப்போ, குட்டையோ, நெட்டையோ, ஒல்லியோ, பருமனோ, மங்கையோ, மடந்தையோ, கிழவியோ, லக்ஷணமோ இல்லையோ, இவைகளைக் கவனிக்காமல் காற்றடித்தாலும் சரி, வெயில் காய்ந்தாலும் சரி, மழை பெய்தாலும் சரி அன்றாடம் தவறாமல் பூஜை நடந்து வர வேண்டும். இப்பூஜையில் ஒரு ரகஸ்ய மிருக்கிறது. அதைக் கவனிப்போம். அதாவது எவன் தான் கொண்ட மனைவியின் மேல் உண்மையான காதல் கொண்டு பூஜித்து வருகிறானோ அவனே தன் பெண்டாட்டியின் உடலைப் போற்றுவான். அவ்வுடல் வளப்பத்தை விரும்பி அதற்கான முறைகளைக் கையாண்டு தன் நடத்தையைத் திருத்திக் கொள்வான். அவளுடைய மனதை எப்போதும் சந்தோஷப்படுத்தியும், கல்வி கேள்விகளால் சிறப்படையச் செய்தும், மனிதப் பிறப்பின் நோக்கத்தை அறிந்து அவள் வாழச் செய்தும் இவன் மகிழ்வான். நாளாவட்டத்தில் இவனுக்கே ஒரு ஞானப் பொலிவு தோன்றும். 'பெண்டாட்டியாக வழிபட்டு வந்த இவள் வெறும் மாமிச உடல் அல்லள்; ஆனால் அவளே பெண் தெய்வம். இப்பெண் தெய்வமே ஈன்றெடுத்த அன்னையாக வந்து இளமையில் காத்துப் பேணினாள். இப்போது வேறுடல் தாங்கிப் பெண்டாட்டியாக வந்து துணையானாள். பின்பு அவள் வயிற்றில் பெண் மக்களாகவும் பரிணமிக்கிறாள்' என்று அவன் உணர்ந்து உலகில் எப்பெண்ணைக் கண்டாலும் தன் நட்ப உணர்வால் பெண்மையை உணர்ந்து மகிழ்வான். பெண்ணின் மேல் அனன்ய பக்தி செய்து சிற்றின்பம் பெற்றதுபோல் கடவுள் மேல், அல்லது அக் கடவுளின் அவதாரமான சத்குருவின் மேல் அனன்ய பக்தி செய்தால் அழியாப் பேரின்பம் கிட்டும் என்னும் தீவிரஞான உணர்ச்சியைப் பெறுவான். அப்போது அவன் வாழ்வு ஒரு சுழ[...] சுழன்று சுயம்பிரகாசமாய்ப் பொலியும். அப்படி யிருக்க உல[...]மெல்லாம் அவனையே புகழ்ந்து போற்று மன்றோ! மனிதனுக்கு இ[...] பேருபகாரம் செய்யும் பெண்மை நிறைந்த பெண்டாட்டி தெய்[...] போற்றி. பெண்டாட்டி பக்தர்கள் நீடூழி வாழ்க. பெண்டா[...] பூஜை பொலிவு பெற்றோங்குக.

(மணாளன் முதுகில் எறி மனைவி தனது சேலையைக் காய
கிருள்.)

ணும்பாள்:—நீங்க பண்ரது எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை.

ந்தர ஐயர்:—நான் தான் உன் காலின் கீழ் அடங்கி இருக்
ா ! இன்னும் என்ன பண்ணணுன்றே. —வம்பன்

இருந்தும் இடைஞ்சல் இறந்தும் சனியன்

[திரு. மு. வே. நல்லசாமி]

'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்' என்னும் பழமொழி, செல்லப்பக் கவுண்டர் விஷயத்தில் பொருந்தி யிருந்தது. மேலப்பட்டி கிராமத்தில் நாற்பது சிறிய வீடுகளும், நான்கு மாடி வீடுகளும் உண்டு. அவ்வூரில் செல்லப்பக் கவுண்டர், கர்ணம் வேலை பார்த்து வந்தார். அவர் மொத்தத்தில் நல்ல மனுஷன். வாய்க்கட்டை போடுகிறவர்களைக் கண்டால், அவர் ராஜ மரியாதை செய்வார். மேல் உத்தியோகஸ்தருடைய கட்டளைக்கு மிகவும் அடங்கி நடக்கும் குணம் அவரிடம் சர்வ சாதாரணம்.

வரி வசூலிப்பதிலும், புறம்போக்கு நில விஷயங்களிலும் அவர் மிகக் கண்டிப்பான மனுஷர். யாருடைய வேலியாவது, சர்க்காரிடத்தில் ஒரு அடி வெளியில் வந்திருந்ததோ, கண்ட பத்தாவது தினம் அந்த நபருக்குச் 'சர்க்காரிடத்தில் வேலி இருப்பதால், ஐம்பது ரூபாய் அபராதம் ஏன் போடக் கூடாது என்பதற்குக் கோர்ட்டில் ஆஜராகித் தெரியப்படுத்திக் கொள்ளவும்' என்பதாக நோட்டீஸ் வருமாறு செய்வார்.

மேலப்பட்டியிலுள்ளவர்கள் கொஞ்சம் பயங்கொள்ளிகள். இந்
நோட்டீசைக் கண்டதும், வேலியை ஒரு முழம் தங்கள் இடத்துக்கு
தள்ளி வைத்துக்கொண்டு, கர்ணம் செல்லப்பக் கவுண்டரிடம் ரூபா
10, 15, பாத காணிக்கை சமர்ப்பித்து சரணாகதி யடைவார்க
பணம் கைக்கு வந்தவுடன், நோட்டீஸ் எவ்விதம் போன தென்
தெரியாது. இந்த நோட்டீஸ், கர்ணம் செல்லப்பக் கவுண்டர் மூல
சார்வாகும். அவர் மூலமே ரத்தாகி விடும். முள்ளை, தைத்த வழி
தானே பிடுங்க வேண்டும்!

செல்லப்பக் கவுண்டருக்கு, இரண்டு மனைவியும், ஒ
குழந்தைகளும் உண்டு. சர்க்காரி லிருந்து சம்பளம் ரூபாய் ஏழு
கிடைக்கிறது. இதைக் கொண்டு பன்னிரண்டு பேர் எப்படி ஜீ
செய்வது? இந்த இலக்ஷணத்தில் தாசில்தார் மாசம் ஒரு
மேலப்பட்டிக்கு வந்து விடுவார். அவர் மாம்ச பக்ஷணி; ஆ

அவர் வரும்போது கிராமத்தார்கள் புள்ளிவரிசைப்படி, ஒவ்வொரு கிடாய் கொடுக்கவேண்டும். சில சமயம் கர்ணம் செல்லப்பக் கவுண்டர், தாசில்தாருக்கு அனுப்புவதாக, கிடாய் பிடிப்பார்; ஆனால் அது, அன்று அவர் வீட்டில்தான் சமையல் ஆகும்.

வருஷா வருஷம் சித்திரை மீ 1உ எல்லா குடிகளும், புள்ளி ஒன்றுக்கு 1 ரூபாய் வீதம் வரி போட்டுக்கொண்டு, கர்ணம் செல்லப்பக் கவுண்டருக்குக் கொடுத்து விட்டால், அவ்வூர் குடிகள் யாதொரு கஷ்டமும் அடையாமல் இருக்கலாம். இல்லாவிட்டால், எடுத்ததற் கெல்லாம் அபராதமும் தண்டனையும் கிடைக்கும்படி செய்து விடுவார். இது அவருடைய நல்ல குணத்தில் ஒன்று.

இந்த இழவுக்குப் பயந்து, இவருடைய வாய்க்கரிசிப் பணத்தை, எவ்வளவு சிரமப்பட்டாவது குடிகள் கொடுத்துத் தீர்த்து விடுவார்கள்; என்றாலும் இந்தப் புண்ணியவான் சாகமாட்டானா? நாம் சிரமந் தீர்ந்து சுகமடைய மாட்டோமா? என்பது அக்கிராம வாசிகள் அனைவருடைய பிரார்த்தனை. என்ன செய்வது? கர்ணம் கெட்டிக்காரர். ஒரு நாசியில் நுழைந்து மறுநாசி வழியே வருகிற பேர்வழி! வயது அறுபது. வயது முதிர முதிர அநுபவமும், பூனை சுருட்டும் முதிர்ந்து கொண்டே வருகிறது. இவ்வாறு காலந்தள்ளா விட்டால் பன்னிரண்டு பேர் கூடின குடும்பம் எப்படி நடக்குமென்று கிராம வாசிகளும் எண்ணவில்லையே! கர்ணம் செல்லப்பக் கவுண்டர், நடக்கிற வருஷம் பங்குனி மாதத்திற்குள் காலராவிலாவது, காய்ச்சலிலாவது செத்துத் தொலைந்தால், அந்தக் கிராமத்துக் கன்னிமாரி அம்மனுக்குக் கோழி அறுப்பதாகவும், கிடாய் வெட்டுவதாகவும் வேண்டிக் கொண்டார்கள் கிராமவாசிகள்.

இந்தச் சங்கதி அந்தக் கர்ணம் காதுக்கும் எப்படியோ எட்டி விட்டது. இருக்கட்டும்! எப்படியானாலும் சரி! இந்த ஊர்ப்பயல்களுக்கு நான் செய்த நன்மை யெல்லாம் வீணாகப் போய்விட்டது. நான் செத்தாலும் ஒரு கை பார்த்து விட்டுதான் சாக வேண்டும்! என்று தம் மனதில் எண்ணிக் கொண்டார்.

உண்மையிலேயே ஒருநாள் இவருக்குச் சுரம் கண்டது. பத்து நாட்கள் விடாமல் அடித்ததால், அனேகமாக மரணம் நான்கைந்து நாளைக்குள் சம்பவிக்கும்போல் தோன்றியது. தாம் செய்த அக்கிரமங்களும் அவருக்குத் தோன்றத்தான் செய்தன. நிரம்பப் புத்திசாலியல்லவா? அவருடைய முதற் சம்சாரத்துடன் பேசி வருஷம் எட்டு ஆகிவிட்டது. அந்த அம்மாள் அவ்வளவு சமர்த்தியுமல்ல. அந்த அம்மாளுக்குப் பின் வந்த இளையதாரம், ஆடெடுத்த கள்ளனுக்கு ஆக்கி இட்ட கள்ளி என்பதுபோ லுள்ளவள். ஆகையால் அந்த அம்மாளைக் கூப்பிட்டு கவுண்டர் சொல்லுகிறார்:—

நான் சாகப்போகிறது நிச்சயம். அனேகமாய் இன்னும் நான்கைந்து தினங்களுக்குள் முடிந்து விடுவேன்போல் தெரிகிறது. ஆகையால் நான் ஒரு கடிதம் எழுதி என் தலையணைக்குள் வைத்திருக்கிறேன். நான் இறந்து விட்டால், இதை உடனே கொண்டுபோய்த் தாசில்தார் எஜமானிடம் கொடுத்துவிடு. என்னைத் தூக்கி அடக்கம் செய்ய அவர் வருவார். நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே' என்றார்.



இதைக் கேட்ட அவர் மனைவி, 'ஐயோ! இதுவும் தலைவிதியா? இப்படி எங்களைக் கைவிட்டுப் போகலாமா?' என்று ஒப்பாரி வைத்தாள். அழுகை சத்தத்தைக் கேட்ட அந்தக் கிராமவாசிகள், எல்லோரும் கர்ணம் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். கர்ணம் பாயும் படுக்கையுமாக, எழுந்திருக்க சக்தியற்றுக் கிடந்தார். கிராமவாசிகளுக்கு மட்டும், உள்ளுக்குள் சந்தோஷமே. இந்தச் சனியன் எப்போது தொலையும் என்று எல்லோருடைய மனதிலும் இருந்தது; ஆனால் வெளிக்கு மட்டும், மிகவும் வருத்த மடைந்தவர்கள் போல் கர்ணம் மனைவியை அழ விடாமல் அமர்த்தினார்கள்.

கர்ணம் செல்லப்பக் கவுண்டர் சொல்லுகிறார்:—அன்புள்ளவர்களே! நீங்கள் எல்லோரும் நல்லவர்கள். நான் துஷ்டனாக இருந்து உங்களுக்குப் பல கெடுதல்களைச் செய்தேன். என்னுடைய வினையை நான் அனுபவிக்க வேண்டும். இங்கேயே துன்பத்தை யடைந்து விட்டால், மறு உலகிலாவது கொஞ்சம் துன்பம் நீங்கும். நீங்கள் எல்லோரும் எனக்குச் செய்ய வேண்டிய உதவி இரண்டு உண்டு. அதாவது நான் இறந்தவுடன் என் பாவம் தீரும் பொருட்டு, என்னுடைய சவத்தை, பாடையில் எடுத்துப் போகாமல், காலில் வைக்கோல் கயற்றால் கட்டி, இந்த ஊரைச்சுற்றி என் சவத்தைக் கீழே போட்டு இழுத்து, அக்கிரமஞ் செய்த கர்ணனுக்கு இத்தான் தண்டனை என்று சொல்லிக் கொண்டு வந்து கடைசியில் சுடுகாட்டில் புதைக்க வேண்டும். இரண்டாவது, நாளையதினம் என் குடும்பத்தைக் காப்பதற்காக, நீங்களெல்லோரும் என்மேல் உள்ள கோபத்தை விட்டு, புள்ளியொன்றுக்கு, பத்து ரூபாய் வீதம் வரிப்போட்டு, சேருகிற ரூபாயை என் மனைவி கையில் கொடுக்க வேண்டும். என் குடும்பக் கவலை தீரும்படி இந்தப் பணத்தை, நான் சாவதற்குள் நாளையே என் கண்முன்னால் பார்த்து விட்டுச் செத்தால், என் ஆத்மா நிம்மதியாயிருக்கும். இதை எவ்விதமும் நிறைவேற்ற வேண்டும் என்றார்.

எல்லோருக்கும் இவன் தொலைந்தால் போதும். பத்து அல்லது பதினைந்து ரூபாய் வேண்டு மானாலும் புள்ளி ஒன்றுக்குச் சேர்த்துக் கொடுப்போ மென்று தோன்றியது. ஆகையால் எல்லோரும் கலந்து யோஜித்து, அப்படியே நாளை பணம் கொண்டுவருவதாய்ச் சொல்லி விட்டுப் போய் மறுநாள் ரூபா 500 கொண்டு வந்து கொடுத்தார்கள். அதைவாங்கி, தம் பெண்சாதியிடம் கொடுத்து விட்டு, அன்பர்களே! நான் வேண்டிக் கொண்டதுபோல் காலில் வைக்கோல் கயிற்றால் கட்டி இழுக்க மறந்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். எல்லோருக்கும் அப்படியேதான் இழுக்க வேண்டு மென்ற பிரியம்; ஆனால் மேலுக்கு அப்படிச் செய்ய சம்மதிக்காதவர்கள் போல், அவ்விதம் செய்ய முடியா தென்றார்கள்.

செல்லப்பக் கவுண்டர் மறுபடியும் நீங்கள் அவசியம் அவ்விதமே செய்யவேண்டும்; இல்லாவிட்டால் என் ஆத்மா மோக்ஷ மடையவே மாட்டாது, என்று கண்ணீரை விட்டார். இந்த நீலிக் கண்ணீரை அறியமாட்டாத அந்த ஊர் ஜனங்கள், அப்படியே செய்வதாய் ஒப்புக் கொண்டார்கள். கதையை அதிகமாக விரிப்பானேன்? ஏழாவது நாள் கர்ணம் செல்லப்பக் கவுண்டர், அவர் உடலை மண்ணில் விட்டு மறைந்தார். அவர் சொல்லுக்கு எதிர்சொல்லாத அவர் மனைவி, அவர் தலையணைக்குள் வைத்திருந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு அதிகாலையிலேயே புறப்பட்டு, ஐந்தாவது மைலி லுள்ள வீணுபுரம் தாசில்தார் வீட்டில் கொண்டு போய்க் கொடுத்தாள்.

அதில் எழுதியிருந்த விஷயம். ம-ா-ா-ஸ்ரீ தாசில்தா ரவர்கள் சமூகத்துக்கு மேலப்பட்டி கர்ணம் செல்லப்பக் கவுண்டர் வணக்கமா யெழுதிக் கொண்ட மனு.

நான் இருபது தினங்களாக சுரத்தால் பீடிக்கப் பட்டு பாயும் படுக்கையுமாய்க் கிடந்தேன். இந்த மனு, தங்கள் கைக்கு வந்த இந்த நேரம், நான் பிணமாய்க் கிடப்பேன். நான் சர்க்காருக்கும், முக்கியமாகத் தங்கள் கட்டளைக்கும் கீழ்ப்படிந்து, என்னுடைய வேலையில் சர்வ ஜாக்கிரதையாய் நடந்துவந்தே னென்பது, ஏழை எழுதிக்கொள்ள வேண்டியதில்லை. நான் கர்ணமாகையால் கிராமத்துச் ஜனங்களிடம் பாரபக்ஷமில்லாமலும், கண்டிப்பாகவும் இருந்து வந்தேன். அதனால் பலதுஷ்டர்களுக்கு என்மேல் பகை யேற்பட்டது. வரி வசூலில் கண்டிப்பாக யிருந்ததால்,

பல திருட்டுப் பேர்வழிகளுக்கு உள்ளுக்குள் எரிச்சலாகவும் இருந்து வந்தது. நான் எப்போது சாவே னென்றும், செத்தால் காலில்

பிரியைக் கட்டி இழுக்க வேண்டு மென்றும், நாளா வட்டத்தில் பேசியும் வந்தார்கள். ஆனல் அப்படி உண்மையாகவே செய்யப் போவதாய் இரண்டு நாளாகப் பலர் சொல்வதாகக் கேள்விப்பட்டேன். நான் சர்க்காருக்குப் பல ஊழியங்கள் செய்திருக்கிறேன். ஆகையால் தர்ம எஜமானவர்கள் கருணை கூர்ந்து உடனே வந்து அந்தத் துஷ்டர்கள் அவ்வாறு செய்தால், அதற்கு தக்க தண்டனை கொடுத்து, என் சவத்தைச் சர்க்காரிலேயே எடுத்து அடக்கம் செய்யக் கேட்டுக் கொள்கிறேன். என் மானத்தையும் காப்பாற்ற வேண்டும்.

இப்படிக்குத் தங்கள் உண்மையுள்ள, ஊழியன்
பரிதாப மரணமடைந்த,
செல்லப்பக் கவுண்டன். கர்ணம்.

இந்த மனுவை வாசித்துப் பார்த்ததும் தாசில்தார் தமது சேவகர்கள் நான்கு பேருடனும், போலீஸ் இன்ஸ்பெக்டர் துரைசிங்கத்துடனும் வந்து சேர்ந்தார்.

இந்தச் சமயம் செல்லப்பக் கவுண்டருடைய சவத்தை, ஊர் ஜனங்கள் எல்லோரும் காலில் கட்டிய வைக்கோல் பிரியுடன் இழுத்துக் கொண்டு வருகிறார்கள். நல்ல சந்திப்பு!

இனி என்ன நடந்திருக்கு மென்பதை வாசகர்களே! யூகித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

'அட எமனே! கடன் கொடு'

[செல்வி. R. S. இராஜலக்ஷ்மி]

விசித்திரபுரி ஜமீன் வீரசேகர முதலியார் நெடு நாட்களாகப் புத்திர பாக்கியம் இல்லாமல் வருந் திக் கொண் டிருந்தார். வருந்துவதோடு அவர் நின்று விட வில்லை. தலைகீழாக நின்றுகொண்டு மூன்று வருடம் மும் மூர்த்திகளைக் குறித்துத் தவஞ் செய்தார்.

தலைகீழாக நின்று.........

தவஞ் செய்ததிற்குக் கை மேல் பலனாக அடுத்த மாதமே அவர் மனைவி விமலாதேவியின் வயிற்றில் கருத் தரித்தது. மாதங்கள் சென்றன. விமலாவும் கரு வுயிர்த்தாள்.

ஆண் குழந்தை. நல்ல அழகான முகம். குழந்தை உருட்டி விட்ட உருளைக் கிழங்கைப் போலிருந்தது. பெற்றோர்கள் அக் குழந்தைக்குப் பலபுத்ரன் என்று பெயரிட்டார்கள்.

பலபுத்ரனுக்குப் பசி யதிகம் போ லிருக்கிறது! பிறந்த இரண்டாம் மாதமே, வீரசேகர முதலியாரை விழுங்கி விட்டான். அதோடு நில்லாமல் மறுமாதம் விமலாதேவியையும் வாயில் போட்டுக் கொண்டான். நல்ல வேளையாய்ப் பசி யடங்கிப் போயிற்று பலபுத்ரனுக்கு! இல்லாவிட்டால் தாய் மாமனான தனசேகர முதலியார் இதுவரையிலும் உயிரோ டிருக்க முடியுமா?

தனசேகர முதலியார் பலபுத்ரனைத் தமது குமாரன் போலவே வளர்த்து வந்தார். 'பையன் தேகத்தில் சதையும், நரம்பும், ரத்தமும், இருப்பதாகத் தெரிகிறது; ஆனால் மண்டையில், களி மண்ணும், சாக்கடை நீரும், இரும்புக் கம்பிகளும் இருப்பதாகவே தெரிகிறது சார்!' என்று பள்ளிக்கூட உபாத்தியாயரான பரமசிவம் பிள்ளை தனசேகர முதலியாரிடம் அடிக்கடி கூறிவந்தாரென்றால், பையனது அறிவைப்பற்றி நான் எழுதியா உங்களுக்குத் தெரிய வேண்டும்?

பலபுத்ரன் படிப்பில் பாஸ் செய்வதாகவே நிச்சயிக்கவில்லை. தாசிவீடு, சினிமா, பயர்பாக்ஸ் முதலிய வித்தைகளில் மாத்திரம் பஸ்ட் கிளாசில் பாஸ் செய்து விட்டான். ஆனால் எந்த அப்பாவியும் பலபுத்ரனுக்கு வெகுமதி கொடுக்க முன்வரவில்லை. அதற்கு நாம் என்ன செய்வது !



......மண் பொம்மை என......

பலபுத்ரனுக்கு விவாகமும் நடந்தேறியது. மனைவியை அவன் ஒரு மண் பொம்மையென நினைத்து விளையாடிக் கொண்டிருந்தான். மைனர் விளையாட்டுகளில் அவன் பணமெல்லாம் மறைந்தது. பின்னர்தான் அவனது பரிதாபகரமான நிலை அவனுக்குப் புலனாயிற்று.

'நாம் மும் மூர்த்தியின் அருளால்தானே பிறந்தோம். ஏன் நாமும் மும் மூர்த்திகளை வணங்கிப் பணம் பெறலாகாது? படவாப் பயல்கள், பணம் சும்மா கொடுக்க வேண்டியதில்லை. கடனாய்க் கொடுக்கட்டுமே' என்று நினைத்தான் நமது கதாநாயகன்.

பலபுத்ரன் தவம் செய்ய ஆரம்பித்தான். தவத்தின் மகிமையை நம் போன்றவர்கள் எப்படி வர்ணிப்பது?

இச் சமயத்தில் எமலோக கர்ணம் திருவாளர்—சித்ரபுத்திர சாமி பலபுத்ரன் முன்வந்து நின்றார். பலபுத்ரன் சித்ரபுத்திரனைப் பார்த்து நகைத்து, 'யாரடா நீ! மனிதனாயு மிருக்கிறாய். றெக்கைகளுமிருக்கின்றன. இங்கு ஏன் வந்தாய்! நிஜத்தைச் சொல். நீ பறவை மனிதனா? நிஜத்தைச் சொல்லிவிட வேண்டும். எங்கிட்டே விளையாட்டே உதவாது?' என்றான்.

சித்திரபுத்திரன் இதைக் கேட்டுச் சிரித்து, 'தம்பீ! நான்தான் எமலோகக் கணக்கப் பிள்ளை. என் பெயர் சித்திரபுத்ரன்' என்றான்.

'ஓஹோ! தெரிஞ்சுது' நீ எழுத்தாணி வாலாவா? கூட்டுக் கமிட்டிக்கு எப்போது மரணம்? மஹா கனம் சர்ச்சில் இன்னும் எத்தனை நாள் உயிரோ டிருப்பார்?' என்றான் பலபுத்ரன்.

'கூட்டுக் கமிட்டி மாண்டு போய் அநேக மாதங்களாய் விட்டன. நீ தவத்தி லிருந்ததால் இதெல்லாம் உனக்குத் தெரியவில்லை. சர்ச்சில் சிரஞ்சீவி யாச்சுதேப்பா! அவருக்குச் சாவே கிடையாது' என்றான் சித்திரபுத்திரன்.

'அட பாவி! சர்ச்சிலுக்குச் சாவே கிடையாதா? இருக்கட்டும் அந்த பிரம்மன் பயலை ஒருகை பார்க்கிறேன். சரி, அது கிடக்கட்டும்! நீ இப்போது எங்கே வந்தாய்' என்று கர்ஜித்தான் பலபுத்ரன்.

சித்திரபுத்திரன் சிறிது நடுக்கத்துடனேயே, இல்லை......உம் நீ தவம் செய்ததால்......

'சட்! மடக் கழுதை! உன்னை நோக்கித் தவமிருக்கவில்லை. மும் மூர்த்திகளுக்காகவே நான் தவமிருப்பது. நீ போய் அவர்களைப் பணத்துடன் இங்கு வரச் சொல்' என்றான் பலபுத்ரன்.



இடி இடி என்று.........

சித்திரபுத்திரன் இடி இடியென்று சிரித்தான். 'மும் மூர்த்திகளிடம் இந்த நிமிஷம் மூன்று தம்படிகள் கூட கிடையாது. எல்லாம் பிச்சைக்காரப் பையல்கள். சிவன் ஆதியிலேயே பிச்சைக்காரன். பரதேசி; கஞ்சா அடிக்கும் ஆசாமி. பிரம்மனுக்குக் கோயி லிருந்தாலும் கொஞ்சம் வரும்படி யுண்டு. அதுவுமில்லை. விஷ்ணுவுக்குக் 'கோயிற் பூனைகள்' ஒன்றும் கொடுப்பதில்லை. மேலும் சுயமரியாதைக்காரர்கள் ஏற்பட்டு விஷ்ணுவின் பிராணத்தை வாங்குகிறார்கள். மூவர்கள் உயிரும் இப்பவோ, பின்னயோ, இன்னுஞ் சற்று நேரத்திலோ என்றிருக்கிறது. இப்போது தேவலோகத்தில் பணக்காரன் எமன்தான். பல கொழுத்த பணக்காரர்களையும், சக்ரவர்த்திகளையும்

கொன்று அவர்கள் பணத்தையெல்லாம் கொள்ளையடித்து வைத்திருக்கிருன். எமன் பொது உடைமைக்காரனென்று மேலுக்குச் சொல்லிக் கொள்ளுகிருனே யொழிய, உள்ளுக்குள் பக்காப் பணக்காரன். பெரிய காபிடலிஸ்ட் (Big Capitalist) ஆகையால் எமனிடம் வேண்டுமானல் பணம் கிடைக்கும்' என்று கூறி விட்டுச் சித்திரபுத்ரன் அங்கிருந்து மறைந்தான்.

எமன் பலபுத்திரன் முன் தோன்றினன். அவனைச் சுற்றிக் கிங்கார் காட்சியளித்தனர்.

பலபுத்ரன் எமனைக் கண்டு எழுந்து, 'வாணும்! வாணும்!! அட எமனே! கொஞ்சம் பணம் தேவையாயிருக்கிறது. கடனுகக் கொடு; மிகவும் உபகாரமாயிருக்கும்' என்ருன்.



......நீ சுயமரியாதைக்காரனு......

எமன் சிரித்துக்கொண்டே, பலபுத்ரா! நீ சுயமரியாதைக்காரனு? அல்லது சாதாரண மனிதனு? சுயமரியாதைக் காரனென்ருல் கடன் கொடுக்க முடியாது' என்ருன்.

'நான் சாதாரண மனிதன் தான்? சுயமரியாதைக் காரனென்ருல் என் இப்படி எல்லோரும் பயப்படுகிறீர்கள்?" என்ருன் நமது பலபுத்ரன்.

சுயமரியாதைக் கொள்கைகளுக்காக நாங்கள் பயப்படவில்லை. ஆனல் சுயமரியாதைப் பேர்வழிகளைக் கண்டுதான் பயப்படுகிருேம். அதாவது அற்பத்தனமுள்ள அவ்வவ மரியாதைக்காரர்களைக் கண்டே நாங்கள் பயப்படவேண்டி யிருக்கிறது. கொஞ்ச நாளைக்குமுன் கடன்காரன் வாயில் மண்ணள்ளிப் போட்டார் சுயமரியாதைத் தலைவர்! தம்பீ! இதெல்லாம் உனக்குத் தெரியாது? நீ தவத்தி லிருந்தாய்' என்ருன் எமன்.

நான் சுயமரியாதைக்கார னல்ல—இப்போது என்ன சொல்கிருய்?' என்ருன் பலபுத்ரன்.

எமன், 'ஈடு என்ன தருகிருய்?' என்ருன்.

பலபுத்ரன்:—ஈடா? ஆகாசம், பூமி வேணுமா? எமலோகம் வேணுமா? திருமூர்த்திகள் வேணுமா? என் உடல் வேணுமா?

எமன்:—இதெல்லாம் வேண்டாம். உன்னுடைய உடலை நீயே பத்திரமாக வைத்துக்கொள். உயிரை மாத்திரம் கொடுத்தால் போதும்.

பலபுத்ரன் திடுக்கிட்டவனாய், 'ஐயோ, என் உயிரையா?...உம்... சரி! தருகிறேன். லக்ஷம் ரூபாய் கொடுத்தால் போதும்' என்றான்.

* * *

பலபுத்ரன் இவ்விஷயத்தை அவன் மனைவியிடம் வந்து சொல்லிக்கொண்டிருக்கும் போதே, எமன் அவனிடம் லக்ஷ ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்து, அவனுயிரை எடுத்துச் சென்றான். மனைவியோ மண்ணில் புரண்டு அழுதாள். அந்த லக்ஷ ரூபாய் நோட்டுகளோ பிரிட்டிஷ் கவர்மெண்டில் செல்லவில்லை. 'இது எமபுர நோட்டுகள். வேண்டுமானால் லண்டன் மியூசியத்தில் வைக்கிறோம்' என்று சொல்லி அவைகளையும் அடித்துக்கொண்டு போய்விட்டார்கள் ஆங்கிலேயர்கள். பலபுத்ரனது உடலை அக்னி பகவான் காத்துவருகிறார் என்பதாகக் கேள்வி. பலபுத்திரனது உயிர் எமனது பணத்துக்கு ஈடாக சென்ற சில நாட்களுக்குள் அவனது மனைவியின் உயிரும் வட்டிக்காக எமனிடம் சென்று விட்டது.

* * *

உங்களில் யாருக்காவது கடன் வேண்டுமா? ஓடுங்கள் எமனிடம்! கட்டாயம் கிடைக்கும். ஆனால் சுயமரியாதைக்காரர்கள் ஜம்பம் மாத்திரம் எமனிடம் பலிக்கவே பலிக்காது. தம்படிகூடத் தரமாட்டான் பாவி.



தாசிகளும் தாசிகாந்தர்களும்

ஒரு விநோத நாடகம்

(திரு. ஏ. சோக்கலிங்கப் பிள்ளை)

(பதிப்புரிமை ஆசிரியருடையது)

சென்ற வெளியீட்டின் தொடர்ச்சி

மாதவி:—ஓ பூவு! இங்கே கொண்டுவா ஐயா.

பூ விற்பவன்:—(தானே) இந்த எஜமானனிடத்தில் வேலை செய்வதினால், இந்தத் தேவடியாளுக்கும் பூச் சுமக்கலாயிற்று. இன்னுமென்னென்ன செய்யச் சொல்வானோ? (சிங்கார மஞ்சரியைப் பார்த்து) ஏனம்மா? ஊசிமல்லி, கொடமல்லி, சாதிமல்லி எல்லாமிருக்கின்றன. வாங்கப் போகிறீர்களா?

சிங்கார:—ஏனப்பா இவ்வளவு அவசரப்படுகிறாய்?

பூக்காரன்:—இல்லை அம்மா, பொழுதோடு போனால் ரெண்டு துட்டு அகப்படும். அதற்குத்தான்.

சிங்கார.—ரேக்செண் டிருக்கிறதா?

பூக்காரன்:—இருக்கிறது. இதுவுமிருக்கிறது (என்று காட்டுகிறான்.) அம்மா! விடுதி மொக்குக்கூட அரைப்படி இருக்கிறது. வேணுமா?

சிங்கார: — எடப்பா, எல்லாம் என்னவிலை சொல்லுகிறாய்?

பூக்காரன்:—இந்தப் பூவெல்லாங் கால் வராகன்.

சிங்கார:—இல்லையப்பா, அரை ரூபாய்க்குக் கொடுப்பாயா?

பூக்காரன்:—பத்தணு விருந்தால் பாருங்கள், இல்லா விட்டால் முடியாது. (என்று போகின்றான்.)

சிங்கார:—ஏனப்பா? காலில் வென்னீர் ஊற்றிக் கொண்டவன் போலிருக்கிறாய். சரி, அப்படித்தான் வாங்கிக் கொள் (என்று ஐயருக்குத் தெரியாமல் கால் ரூபாயை அவனுக்குக் கொடுத்து

புஷ்பங்களை வாங்கிக் கொண்டு, கண்ணைக்காட்டி அனுப்பி விட்டாள்.) (ஐயரைப் பார்த்து) சுவாமி! எல்லாம் மொக்குகள், நீங்களும் முடித்துக் கொள்ளுங்கள். (வேலைக்காரியைப் பார்த்து) அடி மாதவி, நீயும் முடித்துக் கொள். இந்த விடுதி மொக்குகளைக் கட்டிலின் மேல் பரப்பிவை. (ஐயரைப் பார்த்து) சுவாமி! உள்ளே வாருங்கள், நீங்கள் எனக்கு முடியுங்கள், நானுங்களுக்கு முடிக்கின்றேன் (என்று உள்ளே போகிறார்கள்.)

அங்கம் 2

காட்சி 1

(இடம்—நாராயண சாஸ்திரியார் வீட்டில் சபை. நாராயண சாஸ்திரியார், சங்கர ராயர், சபாபதி பிள்ளை, கோபால நாயுடு முதலியோர் பேசிக்கொண் டிருக்கிறார்கள்.)

நாராயண:—இராயரவர்களே! இப்போது மணி என்ன வாயிற்று?

சங்கர ராயர்:—நாலே முக்கால்.

நாராயண:—நாம் இன்றைய தினம் சபை சேர்க்கிறோ மென்று கடித மெழுதி தெரிவித்தும், இதுவரையும் ஒருவராகிலும் வந்தவர்களல்ல.

சங்கர:—இனிமேல் வரப் போகிறார்களா? தேவடியாள் ஆட்டக் கச்சேரி, பாட்டுக் கச்சேரி யென்று வாய்ச் சொல்லாகச் சொல்லியனுப்பினாலும், குறித்த நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே வந்து, உட்கார்ந் திருப்பார்கள்.

சபாபதி பிள்ளை:—அப்படியல்ல ஸார், நம்ம இந்துக்களெல்லாரும் 8 மணிக்குப் பிரயோசன மென்றால், பகல் 12 மணிக்குத்தான் வருவார்கள். உரிய காலத்திற்குப் போக வேண்டுமே யென்ற நியமமில்லை. இது நம்மவர்கள் பிறவிக் குணம். யார் வாராமற் போனபோதிலும் விவேக ராஜா முதலானோர் வாரதிருக்க மாட்டார்கள்.

நாராயண:—நம்ம இந்துக்க ளிடத்தில் இந்தப் பெரிய துர்வழக்கந்தான் அதிகமா யிருக்கிறது. இது எப்போது மாறுமோ அது கடவுளுக்குத்தான் தெரியும்.

சங்கர:—அப்படிக் காலந் தப்பி வந்த போதிலுங் கொஞ்சம் நன்று யிருக்கும். வருகிறோமென்று சொல்லி வாராம லிருப்பவர்களைப் பார்க்கினும் மேலல்லவா?

(விவேக ராஜா சிலருடன் பிரவேசிக்கின்றார்.)

நாராயண:—என்ன, விவேக ராஜா அவர்களே! இவ்வித சங்கதிகளில் முக்கியமாகச் சிரம மெடுத்துக் கொள்ளுந் தாங்களே இப்படித் தாமசமாக வந்தால், மற்றவர்கள் யார் சரியான நேரத்திற்கு வருவார்கள்?

விவேக ராஜா:—எனக்கு வீட்டண்டை அவசியமான காரிய மிருந்த படியால், அதனைப் பார்த்துக்கொண் டிருந்து, இங்கே யாராகிலும் வந்தார்களோ வென்று விசாரித்து வரும்படி எங்கள் பையனை இரண்டுதரம் அனுப்பினேன். அவன் திரும்பி வந்து யாரும் இல்லையென்று சொன்னதால் கொஞ்சம் பொறுத்து வந்தேன்.

சங்கர:—இப்போது 5-மணிக்கு மேலாயிற்று. இனி யாரும் வருகிறதாகக் காணப்படவில்லை. நாம் உத்தேசித்த சங்கதியை இங்கிருப்பவர்களுடனே ஆலோசிப்போமா?



விவேக ராஜா:—ஆலோசிக்கலாம். அவர்கள் பக்கம் பேசுவதற்கு வசந்தநாதரும், சுரதாழ்வாரும் வந்திருக்கிறார்கள். மற்றவரும் வரட்டும் பேசலாம்.

வசந்தநாதர்:— யானும், ஆழ்வார் அவர்களும் இங்கு என்ன நடக்கப் போகிறதென்று வேடிக்கை பார்க்கலா மென்றுதான் வந்தோம். நீங்கள் சபையில் பேசப் போகிற விஷயம் என்னமோ சொல்லுங்கள்.

சங்கர:—இங்கே பெரியோர்களா யிருப்பவர்களெல்லோரும் உபேக்ஷை செய்வதால், விபசாரம் தினே தினே விருத்தியாய்க் கொண் டிருக்கின்றது.

வசந்த:—பெரியோர்கள் சும்மா இராமல் தூக்குமாட்டிக் கொள்வார்களா? துட்டிருக்கிறவர்கள் மனம் போனபடி தேவடியாட்களை வைத்துக்கொண்டு சுகப்படுகிறார்கள். அவர்களுடைய துட்டை அவர்கள் பாழ்செய்து கொள்ளுகிறார்களே தவிர, உங்களை யொன்றுங் கொண்டுவரச் சொல்லுகிறதில்லையே ! துட்டிருக்கிறவர்கள் கூத்திமார்களை வைத்துக் கொண்டால், மத்தியில் உமக்கும் எமக்கும் வந்த தென்ன ?

விவேக :—நீங்கள் கொஞ்சம் யோசனையோடு பேசுங்கள். இதாள் பாழாய்ப் போவதைப் பார்த்துச் சும்மா யிருப்பது மாணவ தர்மமாகுமா?

வசந்த:—தர்மமாகாமற் போனால் பூபார மெல்லாம் நீங்கள் தீர்க்கப் போகிறீர்களா ?

விவேக:—தீர்க்க முடிந்தாலும் முடியாமற் போனாலும், சாத்திய மானவரையும் பிரயத்தனஞ் செய்வது நம் மெல்லோருக்குங் கடமை. ஒருவன் நன் னடக்கையி னின்றுங் கெட்டுத் திரிந்து கொண்டிருப் பதை நாம் கண்டும் பேசா திருந்தால், அவர்களைப் பார்த்து நம்மவர் களும் அந்தக் காரியத்தில் பிரவேசித்துக் கெட்டுப் போவார்கள். அந்த நஷ்டத்திற் கெல்லாம் நாமே காரணமாகின்றோம். ஒருவர் செய்யும் கெட்ட காரியம் உமக்குத் தப்பிதமாகத் தோன்றாமற் போனாலும், நாளைக்கு உம்முடைய மகன் பெரியவனாகி உம்முடைய மருமகளைப் பாயும் படுக்கையுமாய் அழும்படி விட்டு, தேவடியாளை வைத்துக்கொண்டு, வீட்டி லிருக்கும் சொத்தை யெல்லாம் அழிப் பானானால், அது தப்பிதமாகுமோ? ஆகாதோ? அது, உங்களுக்குச் செவ்வையாகத் தெரியும்.

வசந்த:—தெரிந்து நாமென்ன செய்யக் கூடும்? தேவடியாட் களையும், குடிசைக்காரிகளையும் விபசாரத்தை விட்டு, விவாகஞ்செய்து கொண்டு பதிவிரதைகளாக விருக்கச் சொன்னால், அவர்கள் விவாகஞ் செய்து கொள்வார்களா? பெண்களையே கட்டுப்படுத்தக் கூடாமை யானால், நாம் புருஷர்களை யெவ்வாறு கட்டுப் படுத்தக் கூடும் ?

விவேக:—நான் சொல்வதைக் கொஞ்சங் கேளுங்கள். இந்தக் காலத்தில், வாலிப ரிடத்திலும் இப்படி விபசார மிருக்கலாமா? எவனானால் ஒருவன் முன் காலத்தில் கூத்தியாரை வைத்துக் கொண் டால், பெரியவர்கள் யாரும் அவனை மரியாதை செய்யாமற் போன தால் பயமுண்டாகி, மற்றவர்கள் நன்னடக்கையோ டிருந்தார்கள். இக்காலத்தில் பெரியோர்கள் பார்த்துச் சந்தோஷித்துச் சும்மா விருப்பதா லல்லவா ஒவ்வொருவனும் யதேச்சையாக மனைவியை விட்டுக் கூத்தியாரை வைத்துக் கொள்ள இட முண்டாகிறது.

சுரதாழ்வார்:—'அவரவர் வினைக்கே அவரவர் வருவார்' என்றபடி, அவனவன் என்னென்ன அனுபவிக்க வேண்டு மென்று அவனவன் தலையி லெழுதியுள்ளதோ, அதுபோல அனுபவித்துச் சாகிறான். நீங்களேன் இது விஷயத்தில் இவ்வளவு சிரத்தை யெடுத் துக் கொள்கிறீர்கள்? நல்லது, தேவடியாட்களை யாரும் வைத்துக் கொள்ளக் கூடா தென்கிற பிரமாண மிருக்கு மானால், உலகத்தில் அவர்களைப் பிரம தேவன் ஏன் பிறப்பித்தான்? அவர்க ளெல்லோரும் விபசாரத்தை விட்டால் அவர்கள் கதி என்னவாகும் ? அவர்கள் வருந்துவதை நாம் பார்த்துக்கொண் டிருப்பது மாத்திரம் மானவ தர்மமாகுமா?

நாராயண:—ஆனால், நமக்காகத்தான் அவர்களைப் பிரமதேவர் படைத்தாரோ? அவர்களைக் காப்பாற்றுவதுதான் மானவ தர்மமோ?

நீர் இப்படிச் சொல்வதைப் பார்க்கிலும், முற்காலத்தில் கோபிகை களின் கற்பைக் கண்ணபிரான் கெடுத்தனர். தாருகாவன முனிவர் களின் பத்தினிமார்களின் கற்பைச் சிவபெருமான் கெடுத்தனர். அவ்விரண்டு கொடுமைகளுஞ் சேர்ந்து, விஷ்ணு ஆலயம், சிவாலய மிவற்றி லுள்ள விஷ்ணு, சிவன் இவர்களால், தாலியாகிய பொட்டுக் கட்டப்பட்டுத் தங்க ளன்புள்ள மனைவியாராக விளங்கும் தேவதாசி வேசிகளுடைய கற்பை மனிதர்கள் தினந்தோறுங் கெடுத்து வரு கிறார்க ளென்று சமாதானஞ் சொல்லுவீராயின், தேவடியாட்கள் வீட்டிற்குப் போகிறவர்க ளெல்லோருக்கும் திருப்தியாயிருக்கும் (இப்புத்தகத்தின் ஆரம்பத்தி லுள்ள பாட்டைப் பார்க்க.)

வசந்த நாதர்:—எல்லோருக்கும் பொது ஸ்திரீகளாக ஏற்பட் டிருக்கும் தேவடியாட்கள் வீட்டிற்குப் போவது பிசகென்று சொல்லுகிறீர்கள். நல்ல திருக்கட்டும்: 'யானை கொழுத்தால் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள்ளு மெ'ன்பது போல, ஆண்பிள்ளை கள் தங்கள் சொந்த குடும்பங்களிலேயே மனத்தாலும், வாக்காலும் எண்ணவும் சொல்லவுங் கூடாத அக்கிரமமான விபசாரங்களைச் செய்து, குடும்பங்களைப் பாழ் செய்கிறார்கள். பெண்டுகளோ சமு சாரிகளென்று பெயரெடுத்துக் கொண்டு, தேவடியாட்களைவிட அதிகமாக சாரத்துவம் செய்கிறார்கள். இவர்களை யெல்லாரம் யார் என்ன செய்கிறார்கள்? குலப்பெண்களையே ஒன்றும் செய்ய முடி யாமற் போனால், ஆண் பிள்ளைகளை மாத்திரம் தேவடியாட்கள் வீட் டிற்குப் போகக் கூடாதென்று கட்டுப்பாடு செய்ய முடியுமா? உலகத் தில் குலப் பெண்கள் எந்தப் புருஷர்களாலேயுங் கெட்டுப் போகா திருக்கும் நிமித்தமல்லவா பிரம்மதேவன் தேவடியாட்களைப் பிறப்பித் திருக்கிறான்.

விவேக:—குடும்பங்களில் ஸ்திரீ புருஷாள் விபசாரஞ் செய்தால், யார் பார்த்துக் கொண்டிருக்கச் சொன்னார்கள்? அப்படிப் பட்டவர் கள் நாலுபேரை வீட்டைவிட்டுத் துரத்தினால் மற்றவர்களுக்குப் புத்தி வந்து கிரமமாக விருப்பார்கள். அப்படிச் செய்யாம லிருக்கிறதி னாற்றான் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் சுயேச்சையாகத் திரி கிறார்கள்.

வசந்த:—இல்லை, இல்லை. குடும்பங்களில் பெண்டுகள் செய்வது இரகசிய கிருத்தியமல்லவா? அதை வெளிக்குக் கொண்டுவந்தால் குடும் பங்கள் முழுகிப் போகும். அந்தக் காரியங்களுக்குட் பட்டாலும் பாவம் வரும். அதனாற்றான், பந்துக்கள் ஒன்றுந் தெரியாதவர்கள் போல் சும்மா யிருக்கின்றார்கள்.

விவேக:—போகட்டும், பகிரங்கமாகத் திரியும் ஆண் பிள்ளைகள் சங்கதியை முன்னே ஆலோசிக்கக் கூடாதா? ஒருவனை இரண்டு பேரை குடும்பத்தி லிருந்து நீக்கினால், மற்றவர்களுக்குப் புத்தி வந்து தேவடியாட்களை விட்டு விடுவார்கள்.

வசந்த:—ஐய! ஆண் பிள்ளைகளுக்கு எவ்வளவுக் தப்பிதமே யல்ல. நீங்கள் சொல்வது வீண்பேச்சு. ஆயினும், நான் உங்களுடன் செவ்வையாய் வாதிக்கமாட்டேன். வருகிறவாரம் எங்கள் பக்கத்தோ ரெல்லோரையு மிட்டுக்கொண்டு வருகிறேன். அப்போது, தேவடி யாட்களை வைத்துக்கொள்வது நல்லதா, கெட்டதா வென்று வாதிப் போம். யார் கெலிப்பதும் தோற்பதுந் தெரியும். இப்போது இருட் டாகிறது. வீட்டிற்குப் போவோம்; சபையைப் பூர்த்தி செய்யுங்கள்.

(எல்லோரும் போகிருர்கள்.)

[தொடரும்]

மிஸ்டர் தடிராமன் ஒரு நாள் மூர்மார்க்கெட்டினுள் புகுந்து ஒரு பழக்கடை யோரமாய்ச் சென்றுகொண் டிருந்தான். அச்சமயம் அப்பழக் கடைக்காரன் ராமனைப் பார்த்து, 'வாங்க சார்! சும்மா வாங்க சார்! என்ன வேணும் சார்? உங்களுக்கு இஷ்டமான பழம் எடுத்துக்குனு போங்க சார்?' என்ருன்.

ராமனும் பதில் பேசாது, நல்ல மாம்பழங்களாக ஒரு டஜன் பொறுக்கி எடுத்துக்கொண்டு காற்ருய்ப் பறக்கலானன்.

* * *

தேச பக்தியுள்ள ஒரு இங்கிலாந்துத் திருடன் தன் நண்பனைப்



பார்த்து:—ஜேம்ஸ்! இது அமெரிக்காவில் செய்யப்பட்ட கார்தான். அதில் சந்தேகமே யில்லை. அப்படியே தள்ளிக்கொண்டு போய் விடலாம்.



தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம் முதலிய பாஷைகளில் வெளி வரும் புத்தகங்களுக்கு மதிப்புரை எழுதப்படும். மதிப்புரைக்கு அனுப்புவோர் ஒவ்வொரு வெளியீட்டிலும் இரண்டிரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டியது மிகமிக அவசியமாகும். அவ்வாறு அனுப்பப்படாத புத்தகங்கள் கவனிக்கப்பட மாட்டா.

ஆசிரியர்.

தமிழ் இலக்கியம் : தற்காலம். ஆசிரியர்: திரு. ஏ.வி. சுப்பிரமணிய ஐயர். அவர்கள் கிடைக்குமிடம்:- சாரதா அண்டு கம்பெனி, திருநெல் வேலி. விலை ரூபா 1—0—0.

பொதுவாக இப்பொழுது வெளி யிடப்படும் தமிழ்ப் புஸ்தகங்களுக் குள்ள எட்டேகால் லக்ஷணம் இதிலும் காணப்படுகிறது. . அந்த அவலக்ஷணம் என்ன வென்றால், புஸ்தகங்களைப் பார்த்ததும் அவைகள் தமிழ்ப் புஸ்த கங்கள் என்று தெரிந்துகொள்ள முடி யாது. என் ? புஸ்தகத்தின் அட்டை யில் நீங்கள் தமிழ் எழுத்தை மருந்துக் கும் காண முடியாது. எல்லாம் ஆங்கி லத்தி லிருக்கும். இது பெரிய மானக் கேடு; பொறுக்க முடியாத பாஷாத் துரோகம். தமிழ் நாட்டில் தற்போ துள்ள ஆசிரியர்களும், வெளியிடுபவர் களும் இக்குற்றத்தை ஒரு பொருட் டாகவே மதிப்பதில்லை. ஆனால் வேறு எம்மொழியிலும் இவ்வாறு சுய மரியா தையை விற்றுவிட்டுப் புஸ்தகம் வெளி யிடுவது கிடையாது. முதன் முதலாக அரசியலில் ஏற்பட்ட அடிமைத்தனம் நாளா வட்டத்தில் நம் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் பரவி நம் உயிர்க் குயிராகிய கலையிலும் பற்றிவிட் டதென்பதற்கு இது ஓர் அறிகுறி. ஆசிரியர் முகவுரையில் பழந்தமிழரின் கலைவுயர்வை வான மளாவப் புகழ்கி றார். ஆனால் புஸ்தகத்தின் அட்டை தற்காலத் தமிழரின் கலை வீழ்ச்சியைப் பற்றி வால்யூம் வால்யூமாகப் பேசு கிறது.

புஸ்தகத்தின் பெயர் அட்டையில் 'Modern Tamil literature' என்று ஆங்கிலத்தில் காணப்படுகிறது. உள்ளே 'தமிழ் இலக்கியம்: தற்காலம்' என்று போட்டிருக்கிறது. இந்த வக்ர மொழி பெயர்ப்பால் ஆசிரியர் முத லில் புஸ்தகத்தின் பெயரை ஆங்கிலத் தில் சிந்தித்து அவ்வாங்கிலப் பெயருக் குத் தக்கவாறு தமிழில் விஷயத்தை எழுதிப், பிறகு பெயரைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார் என்று தெரிகிறது. இது மிகக் கேவ லம். 'தற்காலத் தமிழ் இலக்கியம்' என் று பெயரிட்டிருந்தால் நன்றாயிருக்கும்.

இனி உள்ளே நுழைந்து பார்ப் போம். நூலுக்கு முகவுரையாகச் சேர்க் கப்பட்டிருக்கும் தமிழரின் கலை வளத் தைப் பற்றிய வியாசம் நூலின் முக் கிய பாகமாகவே திகழ்கிறது. தமிழர் களின் கலைவாழ்வு போரில் பிறந்து, காதலில் தவழ்ந்து, சமயத்தில் வளர் ந்து, நிமிர்ந்து கண் கொள்ளாக் காட்சி யாய் நின்று, சுதந்திரம் பறிக்கப்பட்டுச் சமுதாய தர்மம் அழிந்தபோது வீழ்ச்சி யுற்றதைக் கோவையாக ஒரு கதை போல் சுவையுடன் ஆசிரியர் அழகுபெற எடுத்துக் கூறுகிறார். இலக்

கியம், இசை, சிற்பம், நடனம் இவை களில் தமிழர்கள் அடைந் திருந்த மேன்மையை எண்ணுந் தோறும் வருங் காலத்தில் நமக்கு நம்பிக்கை யுண்டாகிறது.

பிறகு ஆங்கில ஆட்சியின் பயனுக நம் நாட்டில் புகுந்த மேனுட்டு நாகரிகத்தின் தன்மைகளைக் கூறி, அதன் கலப்பினுல் தமிழல்லாத வங்காளி, ஹிந்தி, உருது, தெலுங்கு முதலிய பிற மொழிகள் அடைந்துள்ள வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் குறிப்பிடுகிருர். நம் தமிழ் மொழியும் அவைகளைப்போல் வளர்ந்து ஜீவ சக்தியுடன் ஒளிர்வதற்குச் சில அரிய யோசனைகள் அறிவிக்கிருர்.

நவீன நாகரிகத்தாலும் மேனுட்டுக் கலைகளாலும் தமிழரிடம் விளைந்த சக்தியால் எழுந்த கவிகளில் காலஞ் சென்ற சுந்தரம் பிள்ளை, கிருஷ்ணப் பிள்ளை, சுப்பிரமணிய பாரதி ஆகிய மூவரைக் குறிப்பிட்டு அவர்களுடைய கவிதையை ஆராய்ச்சி செய்கிருர். பாரதியை மற்ற இருவரிலும் சிறந்த கவி என்று முடிவுகட்டி அவருடைய கவிதையின் சிறந்த அம்சங்களை எடுத்துச் சொல்கிருர். கடைசியில் 'திருவாளர் தேசிக விநாயகம்பிள்ளை என்பவரும் ஒரு கவி யென்று அவரது நண்பர் தெரிவித்ததாகவும், தாம் அவருடைய பாட்டுக்கள் சிலவற்றைப் படித்ததில் அவைகள் நன்ருயிருப்பதாகவும்' கூறுகிருர். தமிழ் நாட்டில் தற்போது ஒரு சிறந்த கவி யிருப்பதை நாம் ஆசிரியருக்குத் தெரிவிக்க விரும்புகிருேம். இக்கவியின் பெயர் ச. து. சுப்பிரமணிய யோகி. இவரது ஊர் ஈரோடு. இவர் பள்ளியில் படித்துக்கொண் டிருக்கும்போதே இசையும் சுவையும் நிரம்பிய பாட்டுக்கள் பல பாடினுர். இளமையில் இவரது உள்ளத்தையும் உயிரையும் ஒருங்கே கொள்ளை கொண்டவர் பாரதி. பாரதியின் தேசிய கீதங்களை அப்படியே பின்பற்றிப் பல கீதங்கள் இயற்றினுர். அவை 'தேச பக்த கீதங்கள்' என்னும் பெயருடன் புஸ்தகமாக அச்சிடப்பட்டும், வெளியே வந்து விற்பனையாகாமல் கிடக்கின்றன. இவை களையன்றி வேறு சில அழகிய கவிதைகளும் புனைந்திருக்கிருர். இவரது கவிகளிற் சில சமீபத்தில் உலவி இப்போது இறந்துபோன 'பித்தன்' 'புதுமை' என்னும் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. இவரது கவிகள் புஸ்தகங்கள் வாயிலாகவும், பத்திரிகைகளின் வாயிலாகவும் வெளியிடப்படாமையால் அவைகளின் ஏற்றத்தைப் பொது ஜனங்கள் அறியக் கூட வில்லை. இவரது கவிதையைப் படித்து இன்புற்றவர்கள் இவரை ஒரு உண்மைக் கவிஞர் என்று கூறத் தயங்க மாட்டார்கள். சுப்பிரமணிய பாரதியைப் போலவே இவரும் இனிமையாகவும், அழகாகவும் எளிய நடையில் வசனம் எழுதுவதில் மிகவும் சமர்த்தர். இதற்குச் சான்று 'பித்தனி'ல் வெளிவந்துள்ள இவர் எழுதிய 'குமார சம்பவமே'யாகும். இவரைத் தமிழுலகம் ஒரு காலத்தில் தன் முடிமீது வைத்துப் போற்றும் என்பது எமது நம்பிக்கை.

தற்காலத் தமிழ்க் கவிதையை ஆராய்ந்தபிறகு ஆசிரியர் தமிழ் வசனத்தை வளர்க்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்துகிருர். வீராசாமி செட்டியார், பாரதி, வ. வெ. சு. ஐயர் இவர்களின் வசன நூல்களை ஆராய்ந்துவிட்டுத் தமிழ் நாவல்கள், நாடகங்கள், பத்திரிகைகள் இவைகளினுல் தமிழ் வசனம் எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைகிறது என்பதைச் சொல்கிருர். காலஞ் சென்ற மஹேசகுமார சர்மா ஒரு சிறந்த வசன கர்த்தர். அவரை ஆசிரியர் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

மொத்தமாகப் பார்க்குமிடத்து இது தமிழைப்பற்றிப் புதிய முறையில் செய்யப்பட்ட ஒரு சிறந்த ஆராய்ச்சி நூலாகும். இதில் ஆசிரியர் ஏறக்குறைய வெற்றி யடைந்தார் என்றே கூற வேண்டும். படிப்போருக்கு இன்பத்தைத் தரவல்ல எளிய நடையில் எழுதி யிருக்கிறார். இது போல் பல நூல்கள் தமிழில் தோன்றுவதற்கு இது ஒரு நல்ல வழி காட்டியாகும். தமிழும் தமிழ் நாடும் ஒளி பெற்று விளங்க வேண்டு மென்னும் விருப்பங்கொண்ட ஒவ்வொரு உண்மைத் தமிழனும் இதை வாங்கி வாசித்தல் மிகவும் அவசியமாகும்.

அ.

சுப்ரமணிய பாரதியார் அல்லது தமிழ் நாட்டின் தேசீய கவி. ஆசிரியர்: திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள். பதிப்பாசிரியர்:—தேச ஊழியர் திரு. ரா. நாராயண ஸ்வாமி அவர்கள். கிடைக்குமிடம்:—'பாரதி' புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா. விலை ரூபா 1.

பதிப் பாசிரியருக்கும், ஆசிரியருக்கும், இவர்களால் வெளிவரும் புத்தகத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. இவர்களைக்கொண்டே புத்தகத்தை மதிப்பிட்டு விடலாம். பதிப்பாசிரியரும், ஆசிரியரும் கீழ்த் தரமான வாழ்க்கையை நடத்துபவர்களாகவோ, நாட்டின் நலத்திற்கு முட்டுக் கட்டை போடுபவர்களாகவோ, அல்லது நாட்டுப்பொருளைக் கொள்ளையடிப்பவர்களாகவோ இருப்பார்களேயானால், அவர்களைக் கொண்டு வெளிவரும் புத்தகத்தைத் தடையில்லாமல் கிழித்துப் போட்டு விடலாம். ஏனெனில் மனித சமூகத்திற்கு நலன் தரும் விஷயங்களை அப் புத்தகத்தில் நாம் காண முடியாது. இது எமது அபிப்பிராயம்.

இப்புத்தகத்தின் பதிப்பாசிரியர் திரு. ரா. நாராயண ஸ்வாமி அவர்களாவர். தமிழ் நாட்டில் சீரிய முறையில் நடத்தப்படும் சில பத்திரிகைகளுள் ஒன்றான 'பாரதி' பத்திரிகையின் ஆசிரியராவார் நமது நாராயண ஸ்வாமி. திரு. நாராயணஸ்வாமி வாய்ப் பந்தல் வீர ரல்லர்; வெறும் மேடைப் பிரசங்கி யல்லர்; எழுத்துக்கார ரல்லர்; எழுதுவதில் எவ்வளவு வல்லவரோ, அவ்வளவு வல்லவர் தேசத் தொண்டியற்றுவதிலும். தமிழ் நாட்டின் உண்மைத் தேச ஊழியர்களுள் இவர் தலை சிறந்தவர் என்பது எமது நம்பிக்கை. நீண்ட காலமாகத் தேசப் பணிக்கே தமது உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் செலவிட்டு வருகிறார். திரு. நாராயணஸ்வாமி கவியரசர் சுப்ரமணிய பாரதியார்பால் பெருமோஹங் கொண்டவர். இம் மோஹப்பெருக்கு வழிந்தோடுவதை இவரது பத்திரிகையான 'பாரதி' யில் காணலாம். இவரது முயற்சிகளில் காணலாம். 'சுப்ரமண்ய பாரதியார் அல்லது தமிழ் நாட்டின் தேசீய கவி' என்ற இப்புத்தகத்திலும் காணலாம். ஆசிரியர் நீடூழி வாழ்க! இவரது சீரிய முயற்சிகள் சிறந்து மிக் கோங்குக!

பதிப்பாசிரியரைப்போலவே நூலாசிரியரும் பெரிதும் நமது உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர். திரு. சுத்தானந்த பாரதியாரை உண்மைத் தமிழர்கள் மறந்திருக்க முடியாது. திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கட்கு மக்கள் தொண்டே கடவுள் தொண்டு; தமிழ்ப் பற்றே தேசப் பற்று. திரு. சு. பாரதியார் கிரம்பப் படித்தவர்; பெரிய அறிவாளி; கந்தைக் கதர் உடுத்திக்கொண்டு எளிய வாழ்க்கையை நடத்துபவர்; மறைந்து போன 'ஸ்வராஜ்யா' என்ற தமிழ்ப்

பத்திரிகைக்கு ஆசிரியரா யிருந்தவர்; பாரதியாரை அறிந்தவர். மேலும் இவர் ஒரு துறவி. இத்தகைய புண்ய புருஷரான சுத்தானந்த பாரதியாரது பேனா முனையினின்று இப்புத்தகம் வெளிவந்திருக்கின்றது. இந்த உண்மைத் தமிழர் நீடூழி வாழும்படி ஆண்டவன் அருள் செய்யட்டும்! இவரது யோக சக்தியால் தமிழ் நாட்டின் போலிப் பேய்கள் மடியட்டும்! அசுரத் தன்மை அழிந்து தர்மம் ஓங்கி வளரட்டும்!

இனி புத்தகத்தினுள் நுழைந்து பார்ப்போம்.

முன்னுரையும் முகவுரையும் நீங்கலாகப் பதினெட்டு அத்தியாயங்களில் இப்புத்தகம் முடிவுறுகிறது. புத்தகத்தின் ஆரம்பத்தில் 'பாரதியாரது' திருவுருவப்படம் மிளிர்கிறது.

புத்தகத்தின் முன்னுரையில் திரு. சுத்தானந்த பாரதியார்............... 'பாரதியாரது பெருங் காப்பியங்களான கண்ணன் பாட்டும், பாஞ்சாலி சபதமும் இதனில் தனியாக ஆராயப் படுகின்றன' என்று கூறுகிறார். ஆனால் எவ்வித ஆராய்ச்சியையும் கண்ணன் பாட்டிலும், பாஞ்சாலி சபதத்திலும் எம்மால் காண முடியவில்லை. 'என் உள்ளத்தை எப்போதும் பரவசப்படுத்தும் பாரதிக்கே இந் நூன் மாலையைச் சூட்டுகிறேன்' என்று கூறி இப் புத்தகத்தை பாரதியாருக்கே சமர்ப்பணம் செய்த சுத்தானந்த பாரதியார்—'பாரதியாரைப் போற்றி அவரது கவிகளையும் நூல்களையும் நம்போலவே பலர் மனதார விஸ்வசித்து உண்மையான வாழ்க்கை இன்பத்தையடைய முற்படக் கூடுமெனும் அவாவினாலேயே, இதனை எழுத இசைந்தோம்' என்று உள்ளன்புடன் கூறும் ஆசிரியர் இதில் தவறினார் என்று நாம் குறை கூறலாமா?

பின்னர் திரு. ரா. நாராயணஸ்வாமியின் முகவுரை புத்தகத்தையே அலங்கரிக்கின்றது. இவரது முகவுரைக்கு மதிப்புரை கூற வேண்டிய அவசியமே இல்லை. மேனாட்டு ஆசிரியர்களைப்போன்று முகவுரைகளெழுதுவதில் திரு. ரா. நாராயணஸ்வாமி எப்போதுமே வல்லவர்.

இனி நூலை ஆராய்வோம். நூலைச் சுருக்கமாகவே ஆராய்ந்து முடிவு கட்டி விடலாம்.

முதல் அத்தியாயம் முத்தைப் போலவே ஒளி வீசுகின்றது. வெகு அழகாகப் 'புதுமைப் பெண்' வர்ணிக்கப் படுகின்றாள். இது படிப்பவர்களுக்கு ஒரு விருந்தே யாகும்.

2, 3, 4, 6, 9-ஆவது அத்தியாயங்களின் மூலமாக கவியரசர் சுப்ரமண்ய பாரதியாரைப் பற்றித் தமிழர்கள் அநேக புது விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். தேசக்கட்சியின் வீர முரசு 'இந்தியா' என்ற அத்தியாயத்தில் சுப்ரமண்ய பாரதியாரின் ஹாஸ்யச் சுவையையும், அக்காலத்தில் அவர் கோகலே முதலிய நிதானக் கட்சியாருக்குக் கொடுத்த சவுக்கடிகளையும் படிக்கும்போது, நம் மனம் இன்பக் கடலில் ஆழ்ந்து விடுகிறது. அவர் கொடுத்த சவுக்கடியைப் போல் பத்திரிகைகளில் நாளது வரையில் எந்தச் செயற்கை ஹாஸ்யப் புலியும் கொடுக்கவில்லை. பாரதியின் சரித்திரம் எழுதுபவர்களுக்கு இந்த அத்தியாயங்கள் மிகுந்த உதவிசெய்யு மென்பதில் சந்தேகமே யில்லை.

கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் குயிற்பாட்டு இவைகளைத் தவிர ஏனைய அத்தியாயங்கள் ஒருவாறு ஆராயப்பட்டிருக்கின்றன. கண்ணன் பாட்டில், 'நாணிக் கண் புதைத்தல்' என்பதைப்பற்றி இன்னும் சற்று விரிவாக எழுதி யிருக்கலாம். இவைகளில் ஆராய்ச்சி யில்லா விட்டாலும் பொரு

எழகு ஒரு சிறிதும் குறையவில்லை.

பாஞ்சாலி சபதத்தில், 'வான வனப்பையும் சூரியோதயத்தையும் காட்டி வர்ணிக்கும் 50 வரிகளும் இணையற்ற கவிச் சித்திரம். மில்டனின் சூரிய வர்ணனை போன்றுள்ளன' என்று சுத்தானந்த பாரதியார் குறிப்பிடுகின்றார். இந்த 50 வரிகளும் சூரியாஸ்தமயத்தைப் பற்றி வர்ணிக்கின்றனவே ஒழிய சூரியோதயத்தைப் பற்றி வர்ணிக்கவில்லை. அர்ச்சுனன் துரோபதைக்கு மாலைப் போதில், ஒரு பூம்பொழிலில், அவளைத் தன் துடையின் மேல் சாய வைத்துக்கொண்டு, 'மேலைப் போம் பரிதியெழிலை' விளக்குகின்றதாகவே கவிதைகளும் கூறுகின்றன. மேலும், இதைச் சுப்ரமணிய பாரதியார் அவர்களே தமது குறிப்பிலும் எழுதியுள்ளார். இதை ஆசிரியர் ஞாபக மறதியால் விட்டு விட்டார் என்று கூறுகிறோமே ஒழிய, வேண்டுமென்று எழுதி யிருக்கிறாரென்றோ, அல்லது ஆராய்ச்சி யில்லாமல் எழுதி யிருக்கிறாரென்றோ நாம் கூறவில்லை. ஆனால் மில்டனின் கவிச் சித்திரங்களாகிய சூரிய வர்ணனையைப் பாரதியாரது சூரிய வர்ணனை வென்று விட்டது என்று கூறுகிறோம். பாரதியாரைப்போல் சூரியாஸ்தமயத்தை மேனாட்டுக் கவிஞர்களும் சரி, இந்தியக் கவிகளும் சரி வர்ணிக்கவில்லை யென்பதே எமது கருத்து. இதில் மாத்திரம் பலருக்கு அபிப்பிராய பேதமுண்டு என்பதையும் நாம் அறிவோம்.

கடைசியாக ஆசிரியர் வாழ்த்துடன் புத்தகம் முடிவடைகிறது.

இப் புத்தகம் உள்ளத்தை உருக்கும் ஆவேச நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. ஆசிரியர், பாரதியின் மீது தம் உயிரையே சமர்ப்பணம் செய்தவர். இவர் பாரதியாரின் அன்பர். புத்தகம் எழுதிப் புகழ் பெற வேண்டுமென்றோ, அல்லது தமது நடையழகைக் காண்பிக்க வேண்டுமென்றோ விரும்புபவரல்லர் நமது பாரதியார். மனத்தில் எழுந்த தமது உணர்ச்சிகளையே புத்தக வடிவமாக எழுதி யிருக்கிறார்; இதில் ஆராய்ச்சியும் கூடிய வரையில் செய்திருக்கிறார்.

ஆனால் இது முற்றிலும் ஒரு ஆராய்ச்சி நூலல்ல. ஆராய்ச்சிகள் ஆங்காங்கே செய்யப்பட் டிருந்தாலும், பல முக்கியமான இடங்களில் செய்யப்படவில்லை. ஆனால் இப்புத்தகம் பாரதியின் கவிதைகளை அறிந்து கொள்வதற்கும், பாரதியாரது வாழ்க்கையை அறிந்து கொள்வதற்கும் ஒரு திறவு கோலாக விளங்குகின்றது. இது வரப்போகும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு வழிகாட்டி நூல். இதைக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் மலைமலையாகப் பாரதியாரைப் பற்றி எழுதிக் குவிக்கலாம். இத்தகைய பலனையே இதன் ஆசிரியரும் எதிர் பார்க்கின்றார் என்று அவரது எழுத்துக்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும்-பாரதியாரின் மீது பற்றுள்ள ஒவ்வொருவரும்-தேச பக்தர்கள் மீது காதல் கொண்ட ஒவ்வொருவரும் இப் புத்தகத்தை வாங்கத் தவற மாட்டார்களென்பதே எமது திடமான நம்பிக்கை. தமிழ் நாடு இப்புத்தகத்தை ஆதரிக்க முன் வராவிட்டால், அது காட்டிவரும் தேசபக்தி, மொழிப் பற்று முதலியவைக ளெல்லாம் ஏமாற்று நாடகங்கள் என்றே கூறி விடலாம்.

'இ

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

எழுதிய

அனுபவ வைத்திய நூல்

இரண்டு பாகங்களும் உங்களிடம் இருக்கின்றனவா? இல்லையேல் உடனே எழுதி வரவழைத்து வைத்துக் கொள்ளுங்கள். இப் புத்தகங்கள் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல்கள் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூல்களின் உதவியைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூல்களில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலின் இரண்டு பாகங்களையும் வைத்துக் கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலாமென்பது திண்ணம். சொற்ப பிரதிகளே கைவச மிருக்கின்றன. முந்துங்கள்.

முதல் பாகம் விலை ரூபா		1—0—0
இரண்டாம் பாகம்	,,	1—0—0
இரண்டு பாகங்களும் சேர்ந்து	,,	1–12—0

தபால் சார்ஜ் வேறு

காரியஸ்தர் :—

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்து விட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட் டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர் களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மை யெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட் டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள் களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

சிறந்த வரலாறு உயர்ந்த கருத்துகள்

லெனின்

இன்று சோவியத் ரஷ்யா உலகத்திலுள்ள நாடுகளுக்கு ஓர் உதாரணமாகத் திகழ்கின்றதென்றால், அதற்குக் காரணமாக இருந்தவர் லெனின் என்ற பெரியாரே யாவர். பெரியார் லெனின் சுயநலம் சிறிதும் கருதாது ஏழை ரஷ்யர்களைக் கொடுங்கோல் ஆட்சியினின்றும் விடுவிக்கவும், பணத்திமிர் படைத்தவர்கள் செய்துவந்த அட்டூழியங்களை ஒழிக்கவும் முயன்று, அதனால் தாம் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து இறுதியில் தாம் நினைத்ததைச் செய்து முடித்த வரலாறு படிப்போர்க்கு உணர்ச்சியையும் ஊக்கத்தையும் உதவுமென்பதில் ஐயமில்லை. ஏழை மக்களின் துயரம் துடைப்பதற்கெனவே தோன்றி, அதன் பொருட்டே தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்த வெற்றி வீரர் லெனினது வாழ்க்கைச் சரித்திரத்தை அடிமைக் குழியில் வீழ்ந்து வருந்தும் இந்தியர் ஒவ்வொருவரும் கற்றறிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

லெனினது வாழ்க்கை, தோற்றம், செயல், குணம் முதலிய விவரங்கள் அனைத்தையும் இந் நூலில் பரக்கக் காணலாம். அவரது திருவுருவப் படமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. கிளேஸ் காகிதம் 36 பக்கம் விலை அணா 2.

வேண்டுவோர் 2½ அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

இரண சஞ்சீவி

இம்மருந்தை சேத்துப் புண்ணுக்குத் தடவலாம் சொரி சிரங்குகளுக்குப் பூசினால் குணமாகும். முகத்தில் காணும் மோகப் பருவுக்குத் தடவ முக வசீகரத்தைத் தரும்.

ஆராத மேகப்புண், மேகப்படை இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். மூல வியாதிக்கு மேல் பூசினால் மூல இரணங்கள் ஆறிவிடும்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1—0—0.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசி யின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்

புத்திர உற்பத்தியை யளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உப யோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதி கரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையயும் பூர்த்தி

செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய
சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணா அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும். தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

ஆண் தன்மை அடைந்தேன்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கட்கு,

அன்புள்ள ஐயா, தாங்கள் கொடுத்த இன்பசாரம் என்னும் மருந்து என்னை வீர புருஷனுகச் செய்து விட்டதை நோக்க நான் அடைந்த சந்தோஷம் சொல்லுந் தரத்த தன்று.

எனது முதல் மனைவி 10 வருட மிருந்து காலமானுள். இரண்டாவது மனைவியை எனக்கு என் உறவினர்கள் கட்டி வைத்தார்கள். விவாகமானதி லிருந்து என் மனம் அடைந்த துன்பம் அளவிலடங்காது. எனது நண்பர் திண்டுகுறத்தி எதிராஜுலு செட்டியாரால் தங்களிடம் வந்து இன்பசாரம் என்னும் மருந்தை உட்கொண்டதால் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஆனந்தம் கிடைத்தது.

என்னுடைய நாயகிக்குச் சரீரம் உஷ்ணமாயும் நீர் இறங்கும் போது பாதையாயும் இருப்பதாய்த் தெரிகின்றது. அதற்குத் தாங்கள் எண்ணெய் கொடுக்கும்படிக் கோருகிறேன்.

லேட் மோஸஸ் கம்பெனி
கொத்தா கிருஷ்ணசாமி செட்டியார்.

க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு: என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்து கொண்டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கி விட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட் டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமேயில்லை. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சினேகிதர்களுக்குச் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,
7—5—32 கார்ட்டன் வூட்ராப் கம்பெனி, மதராஸ்.

அன்பார்ந்த டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

இதுவரையிலும் 6 புட்டி இன்பசார மாத்திரையை என் மனைவிக்குக் கொடுத்துள்ளேன். அதனுல் நான் எதிர் பார்க்காத வண்ணம்

குணம் கண்டிருக்கிறேன். இரத்த விருத்தியும் நல்ல பசியும் எடுக்கின்றது. என் மனைவி பிழைத்தது ஆச்சரியமே !

வேறொரு பெண்மணிக்கு இதைக் கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு இரத்த மில்லாமல் வெளுத்திருந்த உடம்பு இப்போது இரத்தம் பரவிவிட்டது. இன்னும் இரண்டு புட்டி வி. பி. யில் அனுப்பவும்.

இப்படிக்கு

28—4—33, காஞ்சிபுரம். Dr. T. N. நடராஜன். L. M. P.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

தைலாமிர்தம்



இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலாண உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக் குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் திட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)

சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானுபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினுல் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

எவ்வித படைகளையும் நொடியில் போக்கும் தன்மை வாய்ந்தது. உபயோகிக்கும்போது எரிச்சல் உண்டாகாது. வேஷ்டியில் கரை பிடிக்காது. எத்தனை வருஷமாக இருக்கப்பட்ட இரணமானுலும் போக்கக்கூடியது.

இதனை உபயோகித்தவர்கள் அனைவரும் புகழ்ந்தே பேசுகிறார்கள்.

புட்டி 1-க்கு விலை அணு 4.

இன்னும் சகல நோய்களுக்கும் சிறந்த மருந்துகள் எங்கள் மருத்துவ சாலையில் கிடைக்கும். விவரமான கேட்லாக்குக்கு எழுதவும்.

ஏஜந்து விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

308527
சென்னை-600 008

சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணு, மணியார்டர் கமிஷன் 2 அணு, வி. பிக்குத் தபால் சார்ஜ் ½ அணு, ஆக 5½ அணு சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினால் ரூ. 1-2-0 மட்டுமேயாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத்தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

வியாசம் எழுதுவோர்க்கு

'தமிழர்'சில் வெளியிட வியாசங்கள் அனுப்புவோர் தயவு செய்து பின் வரும் விதிகளைக் கவனித்தல் அவசியமாகும்:—

1. இலகுவான இனிய செந்தமிழ் நடையில் படிக்கப் படிக்க இன்ப மூட்டும், நினைக்க நினைக்க ஆவேச முண்டாக்கும் அரிய சரித்திரங்களும், நெஞ்சை அள்ளும் சிறு கதைகளும், விடா நகைப்பை விளைவிக்கும் விகடத் துணுக்குகளும், உள்ளத்தை உருக்கும் வாழ்க்கை வரலாறுகளும், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், உரிமை வேட்கையும் உண்டாக்கும் உயர்தர வியாசங்களும், சீர்திருத்த விஷயங்களும் அன்போடு அங்கீகரிக்கப்படும்.

2. வியாசம் எழுதுவோர் எளிய இனிய தமிழ் நடையில் இலக்கண வழுவில்லாமல் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக மையினால் எழுதி அனுப்புதல் வேண்டும்.

3. எந்தக் கட்டுரையும் நான்கு அல்லது ஐந்து பக்கத்திற்குள் அடங்கக் கூடியதாக இருப்பதே நலம். இத்தகைய வியாசங்களே முதன்மையாகக் கருதப்படும்.

4. அங்கீகாரமாகாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்பவேண்டுமானாலும், அனுப்பிய கட்டுரைகளைப்பற்றி அபிப்பிராய மறிய வேண்டுமானாலும் அவற்றோடு தபால் தலைகளும் அனுப்ப வேண்டும்.

5. கிடைக்கப்பெறும் கட்டுரைகளைக் கூட்டவும் குறைக்கவும் நிறுத்தவும் ஆசிரியருக்கு அதிகார முண்டு.

கார்டோலின்

ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்

30, 40 வருடங்களாகக் காசநோயால் கஷ்டப்பட்டவர்களை இம் மருந்து காப்பாற்றி இருக்கிறது.

விலை புட்டி 1-க்கு ரூபா 10. விவரமான கேட்லாக்குக்கு எழுதவும்.

சளி இருமல், சுவாச காசம், காச இருமல், மந்தார காசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

விலாசம்:—31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.